விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3397)

# வலம்புரி

## Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 24 ஞாயிற்றுக்கிழமை (07.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 050

# இன்று யாழ்ப்பாணம் வருகிறார் ஹுசைன்

(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் செயிட் அல் ஹுசைன், அரச தரப்பு, எதிர்த் தரப்பு மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதுடன், வட மாகாணத்துக்கும் இன்று விஜயம் செய்யவுள்ளார்.



15 ஆம் பக்கம் பார்க்க....

## சந்திரிகாவுடன் சுஷ்மா சந்திப்பு



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்று சனிக்

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஹுசைனுக்கு எதிராக வீரவன்ஸ ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனின் இலங்கை வருகையை எதிர்த்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு

15 ஆம் பக்கம் பார்க்க....

# பாதிக்கப்பட்டோர் நம்பிக்கையுடன் ஆணையரின் வருகைக்காக காத்திருப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் நேற்று சனிக்கிழமை காலை 8.25 மணியளவில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெளிவிவகார அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கிய இனச் சிறுவர்கள் பூங்கொத்துக்களை கொடுத்து வரவேற்றனர்.

இலங்கையில் எதிர்வரும்

15 ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியா நினைத்தால் தீர்வு - சம்பந்தன்



(கொழும்பு)

இந்தியா நினைத்தால் இலங்கையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என நாங்கள் கூறினோம். இதன்போது இந்திய அரசின் முழுப் பங்களிப்பும் இலங்கைக்கு கிடைக்கும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எம்மிடம் உறுதியளித்தார்.

இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுடனான சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான

15 ஆம் பக்கம் பார்க்க....

## தனித்து இயங்க அனுமதி; கூட்டு எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றில் சுயாதீனமாக இயங்க அனுமதிக்குமாறு கூட்டு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் சுயாதீனமாக இயங்குவதற்கு தமக்கு அனுமதியளிக்குமாறு கூட்டு எதிர்க்கட்சியினர் கோரியதாக அதன் பேச்சாளர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் புதிய கட்சியில் இணைந்துகொள்வது குறித்து தீர்மானிக்காத போதிலும், தொடர்ந்தும் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கப் போவதாக குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் கட்சியொன்றை அமைக்குமாறு பலரும் கோரிக்கை

15 ஆம் பக்கம் பார்க்க....

## நல்லாட்சியை பழித்து தேங்காய் உடைப்பு!

(கொழும்பு)

நல்லாட்சி அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து ஒரு இலட்சம் தேங்காய்களை உடைத்து எதிர்ப்பை வெளியிடும் போராட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு சீனிகம தெவொல் மகா தேவாலயத்தில் நடைபெற்றது என மகிந்த ஆதரவு அணி அறிவித்துள்ளது.

பொது எதிரணி என தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் மகிந்த ஆதரவு அணி உறுப்பின

15 ஆம் பக்கம் பார்க்க....

# சீன அமைச்சரும் இடையில் வந்தார்!

## விரைந்து சென்றார் மங்கள

(கொழும்பு)

நான்கு ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு பீஜிங் திரும்பும் வழியில் நேற்று சனிக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையம் வந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜியை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி பயணம் செய்த விமானம் கொழும்பு கட்டுநாயக்க விமான

16 ஆம் பக்கம் பார்க்க....

## சிறுநீரக மோசடியில் 5 மருத்துவமனைகள்

(கொழும்பு)

ஐந்து தனியார் மருத்துவமனைகள் சட்டவிரோத சிறுநீரக வர்த்தகத்துடன் தொடர்புகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவர் அல்லாதவர்கள் சட்டவிரோத சிறுநீரக வர்த்தகத்துடன் தொடர்புபட்டிருப்பதாக சிறுநீரக வர்த்தகம் தொடர்பில் ஆராயும் விசேட குழுவின் தலைவர் டாக்டர் ஜயசுந்தர பண்டா தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கை - இந்திய உறவு புதிய கட்டத்துக்கு நகர்வு!




## கொழும்பில் தெரிவித்தார் சுஷ்மா

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனான சந்திப்புக்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

இந்த சந்திப்புக்களின் மூலம் இலங்கை, இந்திய நாடுகளுக்கிடையிலான உறவு ஒரு புதிய கட்டத்தினை எட்டும் என்று நான் நம்புகின்றேன்.

இவ்வாறு கொழும்பு பண்டார

15 ஆம் பக்கம் பார்க்க....

## மீன்பிடி அமைச்சரை இந்தியா அழைப்பு

(கொழும்பு)

மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளார். மீனவர் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அவர் புதுடெல்லிக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷமா சுவராஜின் அழைப்பிற்கு அமைய அவர் இவ்வாறு இந்தியா விஜயம் செய்ய உள்ளார். இந்திய விஜயத்திற்கான திகதிகள் இன்னமும் நிர்

15 ஆம் பக்கம் பார்க்க....

# தொலைபேசி உரையாடல்கள் மீண்டும் ஒட்டுக்கேட்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உரையாடல் ஒட்டு கேட்பு நடவடிக்கைகள், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பேரில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச புலனாய்வு சேவை உட்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி செயலகத்தின் தகவல்களை யார் வெளியில் கசிய விடுகின்றனர் என்பதை கண்டறிவதற்காகவே ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் தொலைபேசி ஒட்டுகேட்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் தமது தொலைபேசி உரையாடல்கள் ஒட்டு கேட்கப்படுவதை தடுக்க பலர் வைபர் போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தினர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்களையும் ஒட்டுகேட்குமாறு உத்தரவிட்டுள்ளதாக பேச ப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அங்கம் வகித்த பலர் தற்போது புதிய அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர்.

இவர்களில் யார் தகவல்களை கசிய விடுகின்றனர் என்பதை அறியும் பொறுப்பை ஜனாதிபதி அரச புலனாய்வு சேவைக்கு வழங்கியுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (12)

# 12 இலக்கங்களைக் கொண்டதாக தேசிய அடையாள அட்டை அறிமுகம்

(கொழும்பு)

பன்னிரண்டு இலக்கங்களைக் கொண்ட புதிய தேசிய அடையாள அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

16 வயதை பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரஜைகள் அனைவரும் ஆட்பதிவு திணைக்களத்தில் தம்மை பதிவு செய்து, அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதுவரையில் 9 இலக்கங்களும், ஆங்கில எழுத்தும் கொண்ட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வந்தன.

இந்த அடையாள அட்டைகளில் உள்ள 9 இலக்கங்கள், நான்கு பாகங்களாக பிரிக்கப்படும். இதன்படி முதல் பாகத்தில் உள்ள இரண்டு எண்கள், நபரின் பிறந்த ஆண்டை குறிக்கும்.

இரண்டாம் பாகத்தில் உள்ள 3 இலக்கங்கள் குறித்த நபர் பிறந்த ஆண்டின் ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல், அவரது பிறந்த தினம் வரை யில் உள்ள நாட்க ளின் எண்ணிக்கையை குறிக்கும்.

அத்துடன் மூன்றாம் பாகத்தில் உள்ள 3 இலக்கங்கள் குறித்த நபரின் பால் நிலை குறித்த தகவலை கொண்டிருக்கும்.

எனினும் நேற்று முன்தினம் முதல் 12 இலக்கங்களை கொண்ட புதிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதற்கு ஆங்கில எழுத்து சேர்க்கப்பட மாட்டாது.

பழைய 9 எண்களைக் கொண்ட நடைமுறை பின்பற்றப்படும் போது, 1916ம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும், 2016ம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும் ஒரே அடையாள அட்டை வழங்கப்படும் நிலை காணப்படுகிறது.

இதனை தவிர்ப்பதற்காகவே இந்த 12 இலக்கங்களை கொண்ட அடையாள அட்டைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும், புதிய எண்தொடர் கொண்ட அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளும் வரையில், தற்போதுள்ள அடையாள அட்டை செல்லுபடியாகும் என்றும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (12)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## விற்பனைக்கு

ஒரு வருடம் பாவித்த 300Kg நிறுக்கக் கூடிய எவறெடி எலக்ரோனிக்ஸ் தராசு விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:-0772306390**

(3505)

## 7-ம் ஆண்டு நினைவலைகள்

### அருளானந்தம் அருள்றூபன் (சிறி)



அன்னை மடியில் 09.12.1967 | கர்த்தருக்குள் நித்திரை 07.02.2009

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின்
இருப்பிடமாய் நற்பண்புகளுடன் நல்
வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுடன்
என்றும் வாழ்கின்றோம்


(3522)

தபாற்கந்தோர் அருகாமை,
யோகபுரம்,
மல்லாவி.

தகவல்:
அப்பா, அம்மா, மனைவி
மகன், சகோதரர்கள்

## துயர் பகிர்கின்றோம்

### சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை



காரைநகர் நீலிப்பந்தனை அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தா சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை காலமான செய்தி அறிந்து அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் அனுதாபத்தை தெரிவிப்பதோடு நாங்களும் துயரை பகிர்ந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.


**திருப்பணிச் சபை,**
**நீலிப்பந்தனை, அம்பாள் தேவஸ்தானம்.**

(3528)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை

**காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் இல.231 திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் நீலிப்பந்தனை துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தாவுமாகிய சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை (சித்தப்பா)**



காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் இல.231 திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் நீலிப்பந்தனை துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தாவுமாகிய சித்தப்பா என்று அழைக்கப்படும் சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை அவர்கள் 06.02.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பார்வதி தம்பதியினரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகரான செல்வராணியின் பாசமிகு கணவரும்,

காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னாச்சிப்பிள்ளை (ஆசிரியை), வேலுப்பிள்ளை (முன்னாள் விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), நேசரத்தினம், இராமச்சந்திரன், குணநாயகம்(முன்னாள் முகாமையாளர் காரைநகர் ப.நோ.கூ.சங்கம்), ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற பார்வதி, சரஸ்வதி, இராசம்மா மற்றும் புவனேஸ்வரி, செல்வநாயகி (முன்னாள் பணியாளர் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அருமை மைத்துனரும், பிரகலாதன், பிறேம்குமார் (குமரன், மாவட்ட செயலகம், கிளிநொச்சி), துஸ்யந்தன் (பொறியியலாளர்), அம்பிகை(மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

பூங்கோதை, இராஜரஞ்சினி(ஆசிரியை கிளி/இந்துக் கல்லூரி), சுதர்சினி, சுகந்தன்(பிரதேச செயலகம்-சங்கானை) ஆகியோரின் மாமனாரும், வைஸ்ணவி, அபிசேக், அஸ்வின், சஜிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 07-02-2016 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லமான இல.231 திருநகரில் நடைபெற்று மதியம் 12 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**231,திருநகர்,**
**கிளிநொச்சி.**

(C-3709)

**தகவல் :குடும்பத்தினர்**
**021 228 5985**

## பணிநிலை வேண்டுகை

கிளாக் - கணனி அறிவுடன்
கணனி இயக்குனர் - பெண்கள்
புத்தகம் கட்டுனர் - பெண்கள்
கோட்மெசின் இயக்குனர் - ஆண்

அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

**ஷாம்பவி பதிப்பகம்**
276B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 616 1125.

(3525)

## யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle, UK

(C-3712)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஐயம்பிள்ளை வீரகத்தி



தோற்றம். 1922.07.19 | மறைவு 2015.02.06

அன்புக்கோர் தந்தையாய்
கருணைக்கோர் தெய்வமாய்
பண்புக்கோர் உத்தமனாய்
வாழ்ந்து நயினை நாகபூஷணி அம்மன்
பாதார விந்தங்களை அடைந்த
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

(C-3710)

இல.48, புருடி லேன்,
அரியாலை.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

விளையாட்டுப் பயிற்சியின் போது

# மயங்கி விழுந்த மாணவி மரணம்

இல்லமெய்வல்லுநர் போட்டிக்காக விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவி திடீரென மயக்கமுற்று உயிரிழந்தார்.

இச் சம்பவம் வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் அ.மி.த.க. பாடசாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் வடமராட்சி கிழக்கு அம்பன் குடத்தனையைச் சேர்ந்த யோகலிங்கம் அனோஜா (வயது -13) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று சனிக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலையில் விளையாட்டுப் பயிற்சிகள் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இதேவேளை 100 மீற்றர் தூரம் கொண்ட அஞ்சல் ஓட்டத்தில் மேற்படி மாணவி பங்கு பற்றியபோதே திடீரென ஏற்பட்ட மயக்கம் காரணமாக நிலத்தில் விழுந்துள்ளார்.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவி அதி தீவிர சிகிச்சையின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அன்றையதினம் நள்ளிரவு வேளை உயிரிழந்தார். (இ-5-60)

# ஜப்பானில் எரிமலை வெடிப்பு

ஜப்பானில் நேற்றுக்காலை திடீரென்று வெடித்துச் சிதறிய எரிமலையால் 2 கிலோ மீற்றர் சுற்றுப் பகுதியில் பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் Kyushu தீவில் அமைந்துள்ள Sakurajima எரிமலை திடீரென்று வெடித்துச் சிதறியதில் அதன் குழம்புகள் வழிந்தோடத் தொடங்கியுள்ளன.

எரிமலை வெடித்துச் சிதறிய பகுதியில் மின்னல் வெட்டியதாகவும் கூறப்படுகிறது. மேலும் அதிகப்படியான சாம்பலும் புகை மூட்டத்துடன் காணப்படுகிறது.

இந்நிலையில் எரிமலை வெடித்துள்ள பகுதியில் 2 கிலோ மீற்றர் சுற்றுவட்டப்பகுதியில் பொதுமக்கள் நுழைய வானிலை ஆய்வு மையம் தடை விதித்துள்ளது.

Sakurajima எரிமலை தற்போது மிதமான அளவிலே தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிடும் எரிமலை ஆய்வாளர்கள், இதுவரையில் பாதிப்புகள் குறித்து அதிகாரபூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எரிமலையில் இருந்து வெளியேற்றப்படும் பாறைத்துண்டுகள் 2 கிலோ மீற்றர் சுற்றுப்பகுதியில் விழ வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது. (இ)

# சுதந்திரக்கட்சியின் தலைமையை ஏற்குமாறு மகிந்தவுக்கு அழுத்தம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் உள்ள ஹோட்டலொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கூட்டமொன்றின்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 200 பேர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் பத்தேகம சமித தேரர், மெரில் பெரேரா, ஆனந்த ஹரிஸ்சந்திர, லலந்த குணசேகர உள்ளிட்ட பல மாகாண சபை உறுப்பினர்களும், தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, காமினி லொக்குகே, ரோஹித அபேகுணவர்தன, சிசிர ஜயகொடி, பிரசன்ன ரணவீர, ஜோன்ஸ்டன் பர்னாந்து, சனத் நிஷாந்த, மகிந்த யாப்பா அபேவர்தன போன்ற கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மற்றும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தாய்வானில் பயங்கர நிலநடுக்கம்

## நூற்றுக்கணக்கான மக்கள் சிக்கி தவிப்பு

### 7 சடலங்கள் மீட்பு





தாய்வான் நாட்டில் நேற்றுக் காலை ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் காரணமாக கட்டடங்கள் மற்றும் வீடுகள் குலுங்கின.

தாய்வான் நாட்டில் 6.4 ரிக்டர் என்ற அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் பெரும்பாலான கட்டடங்கள் குலுங்கின.

ஒருசில இடங்களில் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன.

இதனால் நூற்றுக்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக அவசர பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த 1999ஆம் ஆண்டு தாய்வானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## உரிமை கோருமாறு நீதிமன்று அறிவிப்பு

சாவகச்சேரி-நீதவான் நீதிமன்ற வழக்குகளில் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களை உரியவர்கள் உரிமை கோருமாறு நீதவான் நீதிமன்றம் கேட்டுள்ளது.

குறித்த வழக்கிலக்கம் AR/11/16,AR/32/16 என்பவற்றின் ஊடாக பாரப்படுத்தப்பட்டுள்ள NPJD5905, NPGR9101 என்ற இலக்கங்களுடைய மோட்டார் வாகனங்களையே இவ்வாறு உரிமை கோருமாறு கேட்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த வாகனங்களை உரித்துடையவர்கள் விரைவில் உரிமை கோராவிட்டால் வாகனங்கள் ஏலத்தில் விற்று அரசிறையாக்கப்படும் எனவும் நீதிமன்ற பதிவாளர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

## ஹெரோயினுடன் பாகிஸ்தான் பிரஜை கைது

ஹெரோயின் போதைபொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் வெளிநாட்டவர் ஒருவர் கொள்ளுப்பிட்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த வெளிநாட்டவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோகிராம் அளவிலான ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 55 வயதுடைய பாகிஸ்தான் நாட்டு பிரஜையே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## தபால் திணைக்களத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை

தபால் திணைக்களத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக கூட்டு தபால் தொழிலாளர் சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தபால் விநியோக நடவடிக்கைகள் தாமதம் அடைந்துள்ளதாக அவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் குறித்த அதிகாரிகளுக்கு எவ்வளவுதான் அறிவித்த போதிலும் கூட இதுவரை எந்த வொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

சட்டவிரோத சிறுநீரக சிகிச்சை குறித்து

# குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணை செய்யட்டும்

## ராஜித தெரிவிப்பு

சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் ஊடாக விசாரணை செய்யப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை சுகாதார அமைச்சருக்கு கையளிக்கப்பட்ட நிலையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த நிலையில், விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலைகள் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் குற்றப்புலனாய்வு பிரிவினர் சர்வதேச பொலிஸாருடன் இணைந்து விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# பிரிட்டன் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு நிகரான சட்டம் இலங்கையில் அறிமுகம்


பிரிட்டன் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு நிகரான சட்டமொன்றை இலங்கையிலும் அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது நாட்டில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் இரத்து செய்யப்படவுள்ளதாக அரசாங்க உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச்செய்யுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையும் கோரியுள்ளன. பிரிட்டன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய அதிகாரமுண்டு.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் செயற்பாடுகளினால் பிரிட்டன் பயங்கரவாத தடைச் சட்டத்தில் புதிய சரத்துக்கள் சேர்க்கப்பட வேண்டுமென கோரப்பட்டு வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

# நியூசிலாந்தை வென்றது ஆஸி




வோர்னர் - கவாஜா இணையின் அதிரடி ஆரம்பத்தை மிட்சல் மார்ஷ் - ஜோன் ஹாஸ்டி ங்ஸ் இணை பிரமாதமாக முடித்துவைக்க,





நியூசிலாந்து அணிக்கு எதரான 2ஆவது ஒருநாள் போட்டியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணி தொடரை ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் 1:1 என்ற கணக்கில் சமனிலையாக்கியது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுகிறது.

இத்தொடரின் 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று வெலிங்டனில் நடைபெற்றது. நாண யச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி அவ்அணியின் மார்ட்டின் கப் ரில், பிரண்டன் மக்கலம் ஆகியோர் தொட க்க வீரர்களாக களம் இறங்கினர். கபரில் 45 பந்துகளில் 31, மக்கலம் 12 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த வில்லியம்சன் 60, சான்ட்னெர் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்கள் எடுக்க, நியூசிலாந்து அணி நிர்ணயிக்க ப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டு க்கள் இழப்புக்கு 281 ஓட்டங்கள் சேர்த்தது.

282 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி களமிற ங்கியது.

அவ் அணியின்தொடக்க வீரர்களாக கவாஜா, வோர்னர் ஆகியோர் களம் இறங்கினர். இரு வரும் அணிக்கு நல்ல தொடக்கத்தை ஏற் படுத்தி கொடுத்தனர். இந்த ஜோடி முதல் விக் கெட்டுக்கு 16.2 ஓவர்களில் 122 ஓட்டங்கள் குவித்தது. இந்நிலையில் கவாஜா 49 பந்து களில் 7 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.


அடுத்து வந்த ஸ்மித் (2), பெய்லி (0), மக்ஸ்வெல் (6) என அடுத்தடுத்து ஆட்ட மிழக்க,அவுஸ்திரேலியா 22.3 ஓவரில் 144 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தவித்தது. ஐந்தாவது விக்கெட்டுக்கு வோர்ன ருடன் மிட்செல் மார்ஷ் ஜோடி சேர்ந் தார். சதத்தை நெருங்கிய வோர்னர் 98 ஓட்ட ங்களில் துரதிர்ஷ்டவசமாக ஆட்டம் இழந் தார். ஆனால், மிட்செல் மார்ஷ் உடன் வேகப்பந்து வீச்சாளர் ஹாஸ்டிங்ஸ் ஜோடி சேர்ந்து அணியை வெற்றி பெற வைத்தார்.

மார்ஷ் ஆட்டமிழக்காமல் 72 பந்துகளில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 69, ஹாஸ்டிங்ஸ் 47 பந்துகளில் 5 பவுண்டரி கள், ஒரு சிக்ஸருடன் 48 ஓட்டங்களும் எடு க்க, அவுஸ்திரேலியா 46.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 283 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட் டிகள் கொண்ட ஒருநாள் தொடரை ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் தற்போது 1:1 என அவுஸ்திரேலியா சமன் செய்துள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி போட்டி வரும் 8-ஆம் திகதி ஹமில்டனில் நடைபெற இருக்கிறது. இதில் வெற்றி பெறும் அணி தொடரை கைப் பற்றும். (க)

## ஆரம்பமானது பாகிஸ்தான் சுப்பர் லீக் மொகமட் அமீர் ஹட்ரிக் விக்கெட்




பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெரிய போரா ட்டத்துக்குப் பிறகு தங்களது பாகிஸ்தான் சுப் பர் லீக் தொடரை தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2-வது லீக் போட்டியில் கராச்சி கிங்ஸ்- லாகூர் குவா லண்டர்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கராச்சி அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி லாகூர் அணி முதலில் துடுப்பெடுத் தாடியது.

லாகூர் அணியில் ஹெய்ல் இடம்பெற்றி ருந்தார். இவர் 4 பந்துகளில் ஒரு பவுண்டரியு டன் 6 ஓட்டங்கள் எடுத்து சோயிப் மாலிக் பந்தில் ஆட்டம் இழந்தார். அதன்பின் வந்த வர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க 18ஆவது ஓவரை மொகமட் அமீர் வீசினார்.

இந்த ஓவரின் 2ஆவது பந்தில் வெயின் பிராவோ ஆட்டமிழந்தார். 3ஆவது பந்தில் சொகைப் கான் ஓட்டமெதுவும் எடுக்காமல் முதல் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த கூப்பர் முதல் பந்திலேயே எல்பிடபிள்யூ ஆனார். இதனால் அமீர் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தினார். இதன்மூலம் பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் முதல் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை பெற்றார்.

இவரது பந்து வீச்சால் லாகூர் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 125 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. அடுத்து களம் இறங்கிய கராச்சி அணி 15.5 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில் அபார வெற்றி பெற்றது. அந்த அணியின் சிம்மன்ஸ் ஆட்டமிழக்காமல் 62, சஹிப் அல் ஹசன் 35 பந்துகளில் 51 ஓட்டங்களும் எடுத்தனர் (க)


## வீடு வாடகைக்கு உண்டு

வேலணை மத்திய கல்லூரிக்கு அண்மையில் 5 அறைகள், வர வேற்பறை, சமையல் அறை என் பவற்றுடன் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. (இ)

தொடர்பு:-0777609922


## மரண அறிவித்தல்

### திருமதி வைத்திலிங்கம் நேசரத்தினம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் நேசரத்தினம் நேற்று (06.02.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய நாகலிங்கம்-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்ற இராசரத்தினம், அன்னபூரணம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற சந்திரலீலா மற்றும் இந்திராதேவி(பிரான்ஸ்), சுகிர்தராணி, சங்கரலிங்கம், சத்தியபாமா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான குணசிங்கம் இராசரத்தினம் மற்றும் சங்கரப்பிள்ளை, தவராசா (சுவிஸ்) மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-02-2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் பிள்ளையான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல் :
அன்பு மகன்
வை. சங்கரலிங்கம்

BOC, வங்கி லேன்,
புன்னாலைக்கட்டுவன். (3529)

# 16-ம் அகவையில் அகம் கலங்கி உதிர்க்கும் கண்ணீர் பூக்கள்



## சண்முகநாதன் அருள்நங்கை தம்பதிகளின் அன்பு புதல்வன் சந்துதன்



**எம்மோடு** 07.02.2000

**எம்மை விட்டு** 08.09.2009

அருமை மகனே ஆருயிர் புத்திரனே சந்துதா
கண்மூடித்திறப்பது போல் ஆண்டு ஏழு உமைபிரிந்து
தொலைந்து போனதையா
இன்று உந்தன் 16-ம் அகவையிலே உன் வாலிப
தோற்றத்தை மனக் கண்ணில் எண்ணுகையில் அடி
வயிற்றில் நெருப்பை கொட்டும் உணர்வை
உணர்கின்றோம் ஒன்பது ஆண்டுகளும் உற்றாரும்
உறவுகளும் கூடி குதூகலித்த பிறந்த நாளின்
நினைவுகளை மீட்கையிலேயே ஆறாத் துயரம்
அடைந்தே வாடுகின்றோம் ராசா நீர் இருந்து
எமக்கு தந்த இன்பம் இனி எப்போதும் வராது
செல்லமகனே! ஆறாத் துயரை நிரந்தரமாய் தந்து
விட்டு நீ அமைதியாய் தூங்கி விட்டாய் எம்
ஆசை மகனே! என் கண்மணியே நீ எமக்கு
தந்து விட்டுப் போன செல்வம் ஒரு செல்வமோடா?
செல்வத்தின் செல்வம் நீ இருந்தால்தான் அதுவே
நிறைவான செல்வமடா நீ துயிலும் ஆலயமே
அனுதினமும் உன் தந்தை வணங்கும் அன்பின்
ஆலயம் உன் நிழற்படமே நாம் காணும்
ஆறுதல் ராசா என்று உமை காண்போமோ
அன்று தான் முடியுமெடா எங்கள் உள்ள
துயரமது அதுவரையில் வாழ்கின்றோம்
வாழ்வின் அர்த்தமது புரியாமல் உன்னைப்
போல் பிள்ளை இங்கிருக்க
தகுதியில்லையென்று
ஆண்டவர் தம்முடன்
சேர்த்தாரோ ஆண்டுகள்
தான் நகர்ந்தாலும்
ஆறுதல் அடையாமலே
துடித்திருக்கும்.



**உன்**
**பெற்றோர்கள்**
**சகோதரர்கள், உறவுகள்**

**லக்சுமி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.**

# பதினாறாவது பிறந்தநாள் நினைவலைகள்

## அருள்நங்கை சண்முகநாதன்
## தம்பதிகளின் செல்வத் திருமகன்
## சிரஞ்சீவி சந்துதன்



தெய்வத் திருமணங் கமழ் செல்வத் திரு சந்துதனே
உன்னைத் தினம் நினைக்காத கணம் இல்லையே!
ஏழைகளின் பங்காளனாய்
தினம் சேவை செய்வாயென ஏங்கி இருந்தோம்
எங்களையெல்லாம் ஏதிலிகளாய்
விட்டுப் பிரிந்து தெய்வமானாய்
தினம் தினம் தொழும்
உன் அன்பு மாமா (சோமையா குடும்பத்தினர்)

சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள்
(பிரதி அதிபர், யாழ். கற்கோவளம், மெ.மி.த.க.பாடசாலை)
சிவஸ்ரீ இராமலிங்க சுந்தரலிங்கம் குருக்கள்
பிரபாலினி குடும்பத்தினர்
சிவஸ்ரீ திருஞான திருஞான சம்பந்த குருக்கள்
ஜீவிதா குடும்பத்தினர் (குமுழமுனை பிள்ளையார்
தேவஸ்தானம், முல்லைத்தீவு)
நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன்
லக்ஷ்மணன் தோட்டம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன்,
வடபத்திரகாளி அம்மன், தேவஸ்தான ஆதீன, கர்த்தாக்கள்.


(சி-3706)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
27.03.1938

மறைவு
08.01.2016



## அமரர் திரு.சுப்பிரமணியம் கந்தசாமி (JPUM)
## (ATTORNEY-AT-LAW)

திதி: 07.02.2016

கடந்த 08.01.2016 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் திரு. சுப்பிரமணியம் கந்தசாமி அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி மற்றும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 07.02.2016 ஞாயிற்றுக்கிழமை (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் 08.02.2016 திங்கட்கிழமை (நாளை) நண்பகல் 12 மணியளவில் இல. 527, நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் (TCT) நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவர் சுகயீனமுற்று இருந்த காலத்திலும் அவரது மறைவின் பின்னரும் அவருக்கும் எமக்கும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் தந்தையை இழந்து தவித்த போது தேறுதலும் ஆறுதலும் கூறி தோளோடு தோள் நின்று நாம் துவண்டு விழாது காத்த அனைத்து சொந்தங்களுக்கும் எம் தலை தாழ்த்தி வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

35/10, 5 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
திருமதி.பத்மினிதேவி கந்தசாமி
மற்றும் பிள்ளைகள்.

(3511

---

UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVOTEC

## யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரிக்கான புதிய அனுமதி

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரியின் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு தகுதியுடைய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.உணவுத் தொழில்நுட்பவியல் Food Technology
2.கட்டடசேவைகள் தொழில்நுட்பவியல் Building Services Technology
3.குடிசார் பொறியியல் கட்டுமான தொழில்நுட்பவியல் Construction Technology
4.பொறியியல் சார் உற்பத்தித் தொழில்நுட்பவியல் Production Technology (Mechanical & Manufacturing Technology)
5.விவசாய இயந்திரவிய தொழில்நுட்பவியல் Farm Machinery Technology (Agricultural Machinery Technology)
6.இயந்திரமின்னணுவியல் ( Mechatronic Technology)
7.விருந்தோம்பல் மற்றும் உபசரணை முகாமைத்துவம் Hospitality Management ( Hospitality & Tourism Management )
8.அழகுக் கலையியல் Cosmetology ( Beauty Culture)

**வேண்டப்படும் தகைமை:** க.பொ.த.உயர்தரத்தில் எத்துறையிலாவது 3 பாடங்களில் சித்தி அல்லது தேசிய தொழில் தகைமை மட்டம் 4 இல் சித்தி பெற்றிருக்கவேண்டும்.


விண்ணப்பப்படிவங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள முன்னணி புத்தகசாலைகளிலோ அல்லது எமது www.ucj.lk என்னும் இணையத்தளத்திலோ அல்லது இல. 29,பிறவுண் வீதி,கொக்குவில் இல் உள்ள எமது கல்லூரியிலோ பெற்றுக் கொள்ளலாம்.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும் என்பதால் உங்கள் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**விண்ணப்ப முடிவுதிகதி :-** 12.02.2016

மேலதிக தகவல்களுக்கு
முகவரி:- இல. 29,பிறவுண் வீதி,கொக்குவில்,யாழ்ப்பாணம்
தொலைபேசி இல : 021-221-7791 / 021-221-7792
இணையத்தள முகவரி : www.ucj.lk
மின்னஞ்சல் : intoucjaffna@sltnet.lk

(C-3593)




# வட்டுக்கோட்டை
# ஸ்ரீ மஹா கால பைரவர் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவிக்கு
# அமாவாசையில் மிளகாய் வற்றல் யாகம்

வட்டுக்கோட்டை ஸ்ரீ மஹா கால பைரவர் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா-தேவிக்குப் பிரதி அமாவாசை தோறும் தேவியின் ஆலயத்தில் மாலை 5 மணி முதல் 7 மணிவரை மிளகாய் வற்றல் யாகம் நடைபெற்று வருகின்றது. சகல கஷ்ட நிவாரணமாக வேண்டி இவ் யாக பூஜை நடைபெற்று வருகிறது.

08.02.2016 வருகின்ற திங்கட்கிழமை அமாவாசை தினமானது "144 வருடங்களுக்கு ஒரு முறை நிகழக்கூடிய அரிய புண்ய மஹோதய மஹா புண்ய காலமாகும்" மாசி மகத்தில் அமாவாசை திதியும் திருவோண நட்சத்திரமும் வ்யதிபாத யோகமும் திங்கட் கிழமையும் சேர்ந்து வருவது இம் மஹோதய மஹா புண்ணிய காலத்தின் சிறப்பம்சம் ஆகும். இவ்வரிய நிகழ்வு நாம் வாழ்கின்ற காலத்திலேயே நிகழ்கின்றது.

இப் புண்ணிய காலத்தில் செய்யப்படும் தானம், தர்ப்பணம், பூஜை விரதம் முதலானவை அபரிமிதமான புண்ணிய பலன் களைக் கொடுக்கக்கூடியது.

(3509)



**இத்திருக்கோயில் பிரதி மாதந்தோறும் வரும் தேய்பிறை பஞ்சமியில் வாராஹி தேவிக்கு சிறப்பு யாக பூசை நடைபெறவுள்ளது.**

எனவே அடியவர்கள் அனைவரும் இச்சிறப்புப் பூசையில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டி நிற்கின்றோம்.

**தெல்லிப்பழை வீதி,**
**(சங்கரத்தை சந்திக்கு அருகாமையில்)**
**வட்டுக்கோட்டை.**

**நிர்வாகம்**
**தொடர்புக்கு**
**077 155 7375**

# இலங்கை பொலிஸ் மீதான குற்றச்சாட்டு; மிகத் தெளிவான ஒரு குற்றப்பத்திரிகை

## பொலிஸாருக்கெதிராக மூன்று மாதங்களில் 752 முறைப்பாடுகள்

தேசிய பொலிஸ் ஆணையகம் (NPC) 2015 ஒக்டோபர் 21 இலிருந்து இதுவரை பொலிஸாருக்கெதிராகப் பெற்றுக் கொண்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 752 ஆகும். 'NPC' யின் செயலாளரான என்.ஆரிய தாஸ கூரேயின் கூற்றுப் படி, ஆணையகம் இந்த முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளும் போதெல்லாம் அவை மட்டில் உடனுக்குடனேயே பொலிஸ் பகுதியிடம் அறிக்கை கோரப் படுகிறது.

"தற்சமயம் இந்த அறிக்கைகள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குத் தயாராகிக்கொண்டிருப்பதுடன் அறிக்கை சம்பந்தமான விடயங்களுக்குரிய விசாரணைகளை நடத்துவதற்கு நாமும் தயாராகவே இருக்கிறோம். எல்லாவற்றுக்கும் முதல், பொலிஸாரிடம் இந்த அறிக்கைகளை நாம் கோரிப்பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதுடன், அவர்களும் அநேகமாக அவற்றில் 60 லிருந்து 70 வீதம் வரையான அறிக்கைகளை ஏற்கனவே தயாரித்து முடித்திருக்க வேண்டுமென்றே நாம் நம்புகிறோம்" என அவர் கூறுகிறார். "நாட்டின் ஏழு மாகாணங்களிலுமுள்ள எமது அலுவலகங்களுக்கு நாடு முழுவதிலுமிருந்து முறைப்பாடுகள் வந்து சேர்கின்றன" என்று அவர் மேலும் கூறுகிறார்.

அவரது கூற்றுப்படி, கிடைக்கும் முறைப்பாடுகளில் 60 லிருந்து 70 வீதம் வரையிலானவை பாகுபாடு காட்டுதல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் செயற்பாடுகளில் அக்கறையற்ற தன்மை அல்லது செயற்பாடில்லாமை போன்ற குற்றச்சாட்டுக்கள் பற்றியதேயாகும். கடந்த வெள்ளி 22 ஆம் திகதியன்று கலந்துரையாடலொன்றின் பொருட்டு ஒன்றுகூடிய 'NPC' உறுப்பினர்கள் இந்த முறைப்பாடுகளையும் தரம்பிரித்திருந்ததாக அவர் கூறினார்.

இதுவரை கிடைத்திருந்த 700 முறைப்பாடுகளில் எம்பிலிப்பிட்டியவில் பொலிஸாரினால் கொல்லப்பட்ட ஒரு இளைஞன் பற்றிய குற்றச்சாட்டே அறிவிக்கப்பட்டிருக்கும் பிந்திய சம்பவமாகும். மிக வேகமாக வாகனம் செலுத்தியதற்கான குற்றப்பதிவை ஏற்க மறுத்தமை, பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணையின் கிழ் தேடுதல் நடத்துவதற்கு சவால் விடுத்தது, நியாயமற்ற விதத்தில் அல்லது போதிய காரணங்களின்றி குற்றப்பணம் அறவிடுவது போன்ற எளிதான விடயங்களாக இருந்தாலுங்கூட பாரதூரமான விளைவுகளில்லாமல் பொலிஸ் நடவடிக்கைகளை சந்திக்கலாம் என எண்ணிக்கொண்டிருக்கும் எவருக்கும் இவ்வித எடுத்துக்காட்டான பல விடயங்களும் எச்சரிப்பவையாகவே இருக்கின்றன. அதாவது, "பொது மக்களாகிய எமக்கு பொலிஸாரிடம் போதிய பாதுகாப்பு இல்லை" என்பதே இதிலிருக்கும் செய்தியாகும்.

"ஆணி அடித்தே பழகிப்போன சுத்தியலின் கண்களுக்கு தெரியும் அனைத்துமே ஆணி தான்" என்ற நன்கு பழகிப்போன பழமொழியொன்று தற்போதைய எமது நிலையை நினைவூட்டுகிறது. நாட்டின் அண்மைக்கால நிகழ்வுகளின் போக்கு அரசாங்கத்தின் 'சட்டம்- ஒழுங்கு' விதிமுறைகளை நிலைநிறுத்த வேண்டிய மக்கள் பாதுகாப்பு இயந்திரமான பொலிஸ் படையணி சாதாரண குடிமக்களை அடித்து அடக்கி ஒடுக்கும் ஆணிகளாக காண்கிறதா? என்ற கேள்வி தான் எழுகிறது.

அரசியலமைப்புச் சட்ட வரையறைகளுக்கு அப்பாற்பட்ட விதமாக மக்கள் மத்தியில் பயங்கர அச்சுறுத்தலையே எளிதாக விதைக்கும் விதத்தில் அவர்கள்மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டு இம்சிப்புடன் கொலைகளையுங்கூட மேற்கொள்வது போன்ற பொலிஸ் அட்டூழியங்கள் எல்லை மீறிச் செல்வது பற்றிய அறிக்கைகள் வெளிவராத நாட்களே இல்லை என்பது போன்ற நிலையே தற்போது இருந்து வருகிறது. உண்மையில் உயரதிகாரிகளுக்கு தெரியவேண்டிய தேவை இல்லை என்பதுபோல் நடத்தப்படும் பொலிஸாரின் அதிகார துஷ்பிரயோகங்கள், சத்தியப்பிரமாண மீறல்கள் போன்ற எத்தனையோ அதிகார அத்துமீறல்கள், தமது சொந்த பாதுகாப்பையும் சேர்த்தே எதிர்பார்க்கும் சாதாரண பொதுமக்களான வரியிறுப்பாளர்களை கொடுமைக்குள்ளாக்கி கொலையும் செய்வது போன்ற தொடர் அட்டூழியங்களாக நாளாந்தம் வளர்ந்து வரும் ஒரு துன்பியல் நிகழ்வாகவே இருக்கிறது. இதன் விளைவாக, இலங்கை மக்களுக்கு தமது உண்மையான சேவைகளையும் பாதுகாப்பையும் வழங்குவதற்கு கடமைப்பட்ட சட்ட- ஒழுங்கு அதிகாரிகள் நம்மத்தியில் சமாதானத்தை நிலைநிறுத்தும் நிலையில் இல்லை என்றாகிறது. அதற்குப் பதிலாக இன்றைய இராணுவமயப்படுத்தப்பட்ட அதிகாரத்துவ நடைமுறையானது, சாதாரண பொலிஸ் சிவிலியன் அதிகாரிகளுங்கூட மக்களையும் விடுத்து அரசாங்கத்தை பாதுகாப்பதையே முக்கியப்படுத்துவதாக இருக்கிறது. சொந்தக் கடமைகளிலிருந்து இவ்விதம் திசைதிருப்பப்பட்ட நிலையில் இந்த சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் பெற்றுக்கொண்ட அதிக அதிகாரங்கள் 'மக்களுக்காக அரசு' என்ற அவர்களது அடிப்படைச் சிந்தனையையே மாற்றி 'அரசுக்காகவே மக்கள்' என்ற விதமான நிலைப்பாட்டை ஏற்படுத்திவிடுகிறது. எனவே, இவ்வித மனப்பதிவுடன் செயற்படும் நிர்ப்பந்தங்களுக்கு நீண்டகாலம் உட்படுத்தப்பட்டிருக்கும் இந்த சிவிலியன் அதிகாரிகள் அரசுக்கு எதிராக வெளிப்படும் சிறிய எதிர்ப்புக்களுக்காக அப்பாவி மக்களையே படுமோசமாக அச்சுறுத்திப் பணியவைப்பது, துன்புறுத்துவது, சுட்டுக்கொல்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது மேலிடத்து எதிர்பார்ப்புகளுக்கும் அப்பால் விடயங்களை மேலும் மோசமாக்கி விடுவதாகவே இருக்கும்.

உண்மையில், பொலிஸாரின் படுமோசமான இவ்வித அட்டூழியங்கள் சட்ட ஒழுங்கு விதிமுறைகள் சிறந்த விதமாக நடைமுறைப்படுத்துவதை சீர்குலைத்து விடுமென்பது தற்போது பரவலாகவே அறியப்பட்டு அதுவே உண்மையென்று அங்கீகரிக்கப்பட்டுமுள்ளது. இந்த விதத்தில் இவர்களில் தனியொருவரோ அல்லது சிறிய எண்ணிக்கையிலான வர்களோதானும் நடந்து கொள்ளும் விதம் முழு அளவிலும் பெரிதான வேறுபாட்டையே வெளிக்காட்டும். சிலவேளைகளில் இப்படியான அசாதாரண பொலிஸ் அதிகார துஷ்பிரயோக நடை முறைகள் பொதுவில் கேட்பதற்கு எவருமில்லை என்ற ரீதியில் தொடர்ந்தும் இடம்பெறுபவையாகவே உள்ளன.



சண்டே லீடர் பத்திரிகையில் "இலங்கை பொலிஸ் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு மிகத் தெளிவான ஒரு குற்றப்பத்திரிகை" எனும் தலைப்பில் கெமிலியா நெத்தானியல் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...

(தொடரும்)

தமிழில் யோகர்

# வாரம் ஒரு தகவல்

## முதலும் முடிவும்

"சேர் உங்களிடம் ஒரு யோசனை கேட்க வேண்டும்."

"என்னிடம் யோசனை கேட்க என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள் எலாமா?"

"உங்களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது. அதனால் தான்!"

"சரி கேளுங்க"

நான் கல்யாணம் பண்ணிக் கொள்எலாமா, வேண்டாமா சேர்?"

" எப்படி இருந்தாலும் கல்யாணம் செய்து கொள்! நல்ல மனைவி வாய்த்தால் சந்தோஷமாக இருப்பாய்! மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்!"

"அப்படியா சேர்?"

" ஆமாம். இது நான் சொல்லவில்லை. சோக்கிரடீஸ் தான் இப்படி சொல்லி யிருக்கிறார்"

"நான் ஞானியாக வேண்டும் என்று ஆசைப்படவில்லை சேர்"

"அப்படியானால் மனைவியை நேசிக்கக் கற்றுக் கொள்"

"அது எப்படி"

" ஒருவனுக்குத் தன் மனைவியின் பழக்கவழக்கங்களில் ஏதேனும் ஒன்று பிடிக்கவில்லையெனில் அதற்காக அவளை அவன் வெறுத்தாலாகாது. அவற் றுள் அவனுக்குப் பிடித்த ஒன்றை நினைத்து அவன் அவளை நேசிக்கட்டும் என்கிறார் நபிகள் நாயகம் (ஸல்)"

சான்றோர்களின் சிந்தனைகளைக் கூறியதற்கு நன்றி சேர். இது சம்பந்தமாக உங்களுடைய சொந்த சிந்தனையை தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

" என்னைப் பொறுத்த வரை குடும்பத்தில் கணவன்-மனைவிக்குள் சண்டையே வரக் கூடாது. அதுதான் நல்ல குடும்பம்"

"உங்கள் குடும்பத்தில் சண்டையே வந்ததில்லையா?"

"எனக்குக் கல்யாணமாகி 20 வருடத்தில் இது வரைக்கும் ஒரு தடவைதான் சண்டை வந்திருக்கு. அதுவும் கல்யாணம் ஆன புதிதில்!"

"அதற்குப் பின் வரவேயில்லையா?"

"வருவதற்கு சான்சே இல்லை!"

"ஏன்?"

"அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே!"

# தேசிய ஐக்கியமில்லை என்றால் எந்தவித சுதந்திரமும் இருக்காது

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு



காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடு ஒன்றில் தேசிய ஐக்கியம் இல்லாது போனால், அந்த நாட்டில் எந்தவிதமான சுதந்திரமும் ஏற்பட இடமில்லை என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நவசமசமாஜக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அனைவரும் இணைந்து இந்த முறை சுதந்திர தினத்தை கொண்டாடியது. சுதந்திரம் என்ற வகையிலும் ஜனநாயகம் என்ற வகையிலும் முக்கியமானது.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து சுதந்திரம் பெற்றிருந்தாலும் உண்மையான சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதில் மிகவும் முக்கியமான நடவடிக்கையான தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை முடங்கிப்போனது.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் செயற்பாட்டு ரீதியான தலைவர்கள் ஒன்றிணைந்து இந்த முறை தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடினார்கள்.

எதிர்காலத்தில் வரையப்படவிருக்கும் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக உண்மையான ஜனநாயக தேசிய ஐக்கியத்தின் மூலம் முன்னோக்கிச் செல்லும் எதிர்பார்ப்பு அவர்களிடம் இருக்கின்றது எனவும் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

அதேவேளை நாட்டு மக்கள் தற்போது திருடர்கள் பிடிக்கப் படுவது குறித்து அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். எனினும் இது நாட்டுக்கு பிரதான விடயம் அல்ல. நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா? இல்லையா? என்பது குறித்து நாட்டு மக்களின் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்காமல், அரசாங்கம் எதிர்பார்க்கும் பொருளாதார அபிவிருத்தி என்ற பயணத்தை மேற்கொள்ள முடியாது என்பதுடன் நிதியுதவிகளையும் முதலீடுகளையும் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் கலா நிதி கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நாடாளுமன்றத்தில் பிரதமருடனான கேள்வி நேரம்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பிரதமருடனான கேள்விகளுக்காக தனியான நேரம் ஒதுக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் அடுத்த அமர்வில் இருந்து இதற்கான நேரம் ஒதுக்கப்படவுள்ளது.

இந்த நேரத்தில் நாடாளுமன்றத்தின் பின்வரிசை ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் நேரடியாக கேள்விகளைத் தொடுக்கலாம்.

நாடாளுமன்ற பிரதி பொதுச் செயலாளர் நெய்ல் இத்தவெல இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஆலோசனைக்கு ஏற்பவே இந்த நேரம் ஒதுக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வெஸ்ட்மினிஸ்டர் முறையில் இந்த வழக்கம் உள்ளமையையும் பிரதி பொதுச்செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (இ)



# சு.கவின் ஒரு சிலரே கட்சியை விட்டு விலகிச் செல்ல விரும்புகின்றனர்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதநதிரக் கட்சியின் சொற்ப அளவானவர்களே கட்சியை விட்டு விலகிச் செல்ல விரும்புவதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 98 வீதமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் கட்சியில் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்றே கருதுகின்றனர்.

கட்சியை விட்டு விலகிச் செல்ல வேண்டுமென சொற்ப அளவானவர்களே கோருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைந்தால் அதன் நலன்களின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டுவதனை தடுக்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் டீல் போட்டுக் கொண்ட தரப்பினர் சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்ய முயற்சிக்கின்றனர்.

சில தரப்பினர் ஆட்சி அதிகாரத்தை சுதந்திரக் கட்சிக்கு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரி வருகின்றனர்.

ஜனாதிபதிக்கு தேவை என்றாலும் தற்போது நாடாளுமன்றை கலைக்க முடியாது.

19 ஆம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் நாடாளுமன்றை நான்கரை ஆண்டுகளுக்கு கலைக்க முடியாது.

அடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை அமைக்க தற்போதிருந்தே ஆயத்தமாக வேண்டுமென அமைச்சர் மகிந்த அமரவர மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# சிறுநீரக பாதிப்புக்கான நிவாரண நடவடிக்கைகளில் மோசடி!

## ஆணைக்குழு விசாரணை

வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக பாதிப்பு தடுப்பு தொடர்பான நிவாரண நடவடிக்கைகளின்போது நடைபெற்ற மோசடிகள் தொடர்பில் மூன்று அமைச்சர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

வடமத்திய மாகாண சபையின முன்னைய நிர்வாகத்தின் கீழ் சுமார் 13 கோடியே 41 லட்சம ரூபா செலவில் சிறுநீரக நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில் நீர வடிக்கும் பொறிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த 12 ஆயிரத்து 500 நீர்வடி பொறி கொள்வனவில் பாரிய நிதி மோசடி இடம் பெற்றிருந்தது.

தரம் குறைந்த நீர்வடி பொறிகளை கொள்வனவு செய்து அவற்றை அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் விநியோகித்திருந்தனர். எனினும் ஆறுமாத காலத்திற்குள் அவற்றை பாவனையிலிருந்து ஒதுக்க நேர்ந்துள்ளது.

அன்றைய மாகாண சுகாதார அமைச்சர் கே.எச். நந்தசேன, நீர்ப்பாசன அமைச்சர் எச்.பீ.சேமசிங்க, விவசாய அமைச்சர் ரத்நாயக்க ஆகியோர் மீது இந்த மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கு ஏற்ப நேற்று முன்தினம் மூன்று அமைச்சர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் இந்த மோசடியில் தொடர்புபட்டிருந்த வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்னவிடம் ஜனாதிபதி ஆணைக்குழு எந்தவொரு விசாரணையையும் மேற கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 21 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தலைமறைவாகவில்லை-ருவான்



எம்பிலப்பிட்டி இளைஞர் மரணத்துடன் தொடர்புடையவர்கள் என குற்றம் சுமத்தப்பட்ட 21 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தலைமறைவாகவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

21 பொலிஸ் உத்தியோகத்தர்களும் இடமாற்றம் செய்யப்பட்டு கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய இளைஞர் மரணத்துடன் தொடர்புடைய 30 பேரைக் காணவில்லை. அதில் 21 பேர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என கொழும்பு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இந்த செய்தி பிழையானது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனதாக கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வேறு பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கமளித்துள்ளார். (இ)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 80 | 60 | 120 |
| உருளைக்கிழங்கு | 70 | 50 | 50 | 70 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 250 | 150 | 200 | 200 | 300 | 300 |
| தக்காளி | 60 | 60 | 50 | 80 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 100 | 80 |
| கரட் | 250 | 250 | 200 | 250 | 300 | 250 |
| பூசணி | 80 | 80 | 60 | 50 | 100 | 60 |
| புடோல் | 80 | 40 | 40 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 45 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 60-100 | 70 | 100 | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 50 | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 100 | 100 | 90 | 80 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 80 | 160 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 200 | 100 | 150 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 60 | 80 | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 120 | 120 | 80 | 100 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 400 | 180 | 200 | 300 | 150 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 400 | 700 | 800 | 1000 |
| போஞ்சி | 80 | 100 | 80 | 80 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 70 | — | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 15 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 70 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35-40 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 120 | 100 | 90 | 160 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 90 | 70 | 120 | 80 |
| முள்ளங்கி | 30 | 40 | 30 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | — | — | 120 | — |

# பணப்பரிமாற்றலில் கட்டுப்பாடுகள் நீக்கம்

வெளிநாட்டு நாணயங்களைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது மற்றும் வெளிநாடுகளுக்கு பணத்தை அனுப்புவதில் இருந்த கட்டுப்பாடுகள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் NRFC, RFC உள்ளிட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள பணத்தை முன்கூட்டிய அனுமதி இல்லாமல் அனுப்ப முடியும் என இலங்கை மத்திய வங்கி நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் போது நாணயக் கட்டுப்பாட்டு தரப்பினரிடம் அனுமதி பெற வேண்டியிருந்தது. தற்போது அந்த நிலைப்பாட்டில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் வங்கிக் கணக்குகளிலிருந்து 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான தொகையை மீளப்பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்தனர். உலக பொருளாதார நிலைக்கு அமைய இலங்கை தொடர்பில் எதிரகாலத்தில் பின்பற்றப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடியுள்ளனர். இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் தொகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இவர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)




- 1238 - மங்கோலியர்கள் ரஷ்யாவின் விளாடிமிர் நகரைத் தீயிட்டுக் கொளுத்தினர்.
- 1807 - நெப்போலியனின் பிரெஞ்சுப் படைகள் ரஷ்யா, மற்றும் புருசியாப் படைகளின் மீது போலந்தில் தாக்குதலைத் தொடங்கினர்.
- 1812 - மிசூரி மாநிலத்தில் நியூ மாட்ரிட் என்ற இடத்தில் பெரும் நிலநடுக்கம் தாக்கியது.
- 1904 - மேரிலாந்தில் பால்ட்டிமோர் என்ற இடத்தில் பரவிய தீயினால் 1,500 கட்டடங்கள் 30 மணி நேரத்தில் தீக்கிரையாகின.
- 1914 - சார்லி சாப்ளினின் முதல் திரைப்படம் முனை Auto Races at Venice வெளியானது.
- 1962 - கியூபாவுடனான ஏற்றுமதி, மற்றும் இறக்குமதி தடைகளை ஐக்கிய அமெரிக்கா கொண்டு வந்தது.
- 1971 - சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1974 - ஐக்கிய இராச்சியத்திடமிருந்து கிரனாடா விடுதலை பெற்றது.
- 1977 - சோவியத் ஒன்றியம் சோயுஸ் 24 விண்கலத்தை இரண்டு விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு ஏவியது.
- 1979 - புளூட்டோ நெப்டியூனின் சுற்றுப் பாதைக்குள் நுழைந்தது.
- 1986 - எயிட்டியில் 28 ஆண்டுகள் குடும்ப ஆட்சி நடத்திய ஜனாதிபதி ஜீன்-குளோட் டுவாலியர் கரிபியன் நாட்டிலிருந்து வெளியேறினார்.
- 1990 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தனி ஆதிக்கத்தை கைவிட இணங்கியது.
- 1991 - எயிட்டியின் முதலாவது மாக்களாட்சித் தலைவராக ஜீன்-பேட்ரண்ட் ஆர்ட்டிஸ்டே பதவியேற்றார்.
- 1992 - ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ் ட்ரிக்ட் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
- 1999 - உலகத்தமிழிணைய மாநாடு சென்னையில் ஆரம்பமானது.


### பிறப்புகள்

- 1812 - சார்ள்ஸ் டிக்கன்ஸ், ஆங்கில நாவலாசிரியர் (இ. 1870)
- 1902 - தேவநேயப் பாவாணர், தமிழறிஞர் (இ. 1981)
- 1905 - ஊல்ஃப் வொன் இயூலர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1983)

### இறப்புகள்

- 1919 - ஹென்றி யூலன், யாழ்ப்பாண ஆயர.
- 1937 - எலிஹு ரூட், நோபல் பரிசு பெற்றவர (பி. 1845)

### தேவநேயப் பாவாணர்



தேவநேயப் பாவாணர் 1902 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி பிறந்தார். இவர் மிகச் சிறந்த தமிழறிஞரும், சொல்லாராயசசி வல்லுநருமாவார். இவர் 40 க்கும் மேலான மொழிகளின் சொல்லியல்புகளைக் கற்று மிக அரிய சிறப்புடன் சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய் ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும் பன்மொழியியல் அறிவும் கருதி, சிறப்பாக **மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்** என்று அழைக்கப்பட்டார். தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத் தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும திராவிடத்திற்குத் தாயாகவும் ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கிய மொழியென வாதிட்டவர். கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்று நிறுவியவர் பாவாணர் ஆவார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி, அதன் வளர்ச்சிக்கான வழியை யும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து இயம்பினார்.

# யோஷிதவிற்காக கண்ணீர் வடிக்கும் பிரதி அமைச்சர்கள் இராஜினாமா?

## செய்வதில் தடையில்லை என்கிறார் கிரியெல்ல



யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டமைக்காக கண்ணீர் வடிக்கும் பிரதி அமைச்சர்கள் பதவியை இராஜினாமா செய்ய முடியும் என அமைச்சரும் அவைத் தலைவருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

முக்கிய பிரபு ஒருவரின் மகன் கைதானமையை தாங்கிக் கொள்ள முடியாத பிரதி அமைச்சர்கள் பதவியை இராஜினாமா செய்ய முடியும் எனவும் அதற்கு தடையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

பதவி விலகப் போவதாக கூறி தொடர்ந்தும் ஊடக கண்காட்சி நடத்த வேண்டியதில்லை. பதவி விலக விரும்புவோர் தங்களது பெயர்களை உடனடியாக வெளியிட வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தில் சட்டம் அனைவருக்கும் சமமானது. யாரேனும் சட்டத்தை மீறினால் தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சி எந்த நேரத்திலும் எந்தவொரு தேர்தலையும் எதிர்நோக்கத் தயார். புதிய முறையில் நடத்தினாலும் பழைய முறையில நடத்தினாலும் எமக்கு அது பிரச்சினையில்லை.

ஆட்சி அதிகாரமின்றியே நாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை, நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத்தை மகிந்த வைத்திருந்த போது அவரை தோற்கடித்தோம்.

புதிய கட்சி அமைத்தாலும் எதிர்க்கட்சிக்கு முன்னேற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு மக்களை ஏமாற்றி ஆட்சியை கைப்பற்ற முயற்சிக்கின்றனர். எனினும் மக்கள் நல்லாட்சியை ஏற்றுக்கொண்டுள்ளனர். நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஆராய்ச்சி அலுவலகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு வெளிக்கள/அலுவலகம் சார்ந்த அலுவலர் வகுதியின் தரம் 1 ஐச் சேர்ந்த ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.

**தேவையான தகைமைகள்**

**கல்விசார் மற்றும் ஏனைய தகைமைகள்,**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சமூகவியல், பொருளியல், புள்ளிவிபரவியல் தொடர்பான விசேட பட்டத்தை பெற்றிருப்பதுடன் மேற்படி பாடத்துறைகள் தொடர்பான பட்டப்பின் படிப்பைப் பெற்றிருத்தல். சமூகவியல், உளவியல் போன்ற பாடத்துறைகள் தொடர்பாக பட்டப்பின் படிப்பு மட்டத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருத்தல்.

**அனுபவம்**

ஆராய்ச்சி மற்றும் தரவுகளைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக ஆகக் குறைந்தது 2 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்படிவங்களை 2016. 02.29 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "செயலாளர் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள அமைச்சு, 5 ஆம் மாடி, 'செத் சிறிபாய' II ஆம் கட்டம், பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரத்திற்கு 2016. 02.05 ஆம் திகதி வர்த்தமானியை பார்க்கவும். (இ)

# திருவிழா திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடம் வீதியில் அமைந்திருக்கும் திரு இருதய ஆண்டவர் சிற்றாலயத்தின் திருவிழா கொடியேற்றதுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் பிற்பகல் 5 மணிக்கு செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்று வருகின்றது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு செபமாலை ஆரம்பமாகி திருவிழா திருப்பணி ஒப்புக்கொடுக்கப்படும்.

இச் சிற்றாலயத்தின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அன்றைய தினம் கொண்டாடப்படவுள்ளதாக ஆலய நிர்வாக சபையின் அறிவித்துள்ளனர்.

எனவே பக்த அடியார்கள் அனைவரையும் அன்றைய தினம் திருப்பலியில் பங்கேற்று ஆசீர் பெற்றுச்செல்லுமாறு கேட்கப் பட்டுள்ளது. (2)

# இருவரிடையே மோதல் இளைஞன் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

இருவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுக்குட்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சங்கரத்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த பத்மநாதன் பிரபாகரன (வயது-22) என்ற இளைஞரே படுகாயங்களுக்குள்ளானார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொணடு வருகின்றனர். (இ-5-12-30)

# இசையரங்கு

இணுவையூர் ரசிகப்பிரியா சபாகலை வளர்ச்சி மைதானத்தின் மாதாந்த இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இணுவையூர் வி.கே. குகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் இசையரங்கில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (இ-5)

# 7 இல் 5 எரிபொருள் குழாய்கள் செயலிழப்பு



கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவைக்கு எரிபொருள் எடுத்துச் செல்லும் 7 குழாய் வழிப் பாதைகளல ஐந்து குழாய்கள் பாவனைக்கு பொருத்தமற்றதாக காணப்படுவதாக பெற்றோலிய வளத் துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இதனைச் சீர்செய்வதற்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கடந்த 2006 ஆம் ஆணடு முதல் இதனை மறுசீரமைப்பதற்கு வேண்டி ஆறு அமைச்சரவைப் பத்திரங்கள் முன்வைக்கப்பட்டும் அவை நடைமுறைப்படுத்தப்படாதுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ)

# 3நாட்கள் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

விசேட டெங்கு கட்டுப்பாட்டு நாட்களாக எதிர்வரும் 11.02.2016-13.02.2016 ஆம் திகதி வரையான மூன்று நாட்கள் கடைப்பிடித்தல் வேண்டும் என யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கபபட்டுள்ளதாவது,

இந்நாட்களில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

இதன்மூலம் அதிகரித்து வரும் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இவ்வாரத்தை சிறப்புடன் பேணுவதற்கு அனைவரும் தமது ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும்.

இதற்கமைய வீடுகள், வாழிடங்கள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பொதுச் சந்தைகள், மயான சுற்றுச் சூழல் மற்றும் மண்டபங்கள என்பவற்றை துப்புரவு செய்தல் வேண்டும்.

இதனை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இம்முறை எந்தவொரு இடமோ டெங்கு பெருக்கத்திற்கு சாதகமாக அமையக் கூடாது.

மேலும் இந்நாட்களில் குறித்த சில பிரதேசங்களில் டெங்கு கள தரிசிப்பும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய 11.02.16 பஷார் II பகுதியில் ஜே/73, ஜே/74, ஜே/77 போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 12.02.16 குருநகர் II பகுதியில் ஜே/68ஏ, ஜே/70, ஜே/75 போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 13.02. 16 வண்ணார் பண்ணை பகுதியில் ஜே/104, ஜே/101, ஜே/102 போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மேற்படி டெங்கு களத்தரிசிப்பு இடம்பெறவுள்ளது.

களத்தரிசிப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள மேற்குறித்த கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிப்போர் அன்றையதினம் தமது வீடுகளில் ஒருவராவது நின்று களத்தரிசிப்புக்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பினை வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:26 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSC/உதவி விரிவுரையாளர்<br>தொ.இ: B/3809 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 10<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BBA, MBA, PHD/விரிவுரையாளர் லண்டன்<br>தொ.இ: B/3811 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 65 சூரிசெவ் 7 இல்<br>உய்ரம்: 6'<br>தகைமை/தொழில்:HNDA/தனியார் தொழில்<br>தொ.இ: B/3812 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 55 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC/சட்டத்தரணி<br>தொ.இ: B/3814 |

இவர்களுக்கு மணமகன் தேவை


| |
|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 62 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4333 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 35 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/4338 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 31<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: G/4339 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 12 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/4342 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

சூழல் பாதுகாப்பிற்காக நாட்டப்பட்டுள்ள

# மருது மரங்கள் பராமரிப்பு இன்றி அழிவடையும் நிலையை எட்டியுள்ளன

## சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டு



(வற்றாப்பளை)

முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதியின் முல்லைத் தீவு நகரை அண்மித்த பகுதியில் இருந்து மூன்றாம் கட்டை வரையிலான நந்திக் கடல் கரையோரப் பகுதியில் சூழல் பாது காப்பிற்காக நாட்டப்பட்டுள்ள மருது மரங்கள் பராமரிப்புக்களின்றி அழிவடைந்து வருவதாக அப் பிரதேச சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

இதுதொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பிரதான வீதியின் நந்திக் கடலோரப் பகுதியில் சூழல் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு நாட்டப்பட்டுள்ள மருது மரங்கள் எவ்விதமான பராமரிப்புகளும் இன்றி அழிவையும்நிலையைஎட்டியுள்ளன.

அத்துடன் அம் மரங்களை சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு கூடுகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

இதேவேளை இம் மரங்கள் நாட்டப்பட்டுள்ள பகுதிகளில் மழைகாலங்களில் நீர் தேங்கி நிற்பதன் காரணமாக அழுகியும் காணப்படுகின்றன.

எனவே வடக்கு மாகாணத்தின் ஏனைய உவர்நீர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சீமெந்து தொட்டிகளைப் போன்று இப்பிரதேசங்களிலும் அமைத்து இம் மரங்களை உரிய முறையில் பராமரிப்பதன் ஊடாக சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் மரங்கள் நாட்டப்பட்டதன் நோக்கத்தையும் அடைய முடியும் என சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சரும் அவ்வமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளும் இதனைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென சூழலியலாளர்கள், பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-310)

# அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகள் கிளிநொச்சி செயலகத்தில் இரு தினங்கள்

## பங்கேற்குமாறு கிளி.மாவட்ட பிரஜைகள் குழுவினர் வேண்டுகோள்

(கிளிநொச்சி-1)

நாட்டின்அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை பொதுமக்களிடம் இருந்து எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் இதற்கென நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுவினர் பெற்று வருகின்றனர்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்க முடியும்.

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவினர், புத்திஜீவிகள், மதகுருமார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோரை மேற்படி இரு தினங்களில் கருத்துக்களை முன்வைக்குமாறு வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நாட்டில் நீண்டகாலமாக புரையோடிப் போய் இருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினை எட்டுவதற்கும் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளைப் பெற்று சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு தமது எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும்.

இதுவரை காலமும் உயிர் மற்றும் சொத்து இழப்புகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் ஆதலால் தமது உறுதியான நிலைப்பாட்டை இக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

நாட்டின் வரலாற்றில் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்காக பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் நிலை இதுவே முதற்தடவையாகும்.

எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்வது காலத்தின் தேவையாகும்.

எனவே தமது கருத்துக்களை தெரிவித்துக் கொள்ளுமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-277)




# இணைந்த நேர அட்டவணை மார்ச் முதலாம் திகதி அமுல்

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தின் பொதுமக்கள் போக்குவரத்தை சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் நடத்த போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து முதற்கட்டமாக, தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகிவற்றுக்கு 60:40 என்னும் விகிதாசார அடிப்படையில் இணைந்த நேர அட்டவணையை தயாரித்து நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் தனியாருக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் பாதகமற்ற வகையில் தற்போது வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய இரண்டு மாவட்டங்களும் தயாரித்த பின்னர் எதிர்வரும் மார்ச் மாதம்முதலாம்திகதிமுதல்அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விசேட ஒன்றுகூடல் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் அணமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

கிளி.கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினால்

# முதலாம்மாண்டில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 95 பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் 2 ஆயிரத்து 536 மாணவர்களின் பற்சுகாதாரத்தைப் பேணும் முகமாகவும் அப் பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் கல்வி கற்பிக்கின்ற 120 ஆசிரியர்களுக்கும் கருத்தரங்கும் மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை என்பன இலவசமாக வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

2013 ஆம் ஆண்டில் இருந்து இச் செயற்றிட்டத்தை கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

வருடத்தில் 3 தடவைகள் வழங்கி வருவதாகவும் 2016 ஆம் ஆண்டு இத் திட்டத்தினுள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து முன் பள்ளிகளில் பயின்று வருகின்ற சிறார்களும் இணைக்கப்படவுள்ளதாக அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் எஸ்.நதுசன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் இவ்வாண்டு முற்பகுதியில் இருந்து முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய இடங்களுக்கும்விஸ்தரிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுத்து நடத்துவதற்கு கிளிநொச்சி கல்வித்திணைக்களம், சுகாதார சேவைகள் திணைக்களம் என்பன தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன. (2-298)

# வவு. வடக்கு கல்வி வலயத்தில் 150 ஆசிரியர்கள் பற்றாக்குறை

## ஆனந்தன் எம்.பி.சுட்டிக்காட்டு

(கற்குழி)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 150 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பற்றாக் குறை காணப்படுவதாக, வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

குறித்த கல்வி வலயத்துக் குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்ப பிரிவிலிருந்து க.பொ.த. உயர்தரம் வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் உள்ளடங்கலாக 150 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களும், கிராம மக்களும் முற்று முழுதாக போரினால் பாதிக்கப்பட்டவர்கள். போரால்இடம்பெயர்வை சந்தித்து வறுமை நிலைக் குட்பட்டவர்கள்.

எனவே இந்த கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மாகாண கல்வி அமைச்சும், வலயக் கல்வி பணிமனையும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த வாரம் கனகராயன்குளம் ஆரம்ப பாடசாலைக்கான புதிய வகுப்பறைக் கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டு, கட்டத்தை திறந்து வைத்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார.

கனகராயன்குளம் ஆரம்ப பாடசாலையில் இதுவரை காலமும் 80 மாணவர்கள் மிகவும் இடவசதி குறைந்த தற்காலிக வகுப்பறை கொட்டகைகளில் தமது கல்வியை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கற்று வந்தனர்.

தற்பொழுது சகல வசதிகளுடனும் கூடிய புதிய வகுப்பறை கட்டம்ஒன்றை அமைத்து மாணவர்களின் மகிழ்ச்சியான கற்றல் செயற்பாடுகளுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுத்துள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் ஆகும் எனவும் ஆனந்தன் எம்.பி. தெரிவித்தார்.

தமது பாடசாலை கட்டடம் ஒன்றின் கூரை மரங்களையும், ஓடுகளையும், ஜன்னல் கதவுகளையும் இனந்தெரியாதோர் கழற்றி களவாடிச் சென்றுள்ளதால், அந்த கட்டடத்தை புனரமைத்து தந்தால் அதனை கணனி பயிற்சி அறையாக பயன்படுத்த முடியும் என்று பாடசாலை அதிபர் பாலகிருஸ்ணன் விடுத்த வேண்டுகோளை ஏற்று, தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியூடாக குறித்த கட்டடத்தை புனரமைத்து தருவதாகவும் ஆனந்தன் எம்பி.தெரிவித்தார்.

லண்டனில் வசித்து வரும கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன் தியாகராசா திவாகரன், நான்கு கணனிகளை அவரது பெற்றோர் ஊடாக கனகராயன்குளம் ஆரம்ப பாடசாலை அதிபர் பாலகிருஸ்ணனிடம் வழங்கி வைத்தார். (2-3-281-303-250)

# மாந்தை கிழக்கு அரிசி ஆலையை இயங்கச் செய்ய நடவடிக்கை எடுங்கள்

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகம் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, பொன்னகர்ப் பகுதியில் 43 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட அரசி ஆலை கடந்த இரு வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் இன்னும் திறக்கப்படாதிருப்பதாக அப் பகுதி விவசாய மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏனவேஇந்தஅரிசிஆலையை இயங்கச் செய்ய உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாதெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாய மக்கள் தாம் உற்பத்தி செய்கின்ற நெல்லை உத்தரவாத விலைக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மிகவும் குறைந்த விலைக்கு வெளிமாவட்ட வர்த்தகர்களுக்குதங்களது நெல்லை விற்று, தங்களது நுகர்வுத் தேவைக்கான அரிசியை கூடிய விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு இவர்கள் தள்ளப் பட்டுள்ளனர்.

மேற்படி அரிசி ஆலை செயற்படுத்தப்படுமானால், தங்களது உற்பத்திகளை அரிசியாக்கி அதனை இப் பகுதி மக்களின் நுகர்வுத் தேவைக் காக நியாய விலையில் கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்பு இம்மக்களுக்குகிட்டும்.

ஏனவே, இந்த அரிசி ஆலை உடனடியாக இயங்கச் செய்யப் படுவது அத்தியாவசியமாகுமென்று செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது

முல்லைத்தீவுமுள்ளியவளை பகுதியில் இரண்டு குடும்பங்களுக்கு இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிவடைந்ததில் காயமடைந்த குடும்பப்பெண் ஒருவர் உட்பட மூன்று பேர் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் முள்ளியவளை முறிப்பு பகுதியில் இடம் பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குடும்பப் பிரச்சினை காரணமாக இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில்முடிந்துள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்பு பட்ட மூன்று பேர் முள்ளியவளை பொலிஸாரினால் கைது செய்யப் பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (2-310)



கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு அண்மையில் வித்தியாலய அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்ற போது... (படங்கள்: சோலைநகர் செய்தியாளர்)

வாழ்க்கையில் பெரும்பாலான மனிதர்களை தன்னம்பிக்கைதான் பாதுகாத்து வருகிறது. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையரின் வருகை உறுதி செய்யட்டும்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் நேற்றையதினம் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்நேரத்தில் தமிழ் மக்கள் அவரை அன்போடு வரவேற்கின்றனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் கடந்த வருடம் ஜெனிவாவில் நடைபெற்ற போது ஈழத்தமிழர்கள் தொடர்பில் ஒரு நியாயமான அறிக்கையை ஆணையாளர் முன்வைத்தமைக்கு எங்கள் நன்றிகள்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துகிறதா? என்பதை பார்வையிடுவதற்காக தாங்கள் வருவதையிட்டு நாம் ஆறுதல் அடைகின்றோம்.

உங்களின் வருகையின் போது இலங்கை அரசு போல எங்களால் வரவேற்பு உபசாரங்களை வழங்க முடியவில்லை என்ற மனக் கவலை இருந்த போதிலும் இந்த வரவேற்பு உபசாரங்கள் உங்கள் நீதியான-நடுநிலையான முடிவுகளில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது என்பதிலும் நாம் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளோம். உள்ளத்தால்-இதயத்தால் உங்கள் வருகையை வரவேற்கின்றோம்.

மிகப்பெரும் அழிவுகளை சந்தித்த தமிழினத்தை ஐ.நா சபையும் கைவிட்டு விட்டதோ என்ற மன ஆதங்கம் எங்களிடம் நிறையவே உண்டு.

போரில் சிக்குண்டு எங்கள் உயிரைக் காப்பாற்றுங்கள் என்று தமிழ் மக்கள் மன்றாடிய போது ஐ.நா சபை அமைதியாக இருந்ததுதான் எங்களுக்கு இருக்கக்கூடிய மிக உச்சமான கவலை. இலங்கை அரசு எங்களைக் காப்பாற்றும் என்ற நிலைமை இருந்திருந்தால் இந்த நாட்டில் தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்திருக்க மாட்டார்கள்.

2009ஆம் ஆண்டில் நடந்த போரில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் தங்கள் வாழ்விடங்களில் குடியிருக்க முடியாத பரிதாப நிலையிலேயே உள்ளனர். காணாமல் போனவர்களை நினைந்து சதா கண்ணீர் விடும் உறவுகளின் அழுகைக்கு இன்னமும் முடிவு கிடைக்கவில்லை.

கூடவே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையின்றி பல ஆண்டுகளாக சிறைகளில் வாடுகின்றனர். தவிர, இன்னமும் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளதாயின் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்றுகிறது என்று எங்ஙனம் சொல்ல முடியும்?

மரியாதைக்குரிய ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அவர்களே! இந்த நாட்டின் 68 ஆவது சுதந்திர நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி நடந்த போது தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இதற்காக தென்பகுதியில் கொதித்தெழும் சிங்கள அரசியல்வாதிகள் இருக்கின்றனர் என்றால் இவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுக்க அனுமதிப்பரா என்ன?

ஆக, இலங்கையில் தமிழ் மக்கள் நிம்மதியாக-சுதந்திரமாக வாழ்வதாக இருந்தால் அது சர்வதேச சமூகத்தால்-ஐ.நா சபையின் இறுக்கமான தீர்மானங்களால் மட்டுமே முடியும்.

இதை தங்களின் வருகை உறுதி செய்யும் என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

## காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஐ.நா.ஆணையாளரைச் சந்திக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரை சந்திப்பதற்கு ஏற்பாடுசெய்து தருமாறு கோரி வடக்கில் காணாமல் போனோரின் உறவினர்கள் நேற்று முன்தினம்' வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்திலும் ஐ.நா. அலுவலகத்திலும் கடிதம் ஒன்றினை கையளித்துள்ளனர்.

வடபகுதியில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் நேற்று முன்தினம் திருமறைக் கலாமன்ற மணிமண்டபத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

அக்கலந்துரையாடலின் இறுதியில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இன்று யாழ். மாவட்டத்துக்கு வருகைதரவுள்ளநிலையில் காணாமல் போன தமது உறவினர்கள் தொடர்பான விசாரணைகளை சர்வதேச நீதிபதிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும்காணாமற்போன தமது உறவினர்கள் தொடர்பான உண்மை தகவல்களை வெளிப்படுத்தப்பட வேண்டும் என கோரிய மகஜர் ஒன்றினை அவரிடம் கையளிப்பதற்கான ஏற்பாட்டை செய்து தருமாறு கோரிய கடிதம் ஒன்றினை கையளிப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி நேற்று முன்தினம் மாலை வடமாகாண முதலமைச்சர் அலுவலகம் மற்றும் கோவில் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தல் காணாமல் போனோரின் உறவினர்களால் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## நற்கருணை விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை தும்பளை தூய லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல திருவிழாவின் நற்கருணைவிழாநாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறை கோட்ட முதல்வருமாகிய அருட்பணி ஏ.யாவிஸ் அடிகளாரின் தலைமையில் கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இத்திருத்தல திருவிழாவில் தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடனான நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கமையவே நாளை மறுதினம் 9ஆம் திகதி நற்கருணை விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் போது திருப்பலியும் ஆராதனையும் பவனியும் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.ஜே. ஜெபரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 10ஆம் திகதி புதன்கிழமை காலை 6.15 மணிக்கு திருப்பலியும் மாலை 4.30 மணிக்கு திருச்சிலுவைப்பாதையும் நடைபெறவுள்ளது.

11ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு திருப்பலி நடைபெறவுள்ளது. (இ-5)

## சமுத்திர தீர்த்தம்

மகோதய புண்ணிய காலத்தை முன்னிட்டு வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலின் சமுத்திர தீர்த்தம் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5,10)


## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில்08.02.2016 திங்கள் யாழ்.பிரதேசத்தில் செட்டி வீதியடி, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக் காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல் குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## நாமும் ஒருமுறை கெனசரேத் கலிலேயக் கரை சென்று வருவோமா?



இன்று இயேசு கெனசரேத் ஏரிக்கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சீமோன் பேதுருவினுடைய வள்ளத்திற்கு அதிசயமான முறையில் மிகுதியான மீன்பாட்டைக் கொடுப்பதையும் முதல் சீடரை அழைப்பதையும் இந்த பைபிள் பகுதி எமக்குத் தருகிறது. முதலில் இந்த ஏரியின் சிறப்பு பற்றி சிந்திப்போம்.

இஸ்ரயேல் நாட்டில் உள்ள நல்ல தண்ணீர் கொண்ட இந்த கெனசரேத் ஏரி பைபிளின் புதிய ஏற்பாட்டு நூல்களில் 'கலிலேயக் கடல'என்றும் 'திபேரியக கடல்' என்றும் அழைக்கப்படுகிறது. பைபிளில் பழைய ஏற்பாட்டின் பல பகுதிகளிலும் இப்பெயர் கினரேத்துக் கடல் என்றழைக்கப்படுகிறது. 'கின்னர' விடுகிறது.

2000 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஏரியில் மீன்பிடிக்கும் தொழில் செழித்தோங்கி வந்துள்ளது. இங்கு230 படகுகள் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்ததாக முதல் நூற்றாண்டு வரலாற்றாசிரியர் பிளாவியுஸ் ஜொசிபஸ் என்பவர் கூறுகிறார். இந்த ஏரியில் காணப்படும் திலாப்பியா மீனுக்கு தூய பேதுருமீன் என்னும் சிறப்புப் பெயர் உண்டு என்கிறார்கள். இயேசு பணிசெய்த காலத்திலேயே கலிலேயக் கடல் மிகவும் பெயர் போன இடமாக இருந்தது. 'கடலோர நெடுஞ்சாலை' என்னும் பெயர் கொண்ட வணிகப் பாதை அவ்வழியே சென்று,எகிப்து நாட்டையும் வடக்கு அரசுகளையும் இணைத்தது. அந்த ஏரிக்கரையில் உரோமையர் பல போது உரோமையர் எருசலேமைத் தாக்கினர். எனவே, யூதமக்கள் எருசலேமை விட்டு கலிலேயப் பகுதிகளுக்குச் சென்றனர். இவ்வாறு கலிலேயக் கடலும் கடற்பகுதியும், குறிப்பாக திபேரியாஸ் நகரும் முதன்மை பெறலாயின. கி.பி. 4-7ஆம் நூற்றாண்டு வரை கலிலேயக் கடல் பகுதி கிறிஸ்தவர்களின் திருத்தலமாகப் போற்றப்பட்டது. பின்னர் 12ஆம் நூற்றாண்டு வரை இஸ்லாமிய ஆதிக்கம் ஏற்பட்டது.20ஆம் நூற்

## பரமபிதா காட்டிய பாதை

என்னும் எபிரேயச் சொல்லுக்கு யாழ் என்று பொருள். இந்த ஏரி யாழ். வடிவில் உள்ளதால் அப்பெயர் பெற்றிருக்கலாம் . ஆயினும் சிலர் மனித இதயம் போன்ற வடிவம் கொண்ட இந்த ஏரிப் பகுதியில்தான் இயேசு கிறிஸ்துவின் பணி பெரும்பாலும் நிகழ்ந்தது என்கின்றனர். இயேசு இந்த கலிலேயக் கடல்மீது தான் நடந்தார் என்றும் இந்த கலிலேயக் கடலில் ஏற்பட்ட புயலை இயேசு அடக்கியது பற்றியும் பைபிள் கூறுகின்றது. இதன் நீளம் சுமார் 21 கி.மீ., அகலம் 13 கிமீ கொண்டது. ஏரியின் மிக அதிக ஆழம் 43 மீ.கடல் மட்டத்திலிருந்து 214 மீற்றர் நீரடி ஊற்றுகளிலிருந்தும் இயேசு திருமுழுக்குப் பெற்ற ஜோர்தான் ஆற்றிலிருந்தும் இந்த ஏரிக்குத் தண்ணீர் கிடைக்கிறது. கலிலேயக் கடல் வடக்கு இஸ்ரயேலில் அமைந்துளளது. ஆபிரிக்க மற்றும் அராபிய நிலத் தட்டுகள் பிரிவதால் ஏற்பட்டுள்ள ஜோர்தான் பிளவுப் பள்ளத்தாக்கில் இந்த ஏரியுள்ளது. எனவே, அதில் நிலநடுக்கம் ஏற்படுவது உண்டு. முற்காலத்தில் எரிமலைக் கொந்தளிப்பும் அங்கு நிகழ்ந்ததுண்டு. அமைதியே உருவான அழகிய கடல் இது. ஆனால், எர்மோன் மலையிலிருந்து வரும் குளிர்ந்த காற்று, திடீரென இதன் அலைகளைப படைகளாகத் திரட்டி, பேரொலிகளையும் பேரலைகளையும் எழுப்பிப் புயலாக மாற்றி நகர்களை நிறுவினர். கதாரா, ஹிப்போஸ், திபேரியாஸ் என்னும் அந்நகரங்களில் வாணிபம் செழித்தது. இயேசு பல முறை இக்கடலுக்கு வந்துள்ளார். இந்த ஏரிக்கரையில் மீனவர் குடியிருப்புகள் பல இருந்தன. அங்கு வாணிபம் சிறப்பாக நடைபெற்றது. இயேசு தமது முதல் திருத்தூதர்களை அழைத்த போது, இக்கடலில்தான் அவர்கள் மீன்பிடித்துக் கொணடிருந்தனர். இயேசுவின் வழிகாட்டலில் அவர்கள் ஏரியில் வலைகளை வீசிய போது அதிசயமான விதத்தில் பெருந்திரளான மீன்கள் வலைகளில் அகப்பட்டதுடன் வலைகளும் கிழியத் தொடங் கின. வேறு மீனவர்களும் துணைக்கு அழைக்கப்பட்டனர். படகு மூழ்கும் அளவுக்கு மீன்கள் கிடைத்தன. அவர்கள் வியப்பும் அச்சமும் மேலிட, இயேசுவின் கால்களில் விழுந்தார்கள். பின்பு மீன்பிடித தொழிலை விட்டு விட்டு அவர்கள் இயேசுவைப் பின் சென்றார்கள். அவர்கள் பேதுருவும் அவர்தம் உடன்பிறப்பு அந்திரேயா மற்றும் யோவானும் அவர்தம் உடன்பிறப்பு யாக்கோபுவும் ஆவர். கலிலேயக் கடலருகில் அமைந்த ஒரு மலையில் தான் இயேசு மலைப்பொழிவு என்ற ஒரு நீண்ட சொற்பொழிவு ஆற்றியதாக பைபிளில் மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

கி.பி.153இல் யூதர்கள் உரோமை ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

றாண்டில் ஜோர்தான் ஆறு, கலிலேயக் கடல் ஆகியவற்றின் நீரைப் பங்கிடுவது பற்றி இஸ்ரயேல் நாட்டிற்கும் சிரியா நாட்டுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. பல வருடங்களாக சரிவரப் பெய்யாத மழையும், 1985 இல் சுட்டுப் பொசுக்கிய வெயிலும் கலிலேயக் கடலைமிக மோசமாகப் பாதித்திருந்தன. இந்த நன்னீர் ஏரியிலிருந்து விவசாயத்திற்காகவும் தண்ணீர் எடுக்கப்பட்டது. அதனால், சேறும் சகதியுமான தரை வெளியே தெரியுமளவுக்கு ஏரியின் நீர்மட்டம் குறைந்து விட்டது. இயேசுவீன் காலத்தின்போது இந்தக் கலிலேயக் கடலில் பயணித்த 8.2 மீற்றர் நீளம், 2.3 மீற்றர் அகலம் கொண்ட ஒரு படகு 1986இல் கண்டு பிடிக்கப்பட்டது.

கலிலேயக் கடல் பகுதியில் இன்று சுற்றுலா முதன்மை பெற்றுள்ளது. திபேரியாஸ் நகரத்தையும் இயேசுவின் வாழ்க்கையோடு தொடர்புடைய இடங்களையும் சந்திப்பதற்குப் பல திருப்பயணிகளும் அங்கு செல்கிறார்கள். மீன்பிடித்தல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஏரிக்கரையில் வாழைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# அபிராமி அந்தாதி பாடல் நிகழ்வு நாளை

(கரணவாய்)

அபிராமி அன்னை தரிசன விழாவும் அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதி பாடல் நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் பி.ப. 4.30 மணியளவில் கொடிகாமம் தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி குமரநாதன் ஆசிரியர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மீசாலை சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக்கோட்ட ஸ்தாபகர் வள்ளல் அடிமை கனகசபாபதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

விசேட நிகழ்வான 100 கயிறுகளினால் ஊஞ்சல் அமைக்கப்பட்டு அபிராமிப்பட்டரை அமர்த்தி அபிராமி அந்தாதி பாடப்படும். அத்துடன் மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-5-29)





காரைநகர், வாரிவளவு, ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

**பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

கிரியாரம்பம்
தை 22 ம் நாள்
06.02.2016
சனிக்கிழமை

கும்பாபிஷேகம்:12.02.2016 வெள்ளிக்கிழமை
இராஜகோபுரம்: காலை 6.01-7.29 மணி
மூலஸ்தானம்: காலை 8.49-10.29 மணி

யாகாரம்பம்
தை 27 ஆம் நாள்
10.02.2016
புதன்கிழமை

தை 28 ஆம் நாள் (11.02.2016) வியாழக்கிழமை காலை 7.00 மணிமுதல் மாலை 2.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்

அன்றைய தினம் பஸ்தரிப்பிடத்தில் இருந்து காலை 5.00 மணிக்கு இ.போ.ச.பேருந்தும் 5.30 மணிக்கு தனியார் பேருந்தும் கோவிலுக்குச் செல்ல விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

-நிர்வாகஸ்தர்-

(சி-3708)



## இலவச நூல் வெளியீடு

வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் எழுதிய **"சமகால சுகாதாரப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்கும் வழி முறைகளும்"** இவ்வெளியீட்டினைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
இல. 05, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**தொலைபேசி இல. 021 222 2574**

(சி-3650)


# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர் சிக்கனக் கூட்டுறவுச்சங்க 39 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாவலர்கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் உப தலைவர் கோ.நரேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப் பொதுக்கூட்டத்தில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், யாழ்.மாநகரசபை-பிரதி ஆணையாளர் அ.சீராளன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


## வேலைவாய்ப்பு-பெண்கள் மட்டும்

கோப்பாயில் இயங்கிக்கொண்டு இருக்கும் பெண்களுக்கான ஆடை உற்பத்தி நிறுவனத்துக்கு தையல் பயிலுனர்கள் உடன் தேவை. பருத்துறை பேருந்து வழித்தடத்தில் இருந்து வருவோருக்கு முன்னுரிமை.

* அளவெடுத்து வெட்டி தைக்க தெரிந்தவர்களும் உடன் தேவை.
* சந்தைப்படுத்தலில் திறமையானவர்களும் தேவை.

சம்பளம் பேசி தீர்மானிக்கலாம். EPF, ETF வழங்கப்படும்.

விபரங்களுக்கு, பசுமை உற்பத்தியகம், பகவான் பாதை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்
தொலைபேசி : 0212231414, 0213203030 தொடர்பு நேரம் : 8.30am-4.30pm வரை
Email : evergreenmanufactory@gmail.com Web: www.egmfashion.com

(335)



Swiss Labour Assistance SAH

## கேள்விக்கான கோருதல்
## சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் (SAH) கிளிநொச்சி 021 228 5626

1.வதிவிட பிரதிநதி (Country Representative- SAH) பெறுகைக்குழு சார்பில் நாச்சிக்குடா சந்தி, முழங்காவில் பகுதியில் அமைந்துள்ள தையல் கம்பனிக்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்காக தகுந்த தகைமையுடைய கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

2.கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3.கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவண்ணயில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும், கறுப்பு பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வித் தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5.அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் - SAH, திருநகர், கிளிநொச்சி
தொலைபேசி இல : 021-228 5626 / 077-726 0672

6.அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை மேற்குறிப்பிட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 2016.02.08 முதல் 2016.02.15 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

7.கேள்விகள் 2016.02.15 ஆம் திகதியன்று 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் - SAH, திருநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். நேரடியாக கீழே உள்ள முகவரிக்கு வருகைதர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.

8.கேள்வி தொடர்பான முதற் கூட்டம் இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் - SAH, திருநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் 2015.02.11 அன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

9.கேள்வி செல்லுபடியாகும் காலப்பகுதி விலைமனுவின் இறுதி நாளிலிருந்து மூன்று மாதங்களாகும்.

10.சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11.ஒவ்வொரு கேள்விகளுக்கும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மொத்த மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப்பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| SAH/NORTH/1140 | தையல் கம்பனிக்கான கட்டடம் | 4.1 | 4 மாதங்கள் (120 நாட்கள்) | C7 அல்லது அதற்கு மேல் | 41.000.00 | 2016.04.15 |

**தொடர்புகளுக்கு:- இல. 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ்- SAH, திருநகர், கிளிநொச்சி.தொலைபேசி இல:- 021 228 5626, 077 726 0672**

(3506)


## இராசி பலன்

07.02.2016
(தை 24, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
சதுர்த்தசி முன்னிரவு 10.42 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 6.43 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை, புனர்பூசம் | | |
| சூரி புத சந் | | | ராகு |
| சுக் | சனி | செவ் | குரு |

**மீனம்** தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு.

**இடபம்** தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

**கும்பம்** உறவினர் நலன்கருதிய சுப செலவுகள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறலாம்.

**கடகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், விருந்துகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**மகரம்** கொடுக்கல்- வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், பெரியோர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும், சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வெற்றிச் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உறவினர் வருகையுண்டு.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பெருமைகள் கூடும், சுபகாரியச் செலவுகள் கூடும் நாள்.

**கன்னி** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

## பாதிக்கப்பட்டோர் நம்பிக்கை...

10ஆம் திகதிவரை தங்கியிருக்கவுள்ள இவர் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் இலங்கை தொடர்பில் தான் முன்வைத்த பரிந்துரைகள் ஆகியவை தொடர்பில் அரச தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிப்தி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் அரசாங்கத்தின் அமைச்சர் கள் பலரையும் சந்தித்து இவர் பேசசு வார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், முப்படைகளின் தளபதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், தேசிய மனித உரிமை ஆணைக்குழு மற்றும் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளுடனும் அவர் கலந்துரையாடவுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிக்கு விஜயம் செய்யவுள்ள ஐ.நா மனித உரிமை ஆணையாளர், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் வட மாகாண ஆளுநர, சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். மேலும் திங்கட்கிழமை திருகோணமலைக்கு செல்லவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், கிழக்கு முதலமைச்சர், ஆளுநர் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

இதையடுத்து கண்டி செல்லும் ஹுசைன் தலதா மாளிகை சென்று மகாநாயக்கர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதன் பின்னர் கொழும்பு சென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அரச தரப்பினருடனான சந்திப்பின்போது விசாரணைப் பொறிமுறை, நீதிவழுங்கும் செயற்பாடு, காணாமல்போனோர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

விசேடமாக ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக எவ்வாறு உள்ளக விசாரணை வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென அரசாங்க தரப்பில் செயிட் அல் ஹுசைனுக்கு விளக்கமளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினர் ஆணையரின் வருகை தமக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையில் உள்ளனர். (12)

## ஹுசைனுக்கு...

லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று மாலை நடைபெற்றது. போர்க்குற்றம் தொடர்பான நீதிமன்றத்தை ஸ்தாபிக்கவே மனித உரிமை ஆணையாளர் இலங்கை வந்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல வீரவன்ஸ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாக சென்று தும்முல்லை சந்தியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு எதிரிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐக்கிய நாடுகளின் அலுவலகத்திற்கு கடும் பொலிஸ் பாதுகாப்பு போட்டப்பட்டிருந்தது.

இதேவேளை இலங்கையை கறைபடிந்த நாடாக மாற்றவே ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இலஙகைக்கு வருவ தாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில்முன்னாள் ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (12)

## இன்று யாழ்ப்பாணம்...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் செயிட் அல் ஹுசைன் உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை இலங்கைக்கு மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு இன்றையதினம் விஜயம் செய்யவுள்ள நிலையில் ஆணையாளரின் பாதுகாப்பு பிரிவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்து பாதுகாப்பு முன்னேற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுக் காலை 8.25 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை டுபாயிலிருந்து வந்த ஈகே 650 என்ற விமானத்தில் வந்த செய்ட் அல் ஹுசைனுடன் 6 பிரதிநிதிகளும் வருகை தந்தனர்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள செயிட் அல் ஹுசைன் எதிர்வரும் 9 ஆம்திகதி வரை நாட்டில் தங்கியிருப்பதுடன் அரச தரப்பு, எதிர்த் தரப்பு மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்டோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதுடன் வட மாகாணத்திற்கும் இன்றையதினம் விஜயம் செய்யவுள்ளார்.

இன்றையதினம் யாழ்பபாணத்தற்கு வருகை தரும் அல் ஹுசைன் இன்று காலை வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர் ஆகியோரினை சந்திக்கவுள்ளார்.

இது தவிர போரில் பாதிக்கப்பட்ட சில ரினையும் அவர் சந்திக்கவுள்ள தாக அறிய முடிகின்றது.

இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்படும் உள்ளக விசாரணைப் பொறிமுறை செயற்பாட்டில் வட மாகாணத்தின் பங்களிப்பு முக்கியத்துவமிக்கதாக இருக்குமென கருதப்படுகின்ற நிலையிலேயே செயிட் அல் ஹுசைன் வடமாகாண முதல்வருடன்பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றார்.

விசேடமாக விசாரணை பொறிமுறையின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் செயற்பாடு எவ்வாறு அமையும் என்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்றைய தினம் யாழ்.வந்த ஆணையாளரது பாதுகாப்பு பிரிவு, அவர் யாழில் மேற்கொள்ள வேண்டிய சந்திப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர்.

மேலும் யாழ் வருகை தரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் அல் ஹுசைனை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி ஆகியோரினை கோருவது என காணாமல்போனோரின் உறவுகளினால் தீர்மானிக்கப்பட்டு,

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கையெழுத்துக்களுடன் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கடிதம் ஒன்றும் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதிக்கான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டது. மனிதவுரிமை ஆணையாளருடனான சந்திப்பு சாத்தியப்பட்டால் எவ்வாறான விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டும் எனவும் திருமறைக்கலா மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் தமிழ் மக்கள் தொடர்பில் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றார்.

இவ்வாறான நிலையில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என முடிவெடுக்கப்பட்டே, அவருடனான சந்திப்பினை கோருவது என முடிவெடுக்கப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சரிடமும் கோரப்பட்டது.

இந்நிலையில் இன்றையதினம யாழ்.வருகை தரும் மனிதவுரிமை ஆணையாளர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினை சந்திப்பாரா? இல்லையா? என்பது தொடர்பில் நேற்று வரை எந்த பதில்களும் கிடைக்கப்பெறவில்லை.

அவர் சந்திப்பது சாத்தியமற்று போனால், கவனஈர்ப்பு போராட் டம் ஒன்று முன்னெடுக்கப்பட போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## நல்லாட்சியை பழித்து...

ர்கள் ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்வில் ஆட்சியை விரட்டி யடிப்பதற்கு இறையாசி வேண்டும்' எனக் கோரி விசேட பூஜை வழிபாடுகளும் இடம் பெற்றது.

பாரிய நிதி மோசடி விசாரணை பிரிவு ஊடாக அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருகின்றது.

அத் துடன், ஜனநாயக விரோத செயற் பாடுகளும் தலை தூக்கியுள்ளன.

இந்நிலையிலேயே அரசை விரட்டி யடிப்பதற்கு இறை ஆசி வேண்டி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸ்நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்கு எதிராக தேங்காய் உடைக்க சீனிகம ஆலயத்திற்கு சென்றிருந்த கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவின் பணப்பை திருடடு போயுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் ஆலயத்தில் அருகில் உள்ள உணவகம் ஒன்றில் இருந்து தினேஷ் குணவர்தன உட்பட மேலும் இருவரது பணப்பைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சீனிகம ஆலயத்திற்கு தேங்காய் உடைப்பதற்காக சுமார் 1100 பேர் சென்றிருந்ததாக புலனாய்வு தரப்பினர் கூறுகின்றனர்.

இதேவேளை காலி, உடுகம நாகொட பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான தென்னந் தோட்டத்தில் தேங்காய் திருடிய சம்பவம் தொடர்பில் நாகொட பிரதேச சபையில் பணி புரியும் இரண்டு ஊழியர்களும் பிரதேச சபை அரசியல் வாதியின் தோட்டத்தில் தொழில் புரியும் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சீனிகம ஆலயத்தில் உடைப்பதற்காக இந்த தேங்காய் திருடப்பட்டிருப்பதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (12)

## இலங்கை - இந்தியா உறவை...

நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை இந்திய தொழில்நுட்ப வளர்ச்சியை வெளிப்படுத்தும் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உரையாற்றிய போது, இந்திய, இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 9 ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து ஆராய்வதே எனது விஜயத்தின் நோக்கமாக இருந்தது.

இதன்போது அரசியல், பொருளாதாரம், கலாசாரம், பாதுகாப்பு மற்றும் மக்கள் தொடர்பு குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. இந்த விடயங்களில் இணங்கி செயற்படுவது தொடர்பிலும் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருடனான சந்திப்புக்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. இந்த சந்திப்புக்களின் மூலம் இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையிலான உறவு ஒரு புதிய கட்டத்தினை எட்டும் என்று நான் நம்புகின்றேன்.

அத்துடன், டிஜிட்டல் உலகில் இரு நாடுகளும் முகம் கொடுக்கும் தகவல் தொழில் நுட்பம் குறித்து வெளிவிவகார அமைச்சருடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது இரு நாடுகளும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் இணைந்து செயற்பட வேண்டிய தன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது.

உலகத்திற்கு ஏற்றவாறு இந்தியாவில் டிஜிட்டல் தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்வது போன்று, தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று சுஷ்மா சுவராஜ் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (12)

## இந்தியா நினைத்தால் தீர்வு...

இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நேற்று சனிக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்ரா நட்சத்திர விடுதியில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இச்சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுடனான சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாங்கள் பேசினோம்.

குறிப்பாக, இந்திய மீனவர்களின இழுவை படகுகள் மூலமான மீன்பிடி நடவடிக்கைகளை தடைசெய்தல், மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் நாங்கள் பேசினோம்.

காணாமல் போனோர்கள் இறந்திருந்தால் அவர்களுடைய குடும்பங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதான நட்டஈடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

இந்தியா நினைத்தால் இலங்கையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என நாங்கள் கூறினோம். இதன்போது இந்திய அரசின் முழு பங்களிப்பும் இலங்கைக்கு கிடைக்கும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எம்மிடம் உறுதியளித்தார் என சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சுஷ்மா சுவராஜுடன் இந்திய வெளிவிவ காரச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராஜா மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (12)

## தனித்து இயங்க அனு...

விடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ராஜபக்ஷக்களின் தலைமையில் புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் கூட்டு எதிர்க்கட்சியினர் அதற்கான வழியையே அமைத்து வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (12)

## சிறுநீரக மோசடி...

விசாரணை அறிக்கையை சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவிடம் ஒப்படைத்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைக் குழு கடந்த 23-ம் திகதி முதல் தனியார் மருதது வமனைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சட்டவிரோத சிறுநீரக வர்த்தகம் தொடர்பில் விசாரணை நடத்தியிருந்தது.

மூன்று நாட்களில் விசாரணை நடத்துமாறு பணிக்கப்பட்டிருந்த போதிலும், விரிவான விசாரணைகள் காரணமாக உரிய நேரத்தில் அறிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை என ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார். (12)

## மீன்பிடி அமை...

ணயிக்கப்படவில்லை.

இந்திய-இலங்கை மீனவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் மஹிந்த அமரவீர இந்தியா விஜயம் செய்ய உள்ளார்.

இந்த ஆண்டில் பெரும் எண்ணிக்கையிலான இந்திய மீனவர்களும் படகுகளும் கைது செய்யப்படும் என முன்னதாக அமைச்சர் அமரவீர அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## சந்திரிகா...

கிழமை காலை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கவின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கையில் நல்லிணக்கத்தையும், அமைதியையும் ஏற்படுத்த முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் தொடர்பாக இவர்கள் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பணியகத்தின் தலைவராக பணியாற்றி வரும் சந்திரிகா குமாரதுங்கவும், சுஷ்மா சுவராஜும் நீண்ட கால நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## மணி விழா வாழ்த்து



" பொன்மனச் செம்மல் "
" மனிதநேய ஈகையாளன் "
" கல்விக் காருண்யன் "
என்னும்
கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு. **E.S.P நாகரத்தினம்**
அவர்களின் மணிவிழா சிறக்க வாழ்த்துக்கள்

பிச்சை புகினும் கற்கை நன்றே
என்ற ஔவையின் முது மொழிக்கிணங்க
கல்விச் சேவைக்கு நிதியை அள்ளி
வழங்கும் அண்ணலே வள்ளலே
மணிவிழா நாயகனே
வாழ்க வளமுடன்

314, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
வாழ்த்துவோர் :
கலாபூஷண லெட்சுமணன்-கெங்காதரன் (ஆச்சாரி)
(C-3714)






## வாசல் திறக்கிறது ஐரோப்பா!

**Study in Romania**
(ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடு)



வங்கி பண வைப்பு,
**IELTS**
அவசியமில்லை
With Work Permit & PR
பிரத்தியேக தூதரக அங்கீகாரம் கொண்ட
பிரதிநிதியூடான சேவை
(சி-3704)

SIKARAM
Any Visa to Any Country
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



இழந்த சக்தியை மீண்டும்
பெற்றிட பாவியுங்கள்
## றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக் கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PAKED BY: ROYAL Industries
T.P : 0777277670 Colombo.13
அனைத்துப் பார்மசிகளிலும்
கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்
சிவா
நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 2567

- விளையாட்டுத் துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங் கனைகளுக்கும் வீறு கொண்டெழும் விசேட சக்தியை வழங்குவது **றோயல் குளுக்கோஸ்.**
- நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது **றோயல் குளுக்கோஸ்.**
- காலை முதல் மாலை வரை வேலை அதிகம் காரணமாக சோர் வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது **றோயல் குளுக்கோஸ்.**
- மழலைகட்கும் மகப்பேற்றுத் தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் மூதாதையர் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது **றோயல் குளுக்கோஸ்.**

உற்பத்தியாளர் : றோயல் இன்டஸ்றீஸ், வூல்வொண்டல்ஸ்றீற், கொழும்பு - 13.
சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா.
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
(சி-3702)



## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு
பொருத்தமானவர்களிடம் இருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம் - பெண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (வெளியகம் - ஆண்கள்)

தகைமையும் ஆர்வமும் உடையவர்கள் எதிர்வரும் 09.02.2016 அன்று பிற்பகல் 3.30மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

இல.03, 02ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
மனிதவள முகாமையாளர்
வலம்புரி
(இ)



### தபால் மூலமான ஆங்கிலக்கல்வி
தரம் 1 முதல் 11 வரையான மாணவர்களுக்கான ஆங்கில வினாத் தாள்களை வீட்டிலிருந்தவாறே தபால் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்
தொடர்புகளுக்கு: 0770556375
(C-3713)



### தேவை
- இலங்கையின் முதற்தர பழச்சாறு நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. (சிங்களம்) பேசத் தெரிந்தவர் மட்டும்
- வாடகை அடிப்படையில் வாகனம் தேவை

(3526) 076 9865 238



### நடமாடும் மிருகவைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைக்கு
தொடர்பு: Dr. கிருபாகரன். 0779738802
(3517)
நாவலர் வீதி மாலை: 4- 6 P.M


## சீன அமைச்சரும்...

நிலையுத்தில் குறுகிய நேரம் தரித்து நின்ற போதே இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நிலையில இடம்பெற்ற இச்சந்திப்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவும் கலந்து கொண்டிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாண்டு சீனாவுக்கு பயணம் செய்யவுள்ள நிலையில், அவரின் பயண ஏற்பாடுகள் மற்றும் அதற்கு முனர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இச்சந்திப்பும் பயனுள்ள வகையில் அமைந்திருந்ததாக பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (12)


### வேலையாள் தேவை
அப்பம், கொத்து வேலை தெரிந்த வேலையாள் தேவை
(வெளி மாவட்டத்தவர்களுக்கு தங்குமிடம் வழங்கப்படும்)
Contact : RATNAM HOTEL
615B, Navalar Road,
Jaffna
077 808 56 56
(3515)



யாழ் BCAS CAMPUS இல் புதிய பிரிவுகள்...
PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University





UK Degree in
**Quantity SURVEYING**
Leading to BSc (Hons)
(சி-3648)

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

RECOGNIZED UGC RECOGNIZED

www.bcas.lk

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna
Tel : 021 221 9910
Hotline 077 710 2131
16 YEARS
Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Ampara | Qatar



FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
## பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1037 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 20.02.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 22.02.16 Mon@ 4pm.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(சி-3647)



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-3703)



## புதிய பிரிவுகள் ஆரம்பம்
LONDON METROPOLITAN COLLEGE

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**IELTS**
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing



LONDON METROPOLITAN COLLEGE
LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
HOTLINE : 0774765990 I 021 753 8395
(சி-3649)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2047 07.02.2016 தொலைபேசி : 021 222 3378
நாதம் 52



# தமிழ் மக்கள் பேரவை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# சுதந்திர தினத்தன்றும் கண்ணீருடன் தமிழர்கள்

இலங்கையின் 68ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் காலிமுகத்திடலில் இடம்பெற்றது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை சிறப்பம்சம்.

சுதந்திரதின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இரண்டாவது சுதந்திரதின கொண்டாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் பங்கேற்றிருந்தார்.

ஓராண்டு கால ஆட்சியை கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதியுடன்பூர்த்திசெய்தமைத்திரி-ரணில் தலைமையிலான இந்த நல்லாட்சி அரசின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை மகிந்த அணியினர் முற்றாகப் புறக்கணித்திருந்தனர்.

தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படும் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்ததால் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கவில்லை என்று விளக்கமளித்துள்ளார்.

சம்பிக்கவின் இந்தச் செயற்பாடு நகைப்புக்குரியது. மகிந்தவுடன் இணைந்து இருந்ததால் அவ்வாறு செயற்பட அவருக்கு தோன்றியிருக்கலாம். இல்லையேல் யாராவது அவருக்கு இவ்வாறு செயற்படுமாறு ஆலோசனை வழங்கியிருக்கலாம்.

மகிந்தவுடன் நீண்டகாலமாக இணைந்திருந்து அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த சம்பிக்க, தக்க தருணத்தில் மைத்திரிக்கு ஆதரவு அளித்து நல்லாட்சி அரசிலும் அமைச்சராகவுள்ளார்.

விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்ற கடும் இனவாதச் சிந்தனையுடையவர்களுடன் ஒப்பிடும் அளவிற்கு அனைத்துப் பொருத் தங்களையும் தன்னகத்தே கொண்டவர் சம்பிக்க.

அதனை மீண்டுமொரு முறை சம்பிக்க நிரூபித்துள்ளார்.

நல்லாட்சி அரசிலும் நல்லிணக்கத்துக்கு தடையேற்படுத்தும் நபர்கள் முக்கிய பதவிகளில் உள்ளதால் தமிழில் தேசிய கீதம் பாடுவதன் மூலம் எதனையும் அரசு சாதித்து விடமுடியாது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தை மக்கள் புறக்கணிக்க முற்படும் போது அந்த மக்கள் பேசும் மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதால் என்ன பயன்.

நல்லிணக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசு என்றால் முதலில் மக்களின் கண்ணீரைப் போக்க முற்பட்டிருக்க வேண்டும்.

கொடிய யுத்தத்தை எதிர்கொண்டு உயிரிழப்புக்களையும் உடைமை இழப்புக்களையும் தாங்கிக் கொண்டு தொலைத்த உறவுகளைத் தேடியலையும் மக்களுக்கு தேசிய கீதத்தை தமிழில் இசைப்பதன் மூலம் மனஆறுதலைக் கொடுத்துவிட முடியாது.




அவ்வாறு செய்துவிட முடியும் என்று அரசு நினைத்தால் நல்லிணக்க முயற்சிகள் நாசமாகத்தான் போகும்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் 2009ஆம் ஆண்டு மேமாதம் 18 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை பல போராட்டங்கள், மகஜர் கையளிப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இருப்பினும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் சிதைந்து போயுள்ளன.

பிள்ளைகளைப் பறி கொடுத்துவிட்டு ஒவ்வொரு நாளும் ஏக்கத்துடன் காத்திருக்கும் பெற்றோரை மனநோய் சாகடித்துக் கொண்டிருக்கிறது.

உறவுகளை மீட்டுத் தரக்கோரி வீதிகள்,கோவில்களில் கூடி மன்றாடுகின்றனர்.

கண்ணீருடன் அவர்கள் விடும் கோரிக்கைகள் அதிகார வர்க்கத்தின் காதுகளில் விழுவதாகத் தெரியவில்லை.

அலட்சியப் போக்குடனும் அதிகாரத்தொனியுடனும் அரச தலைவர்கள் கூறும் கருத்துக்கள் உறவுகளைத் தொலைத்தோரை வாட்டி வதைக்கின்றன.

வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் எத்தனையோ ஆயிரம் தமிழ்க்குடும்பங்கள் வாழ்வாதாரத்துக்காக போராடிக் கொண்டு உறவுகளை உயிருடன் மீட்டுவிட வேண்டும் என்றும் போராடுகின்றன.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் ஒருபுறம் சிறைச்சாலைகளில் அடைபட்டு இளமைக்காலத்தை தொலைத்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் மறுபுறம் உறவுகளின் விடுதலைக்காக கண்ணீருடன் காத்திருக்கின்றனர்.

காணிகளில் இராணுவம் படைமுகாம்களையும் விவசாயம், விளையாட்டு மைதானங்களையும் ஹோட்டல்களையும் அமைத்து குதூகலமாக வாழ்க்கையை அனுபவித்து வரும்போது வாழவழியின்றி வாடகை வீடுகளிலும் வசதிகளற்ற நலன்புரி முகாம்களிலும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்கின்றனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஆறுஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தமிழினம் அவலங்களிலிருந்து விடுபடமுடியாமல் அன்றாடம் அவதிப்படுகிறது.

அரசியல் ரீதியாக மாற்றம் ஏற்பட்டால் தமது வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும் என்ற ஏக்கத்துடன் மாற்றத்துக்காக வாக்களித்த தமிழ் மக்களுக்கு அரசின் கொள்கை மாற்றம் பெறாதது மனவேதனையை அதிகரித்துள்ளது. மக்களின் மனவேதனையை அரசு நன்கு அறிந்துள்ள போதும் அவர்களின் மனவேதனையை போக்க முற்படவில்லை.



தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நம்பி தமது வாக்குகளை அளித்த மக்கள் ஏமாற்றத்துடன் நொந்து போயுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் இடம்பெறும் காலத்தில் ஒரு நிலைப்பாட்டையும் அதற்குப் பின்னரான காலப் பகுதியில் ஒரு நிலைப்பாட்டையும் எடுத்து தமிழ் மக்களை ஏமாற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இதை பட்டவர்த்தனமாக அறிந்திருந்தும் தமிழ் அரசியல் தலைவர்கள் அரசுக்கு ஏற்றால் போல் சர்வதேச நாடுகளை ஏமாற்ற துணை போகின்றனர்.

நல்லிணக்க செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கும் என்ற நம்பிக்கையில் பல விட்டுக்கொடுப்புக்களை தமிழர் தரப்புச் செய்துள்ளது.

ஆனால் அவற்றுக்கெல்லாம் பிரதிபலனாக எதையும் செய்ய நல்லாட்சி அரசும் இதய சுத்தியுடன் முன்வரவில்லை.

தமிழில் தேசிய கீதத்தை இசைப்பதன் மூலம் நல்லாட்சியை வெளிப்படுத்தலாம் என அரச தலைவர்கள் முடிவெடுத்ததற்கு பதிலாக கண்ணீருடன் அலையும் தமிழர்களின் அவல நிலையை போக்க எத்தணித்திருந்தால் கறுப்புக் கொடியுடன் தமிழர்கள் வீதியில் அமர்ந்திருக்க மாட்டார்கள். யாழ்.பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் சுதந் திர தினத்தன்று கறுப்புக் கொடி கட்டி எதிர்ப்பு தெரிவித்திருக்க முற்பட்டிருக்க மாட்டார்கள்.

அடக்கு முறைகளையும் அநீதிகளையும் அட்டூழியங்களையும் எதிர்கொண்ட தமிழினத்துக்கு தேசிய கீதம் என்பதே விருப்பமில்லாத ஒன்றுதான்.

இந்நிலையில் அதைத் தமிழில் பாடினால் என்ன? சிங்களத்தில் பாடினால் என்ன? தமிழர் தாயகத்தில் இலங்கையின் தேசிய கீதம் கடந்த காலங்களில் எத்தகைய முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதை தமிழ் மக்கள் ஏற்க முற்பட்டனரோ? என்ற பல கேள்விகள் உள்ளன.

எனவே தமிழ் மக்கள் அரசிடம் எவற்றை எதிர்பார்க்கின்றனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

பூர்வீக காணிகளை இழந்த நிலையில் மீள்குடியேற்றத்துக்காகவும் இழந்த வாழ்வாதாரத்தையும் குடும்ப கௌரவத்தையும் மீட்கப் போராடும் தமிழ்க் குடிகளுக்கு தமிழில் தேசிய கீதம் இரண்டாம் பட்சமே.

காணாமற்போன உறவுகளைத் தேடியலையும் தாய்மார்களுக்கும் கணவனை பறிகொடுத்து விட்டு காத்திருக்கும் இளம் குடும்பப் பெண்களுக்கும் சகோதரர்கள், எங்கே என ஏங்கிக்கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கும் தமிழில் தேசிய கீதம் இரண்டாம் பட்சமே. இதைவிட தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள், கணவனை இழந்த பெண்கள், போரில் அங்கவீனமுற்று வறுமையுடன் சதாகாலமும் போராடும் குடும்பங்களுக்கு தமிழில் தேசிய கீதம் பாடினாலும் ஒன்றுதான் சிங்களத்தில் பாடினாலும் ஒன்றுதான். நல்லாட்சி அரசினால் கொண்டாடப்பட்ட சுதந்திர தினத்தை தமிழர்கள் புறக்கணித்தது மட்டுமல்லாது எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

கறுப்புக்கொடிகளை கட்டியபடி காணாமற்போனவர்களின் உறவினர்கள் வவுனியா மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கண்களில் கண்ணீருடன் கதறிய உறவுகள் உயிரை மாய்த்துக் கொள்ளபோவதாகவும் எச்சரித்தனர்.

சுதந்திர தின கொண்டாட்டத்தில் சிங்கள வர்கள் ஈடுபட்ட போது தமிழர்கள் அதை எதிர்த்து கண்ணீருடன் போராடும் நிலையிலேயே இன்றும் உள்ளனர். அதுமட்டுமன்றி அரசின் சுதந் திர தின கொண்டாட்டத்தில் பங்கு கொண்டிருந்த எதிர்க்கட்சித்தலை வர் இரா.சம்பந்தனின் கண்களில் கண்ணீர் வந்ததாகவும்செய்திகள்வெளியாகியிருந்தன.

சுதந்திர தினத்தை எதிர்த்த தமிழர்களும் ஆதரித்த தமிழர்களும் அழுவதைத் தவிர்க்க அரசு முற்படவில்லை என்பதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக்கூறுகின்றன.

முழு நாட்டு மக்களுக்கும் சுதந்திரதின கொண்டாட்டத்திற்கான சூழல் இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதை உலகநாடுகள் இனியாவது உணர்வது அவசியம்.

எஸ்.ஆர்.கரன்

# ஆலடி மாநாடு

வழமைபோல் பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இறைவணக்கத்துடன் ஆரம்பாகிய மாநாட்டிற்கு அனைத்து உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர்.

**பண்டிதர்:** கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கலாநிதி கதிர்காமநாதன் அவர்களின் மறைவு எங்களுக்குப் பேரிழப்பு. முதலில் அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம்.

(பண்டிதரின் அறிவிப்போடு மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி நிறைவு செய்தனர்)

**பண்டிதர்:** *31.01.2016* அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்மக்கள் பேரவையின்ர கூட்டத்திற்கு முன்கூட்டியே போனபடியால் கதிரை கிடைத்தது இல்லை எண்டால் கஷ்டப்பட்டிருப்பம்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா தமிழ்மக்கள் பேரவையின்ர கூட்டத்திற்கு வந்தவர்களின்ர தொகையைப் பார்த்தியளோ! குறைந்தது ஆயிரத்து 500 பேர் இருக்கும். இளைஞர்கள்தான் அதிகம்.

தமிழ்மக்களின்ர வரலாற்றில இப்படியொரு நிகழ்வை நான் பார்த்ததில்லை.

**வாத்தியார்:** ஏன் விதானையார் தமிழ்மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் தயாரித்த தீர்வுத் திட்டத்தை உலகுவாழ் தமிழர்கள் அனைவரும் மிகப் பிரமாதமான தீர்வு என்று புகழாரம் சூட்டியிருக்கினம்.

**மூப்பர்:** அது சரி தமிழ்மக்கள் பேரவையின்ர கூட்டத்தில வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா கலந்து கொள்ளக்கூடாது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 20பேர் கையெழுத்திட்டு பேரவையின்ர கூட்டம் நடப்பதற்கு முதல் நாள் இரவோடு இரவாக கடிதம் கொடுத்தவியளாமல்லோ.

**கங்காணி:** அதுமட்டுமோ கூட்டம் நடக்கிற 31 ஜனவரி 2016 அன்று காலையில மாகாண சபை உறுப்பினர் ஒருவர் முதலமைச்சரைச் சந்தித்து என்ர ஐயா! பேரவையின்ர கூட்டத்திற்குப் போகாதீங்கோ. நாங்கள் 20 பேர் கையொப்பம் இட்டுக் கடிதமும் தந்தனாங்களல்லோ. கூட்டத்திற்கு போகாதீங்க என்று கெஞ்சினவராம்.

**விதானையார்:** இஞ்சே கங்காணி கதையத் தெளிவாகச் சொல்லுங்க.

இருபது பேர் கையொப்பம் வைத்து 30.01.2016 அன்று இரவு 8 மணியளவில் முதலமைச்சரைச் சந்தித்து எங்கட ஐயா! நீங்கள் எங்களோட இருக்க வேணும் ஐயா என்று கெஞ்சினவியளோ!

அல்லது மறுநாள் 31 ஆம் திகதி காலையில விக்கி ஐயாவைச் சந்தித்த எஞ்சினியர் கெஞ்சினவரோ.

**வாத்தியார்:** யார் கெஞ்சினது என்பதல்ல பிரச்சினை கடந்த மாதம் மாகாண சபை உறுப்பினர்களுடன் நடந்த சந்திப்பில தமிழ்மக்கள் பேரவையில இருந்து நான் ஒருபோதும் விலகமாட்டன் என்று முதலமைச்சர் மிகத் தெளிவாகச் சொல்லிப் போட்டார். அவர் கூறியதை மாகாண சபை உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டவியள்.

பிறகு தான் 20 பேர் கையொப்பம் இட்டு கடிதம் கொடுத்தவியளாம்.

**கங்காணி:** என்ன இருந்தாலும் பேரவைக் கூட்டத்திற்குப் போக வேண்டாம் என்று கூட்டத்திற்கு முதல் நாள் இரவோடு இரவாக கடிதம் கொடுப்பது பற்றி யாரோ ஒருவர் ஐடியாப் போட்டவர் அல்லோ. அவர்தான் 2016ஆம் ஆண்டில் சிறந்த இராஜதந்திரி.



*(கங்காணி இப்படிச் சொன்னதும் சபையில் சிரிப்பொலி)*

**விதானையார்:** அப்ப கங்காணியார் கடிதம் கொடுப்பதற்கு ஐடியா போட்டவரை கூட்டிக்கொண்டு வந்தால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பர் எண்டு சொல்லுறியள் அல்லோ.

*(மீண்டும் சிரிப்பொலி)*

**பண்டிதர்:** பேரவைக் கூட்டத்திற்குப் போக வேண்டாம் என்று இருபது பேர் போட்ட கையெழுத்தில கள்ளக் கையெழுத்தும் இருப்பதாகக் கேள்வி.

**மூப்பர்:** அட நாசமறுப்பு! கள்ளக் கையெழுத்தும் போட்டவியளோ! இது பற்றி முதலமைச்சர் கட்டாயம் நடவடிக்கை எடுக்கவேணும்.

**கங்காணி:** அதுசரி வடக்கு மாகாண சபையின்ர ஆளுந்தரப்பு உறுப்பினர்களைக் கூட்டி பேரவைக் கூட்டத்திற்கு முதலமைச்சர் போகக்கூடாது என்று கடிதம் தயாரிப்பதற்கு தலைமை தாங்கியது யார்? இப்படியொரு கூட்டம் நடப்பது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் முதலமைச்சருக்குத் தெரியப்படுத்தினவர்களா? என்பது பற்றியும் ஆராயிறது அவசியம் பாருங்கோ.

முதலமைச்சருக்கு அறிவிக்காமல் சபை உறுப்பினர்களைக் கூட்டுவதும் சட்டவிரோதமான செயல் தானே! அது சரி கள்ளக் கையெழுத்து போடுகிறவியளிட்ட நீதி, நியாயம், சட்டம் என்பவற்றை எதிர்பார்ப்பது எந்த வகையிலும் பொருந்தாது.

**பண்டிதர்:** ஓமோம் 20 பேர் கையொப்பம் இட்டு இரவோடு இரவாக முதலமைச்சரைக் கெஞ்சியும் அவர் அசையமாட்டன் எண்டு போட்டார்.

பிழையான ஒரு விடயத்தை எத்தனைபேர் வந்து கேட்டாலும் அது பிழை தான் என்ற மகா தத்துவத்தை விக்கி ஐயா உபதேசித்து அனுப்பி வைத்தவராம்.

**கங்காணி:** அட சங்கதி அப்படியோ.

**விதானையார்:** அது சரி பண்டிதர் ஐயா தமிழ்மக்கள் பேரவையின் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்தவியள் அல்லோ!

**பண்டிதர்:** தமிழ்மக்கள் பேரவை மாவை சேனாதிராஜாவை மட்டுமல்ல வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பி னர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், சிங்கள மக்கள், முஸ்லிம் சகோதரர்கள் என அனைவரையும் சந்திக்கவேணும். பேரவை ஒரு மக்கள் இயக்கம். சந்திப்பில பேரவைக்கு எந்தப் பாகுபாடும் தேவையில்லை.

**கங்காணி:** மாவை. சேனாதிராஜாவை இரவோடு இரவாகச் சந்தித்து தமிழ்மக்கள் பேரவை கெஞ்சினது என்று ஒரு செய்தி.


**வாத்தியார்:** சிவன்ர வீட்டில கலகம் செய்யிறதெண்டால் நாரதர் இரண்டு மாம்பழம் கொண்டு போகக்கூடாது. ஒரு மாம்பழம்தான் கொண்டு போக வேணும். இதுகளைக் கண்டு பேரவை கலங்கக் கூடாது. ஏனென்டால் மாவை.சேனாதிராஜாவுடன் நடந்த சந்திப்பில எங்கட தமிழ் மண்ணிற்குப் பெருமை தரக்கூடிய இருதய வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், பொது வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன், சத்திர சிகிச்சை நிபுணர் ரவிராஜ் ஆகியோர் கலந்து கொண்டவியள். இவையள் மாவையைக் கெஞ்சவேண்டிய தேவை என்ன?


**பண்டிதர்:** சரி சரி இதுகளை விட்டிட்டு ஆக்கபூர்வமான கதையளைக் கதையுங்கோ. பேரவைக் கூட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர அத்தனை எம்.பிக்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது தெரிந்தது தானே.

என்னைப் பொறுத்தவரை தமிழ்மக்கள் பேரவை தான் தயாரித்த தீர்வுத் திட்டத்தை எப்பாடுபட்டும் நிறைவேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தான் முக்கியம். இதைச் செய்தால் எல்லாம் வெற்றி தரும். இப்படிப்பண்டிதர் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



















# தமிழ் மக்கள்

## வரலாற்றில் ஒரு புதி

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழு தயாரித்த தீர்வுத் திட்ட முன் வரைபு ஏற்புடையதும் நடைமுறைக்குச் சாத்தியமானது எனவும் பொதுக் கருத்துக்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இனப் பிரச்சினை தொடர்பில் ஈழத்தமிழினம் பல்வேறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த போதிலும் ஒரு பொதுவான தீர்வுத் திட்டத்தை முன் வைக்கவில்லை என்றே கூற வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் நடந்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் அரசியல் தலைவர்களுக்கானது என்பதாகவே நிலைமை இருந்து வந்துள்ளது.

இதன் காரணமாக பாதிக்கப்பட்ட- பாதிக்கப்படுகின்ற தமிழ்மக்களின் கருத்துக்கள் உள் வாங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் பரலாக உள்ளது.

இத்தகையதோர் சூழ்நிலையில் சர்வதேசத்திற்குப் பொறுப்புக்கூறல் என்ற, முன்னெப்போதும் இல்லாத ஒரு சவாலை இலங்கை அரசு சந்தித்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் விரும்பியோ விரும்பாமலோ இலங்கை அரசுக்கு உண்டு.

இந்தத் தீர்வு 2016 ஆம் ஆண்டிற்குள் எட்டப்பட வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற பெயரில் சில ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.


இத்தகையதோர் நிலைமையில் தமிழ் மக்கள் தங்களுக்கான தீர்வு என்ன? என்பதை வரையறை செய்து அதனைத் தமிழ்த் தரப்புகளும் தமிழ்மக்களும் ஏற்றுக்கொண்டு அதனை வலியுறுத்துதல் என்ற முயற்சியை தமிழ் மக்கள் பேரவை முன்னெடுத்தது.

இதன்பயனாக பேரவையின் நிபுணர் குழு மிகப் பெரும் சிரமங்களின் மத்தியில் அரசியல் தீர்வுத் திட்ட முன் வரைபைத் தயாரித்து முடித்தது.


தமிழ்மக்கள் பேரவை தொடர்பில் அரசியல்வாதிகள் சிலர் தேவையற்ற பிரசாரங்களைச் செய்து கொண்டிருந்தவேளை பேரவையின் நிபுணர்குழு மிக அமைதியாக இருந்து தீர்வுத் திட்ட முன்வரைபைத் தயாரித்தது தான் இங்கு அடையப்பட்ட பெரு வெற்றி எனலாம்.

முன்பு ஒருபோதும் இப்படியான ஒரு தீர்வுத் திட்ட

முன்வ
ஒரு வ
பேரவை
அக்குவே
முன்வ
நிபுண
மக்கள் ப
தங்கியுள்
இதன்
யாழ்ப்ப
மணியள
லையில்
வடக்
வைத்திய
சேர்ந்த த
தீர்வுத் தி
பாணம்
தொகை
நின்றது.
ஏற்பா
வீரசிங்க
கரகோச
இணைத்
அவர்கள்
முன்பும்
நடக்கப்
அந்தளவி
வெளிப்
தமி
வெளியி
அனை
வான க
திட்ட மு
சென்று
நிறைவா
பேரவை
உன்னதம





## மகாத்மா காந்தி பற்றி?

## தற்போதைய விஞ்ஞான வளர்ச்சி பற்றி?

## இந்திய - இலங்கை இருபது - 20 போட்டியில் இலங்கை அணி...

**சுபாங்கி — சிறுப்பிட்டி**

**தன்வினை தன்னைச் சுடும் என்பதற்கு மகிந்த ஒப்பாகி விட்டாரே?**

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பதெல்லாம் போய், தெய்வமே அரசனாகி அன்றே கொல்வான் என்றாகிவிட்டது. வன்னியில் மாண்டுபோன எம் இனத்தின் ஆத்மாக்களெல்லாம் முள்ளிவாய்க்காலில் சுற்றுகிறதுஎன்றாநினைக்கிறீர்கள்இல்லைஇல்லை அவை கொழும்பில்தான் அலைகின்றன.

**சாருஜா — பொலிகண்டி**

**நீங்கள் கண்டு வியந்த விடயம்?**

நல்லூர் திருவிழாவில் நான் கண்ட உண்மை ஒன்று. கூட்டத்தில் தவறவிட்ட தன் குழந்தைக்காய் தாயொருத்தி அழுது கொண்டிருந்தாள். அவளின் இடது கையில் பத்திரமாய் இருந்தது கையடக்கத் தொலைபேசி.

**கலா — உடுவில்**

**காதல் மோகம் கொண்டு ஆண்களின் பின்னே திரியும் பெண்களைப் பற்றி?**

இல்லையே வீதிகளில் ஒரு பெண்ணிற்குப் பின்னால் நிறைய ஆண் நாய்கள் செல்வதைத்தானே பாத்திருக்கிறேன்.

**ஜனுசன் — குப்பிளான்**

**தற்போதைய விஞ்ஞான வளர்ச்சி பற்றி?**

விஞ்ஞான வளர்ச்சி வேற்றுக்கிரகத்தில் மனிதன் வாழலாமா? என்பது வரை சென்று விட்டது. மெய்ஞ்ஞானம் கண்டறியப்படாமல் எலிகளிலும் குரங்குகளிலும் சோதனை நடத்தப்படுகிறது மனிதன் வாழ்வதற்காய்.

**அனுஷா — தெல்லிப்பழை**


**என் குடும்பத்திற்காக எனது கனவுகளை நான் இழப்பது தவறா?**

உண்மையான தியாகங்கள் ஒருநாளும் பொய்த்ததும் இல்லை பிழைத்ததும் இல்லை.

**பபீசன் — திருநெல்வேலி**

**நமீதாக்கு எப்ப கல்யாணம் நடக்கும்?**

என்னது நமிதாவுக்கு கல்யாணமா? அவர் இன்னும் இந்த சமூகத்திற்கு செய்ய வேண்டிய சேவை நிறையவே இருக்கிறதே அதுக்கு முதல் கல்யாணம் எப்படி?



**குருரட்ணா — அல்வாய்**

**ஒருவரை காதலித்து விட்டு இன்னொருவரைக் காதலிக்கும் பெண்களைப் பற்றி?**

இரு மனங்கள் ஒன்றுபடாமல் வாழ்க்கையில் ஒன்றாகிவிட்டு பின்பு தொட்டால் குற்றம் தும்மினால் குற்றம் என விவாகரத்துவரை செல்வதைவிட இது நமக்குச் சரிவராது என காதலிக்கும் போதே விலகிக் கொள்வது எவ்வளவோ மேலானது.

**மிதுனா — மன்னார்**

**பெண்கள் துஷ்பிரயோகத்தை தவிர்க்க முடியாதா?**

ஆணுக்கு ஒரு பெண்ணை விட அதிக பலத்தை ஆண்டவன் கொடுத்தது அவளுக்கு பாதுகாப்பாய் இருப்பதற்கே தவிர அவளை பலாத்க்காரம் செய்வதற்கல்ல என எங்கேயோ படித்த ஞாபகம்.

**கபில் — கொடிகாமம்**

**உங்கள் வாழ்க்கையில் ஏதாவது சிந்தனையை கண்டுபிடித்ததுண்டா?**

தலை முடியை ஒட்ட வெட்டிக்கொள் சட்டையை பெரிதாக தைத்துக்கொள் என்பது அந்தக் காலத்து பொருளாதாரச் சிந்தனைகள் என்பதை இந்தக் காலத்தில்தான் கண்டுபிடிக்க முடிந்தது.



"டாக்டர்... நான் சிரிக்கும்போது கன்னத்தில் குழி விழுணும். அதுக்கு ஏதாவது வழி இருக்கா?"
"சைடு கடைவாய்ப் பல் ரெண்டைப் பிடுங்கிட்டா போதும்!"

*அன்பு வாசகர்களே!*

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

**கிருஷா — வரணி**

**கவலைகளை மனதுக்குள் பூட்டிவிட்டு சிரிப்பது போல நடிப்பது எப்படி?**

கவலைகளை மனதில் பூட்டி வைப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கும்.அதனால்தான் மரண வீடுகளில் ஒப்பாரி வைத்து அழுகையை அடக்கி வைப்பவர்களை அழச் செய்யும் நுட்பத்தை எமது மூதாதையர்கள் கொண்டுவந்தார்கள். அதிலும் கட்டி அழுவது முக்கியம் பெறுகிறது.

கவலைகளை சொல்லி (கொட்டி) அழுவதனூடாக மனம் ஆறுதலாகிறது. இதைத்தான் இன்றைய நவீன கல்வி கூறுகின்றது. இப்போதெல்லாம் ஒப்பாரியும் இல்லை ஆளையாள் தொடுவதுமில்லை.

**விதுசன் — சாவகச்சேரி**

**இந்திய - இலங்கை இருபது - 20 போட்டியில் இலங்கை அணி வெல்லுமா?**

கடந்த வருடம் மேற்கிந்தியத்தீவுகள் தொடரை இடையில் நிறுத்தி செல்ல இந்தியா இலங்கையை கூப்பிட்டு வைத்து கொடுத்தனுப்பியது. பலம் பொருந்திய அவுஸ்திரேலியாவை அவர்கள் மண்ணில் வைத்தே வெள்ளையடிப்பு செய்தது . அதனால் இலங்கை அணி அவதானமாய் விளையாடுவது அவசியம்.

**வன்னி மகள்**

**வெள்ளை பெண்களை ஆண்கள் விரும்புகிறார்களே?**

கறுப்பாய் இருக்கும் குரக்கன் மாவில் பிட்டவித்து சாப்பிடும் கலாசாரம் போய் வெள்ளையாய் இருக்கும் கூப்பன் மாவில் பிட்டவித்துச் சாப்பிட்டு சலரோகத்தை விலைக்கு வாங்கி வைத்திருக்கிறார்களே. இவர்களுக்கு எங்கே புரியப் போகிறது கறுப்பின் அருமை.

**துஷி — தொட்டியடி**

**மகாத்மா காந்தி பற்றி?**

இந்தியா ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்று முதன்முறையாக இந்தியக் கொடி ஏற்றப்படுகிறது. இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகான் அங்கு இல்லை. தேசபிதா எங்கே என தேடுகிறார்கள். அந்த உன்னத மனிதர் குஜராத்தில் நடந்த கலவரத்தை அமைதியாக்க தன் பணி தொடங்கி விட்டார்.

ஆனால் இங்கோ தமிழருக்காக தமிழ் மக்கள் பேரவை தயாரித்த அரசியல் வரைபை விடுத்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் தான் தீர்வுத்திட்ட வரைபை தயாரிக்க வேண்டும் என கங்கணம் கட்டி நிற்கிறார்கள். ஐயா தலைவர்களே காந்தீயம் பற்றி கொஞ்சம் படியுங்கப்பா பிளீஸ்.

# கவிதைக் கலசம்



## உன்பிரிவு பிரசவித்த வலி

மனம் குழம்பிப் போயிருந்தது
நேற்று முழுக்க
அக்கா சாப்பிடச் சொன்னா
சாப்பிட்டதாகப் பொய்
சொன்னேன் நான்
உன் பிரிவை ஏற்க முடியாது என
மறுதலிக்கிறது பாசம்
எந்தப் பெண்ணாலும்
நிரப்ப முடியாது
உன் பிரிவின் இடைவெளியை
வடகொரியா சோதித்த
அணுகுண்டின் தாக்கத்தைவிட
உன் பிரிவின் தாக்கம்
என் நெஞ்சுக்குள்ளே பெரிய ஏக்கம்
யுத்தம் சிதறடித்த மனதை
சிதறடித்துவிட்டு போறியா நீயும்
அப்பா என்ன வலி வலிக்கிறது
உறவுகளை இழந்த நெஞ்சு
என் முறிந்துபோன சிறகுகளுக்கு
எழுந்து பறக்க உதவும் சிறகு நீ
என் மடிந்து போன உறவுகள்
மீண்டும் பிறக்கும் கருவறை நீ
உன்னிடம் ஏதும் சொல்லாமல்
உன்னை காதலித்தது என் மனது
உன்னை அடிக்கடி பார்க்காமல்
ஆழமாக நேசித்தது இதயம்
சாதிகள் இல்லையடி பாப்பா
பாரதியின் கவிதையை
ஏற்றுக்கொள்கிறேன் நான்
நீ எடுத்த முடிவுகளை
சரியா பிழையா என்று மீண்டும்
ஒருமுறை பரிசீலனை செய்
உன்னை நினைத்து அந்தரிக்கும்
ஜீவன் அமைதி பெற

**உயிரோவியன்**
**புலோப்பளை**

## வட்டி

கொடுத்தவனுக்கு கொண்டாட்டம்
வாங்கியவனுக்கு திண்டாட்டம்
போட்ட சீட்டை கட்டி முடிக்க
வட்டிக்கு வாங்கி
வட்டிக்கு குட்டி போட்டு
வாழ்க்கையே முடிந்தாலும்
மீள எழுந்தான் முடியுமா?
மீண்டு வரத்தான் ஏலுமா?
வட்டிகட்ட ஒரு தாலி
வங்கிக்குப் போகிறது-அடகுக்காக,
வட்டிவாங்கிய இவள் தாலி
நகைக் கடைக்கு போகிறது-
பவுண் கோர்க்க
கல்யாணத்துக்கு கருமாரிக்கென
கண்டதுக்கும் கந்து
வட்டிக்கு வாங்கி
காணாமல் போகின்றனர்
கொடுத்தவன் தூக்கில் தொங்க,
மனைவி பிள்ளைகள்
பொலிஸ் ஸ்ரேசனில் நிற்க-
திங்கவும் தங்கவும் ஏதுமின்றி
திண்டாடும் வாழ்க்கை
தேவைதானா?

**பொன்மகள்**
**பருத்தித்துறை**

## அம்மா

தன்பிள்ளைதான்
பத்துத் திங்கள்
தயக்கமின்றி
சுமந்தவள் நீ
உறக்கமின்றி
அழும்வேளை
எம்மை தாலாட்டி
துயில வைத்தவள் நீ
அன்பும் பாசமும் பண்பும்
ஒழுக்கமும் சேர்த்து
வளர்த்திட்டவள் நீ
இலட்சியக் கனவுகளை
இலட்சம் இலட்சமாய்
மனதில் ஊட்டியவள் நீ
இன்பத்திலும் துணையிருந்து
துன்பத்திலும் பங்கெடுத்தவள் நீ
எம்மோடு அன்னையாய்
ஆசானாய் தோழியாய்
இருந்திட்டவள் நீ
எப்பொழுதும் உன் மனதில்
எமை சுமப்பவள் நீ
உன்னை உருக்கி
எமக்கு ஒளியூட்டியவள் நீ
அம்மா! நீ என்றும் எம்முடன்
இருக்க கடவுளை
பிரார்த்திக்கின்றேன்

**ஈ.சுசீபா**
**புத்தூர்**

## கந்தா! கதிர்வேலா!

அங்கே எம் உயிர்
அழிந்து போனாலும்
சுட்டெரிக்கும் நெருப்பு
எம்மைப் பொடியாக்கினாலும்
கண்கொத்திக் கழுகுகள்
எம்மைக் கூறு போட்டாலும்
ஆகாயம் கீழே இறந்து வீழ்ந்தாலும்
அகலாது எம் வீரம்
அழியாது எம் இனத்தின் வேகம்
இதை யார் மறைக்க நினைத்தாலும்
அவர் அழிவது நிச்சயம்

மாவை. நா.கஜேந்திரன்

## புன்னகைப்பூ

புதிரான புன்னகையாம் என்னவள்
உன் புரியாத புன்னகைக்குள்
எத்தனை பனி மூட்டங்கள்
புதிரான உன் புன்னகையில்
புதைத்துவிட்டேன் என் இதயமதை
புதைந்துவிட்ட இதயமதில்
வலிக்கும் வேதனைகளுமாய்
என்றும் உன் நினைவுகளே

**ரி.விஜிதா**
**மயிலிட்டி**

# மௌனத்தின் தேடல்- 287



## சாதுரியமாக செயலாற்றல்

சாளரங்கள் போடுகின்ற
சட்டைகூட உனக்கில்லை
சாதுரியம் கொண்ட நீயோ
சைக்கிள் ஓட்டிப் போவதெங்கே
வீட்டுச் சுமை கூடியதோ
வேலைப்பளு மூடியதோ
பள்ளிப் படிப்பை மறந்து நீயும்
பதகளித்துப் போவதேனோ
எண்ணிய வேலைதனை
எளிமையாக முடித்திடவா

அணிஞ்சில்
புவபாலன்

## பயிற்சி

கற்றுக் கொள்ளும் ஆர்வமும்
கைவிடாத முயற்சியும்
முறையான பயிற்சியும்
இருந்தால் எட்ட முடியாத
இடங்களைக்கூட இலகுவாக
தொட்டிடலாம்- உன்
முயற்சியை கைவிடாமல்
முறையாகப் பயின்று
முன்னேறிச் செல் சிறுவனே

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## துணிந்து நில்

துள்ளித் திரியும்
பள்ளிப் பருவமதில்
புத்தகம் கையிலில்லை
போட நல்லுடையுமில்லை
எங்கே போகிறாய் தம்பி
உன் எதிர்காலத்தைக் கணம்
சிந்தித்துப் பார்த்தாயா
பாடசாலைக்குப் போ துணிவோடு
பாடங்களை நன்குபடி
பல பட்டங்கள் பெற்று
நல்ல பதவியிலமர்ந்து
மக்கள் உள்ளம் மகிழ சேவை செய்

துரை, தென்மட்டுவில்

## வெற்றி வாகை

முயற்சியும் பயிற்சியும்
தேர்ச்சிக்கு
வளர்ச்சியுடன் நீயும்
கையாளுவாயே!
வாகன ரகங்கள் பல
தரை, கடல்,வானம், விண் என
பயணம் சென்றிடுவாய்
இந்தப் பயணம் எல்லாம்
வாய்மை, நீதி, ஈட்டும் பயணமாக
தாய்மண் மீட்கும் பயணமாக!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## சபாஷ் தம்பி சபாஷ்

ஏழையின் பிள்ளையாய்
நீ இருந்ததால் தான்
பழைய சைக்கிளில்
சாதனை செய்தாய்!
விளையும் பயிர் என்பதை
முளையிலேயே நீ காட்டி விட்டாய்!

நாக.சூவி, சுழிபுரம்

## அம்பலத்திலும் சாதிப்பாய்

ஓட்டைச் சட்டியென்றாலும்
கொழுக்கட்டை வெந்துவிட்டதே
வண்டி ஓட்டையென்றாலும்
வெற்றியை உனக்குத் தந்துவிட்டதே
அறையில் சாதித்துவிட்டாய்
இனி அம்பலத்திலும் சாதிப்பாய் ரொம்பவே

எம்.என்.ஆரணி, அரியாலை

## ஏக்கம்

கல்வி கற்கும் வயதிலே
பள்ளிக்குச் செல்லாமல்
வேலைக்குச் செல்லும்
சிறுவன் இங்கு

இடைக்காடு
க.செல்வமலர்

## பயிற்சி

விரைவில் நான் சைக்கிளோட்டிப்
பழகிட வேண்டும்
புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்தால்
புது சைக்கிள் தருவதாக
என் அப்பா
உறுதியளித்திருக்கிறார்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## முயற்சி திருவினையாக்கும்

பழைய வண்டி
அப்பனது தான்
உழைப்பு மட்டும்
உள்ளதுதான்
சளைப்பின்றி
முயன்றது நீயேதான்
வாழ்த்துகிறேன்
உன்னை நானே தான்

ஹோப் மேரிதாஸன்
வட்டுக்கோட்டை

## சளைத்து விடாதே

முயற்சி கரம்பிடித்து
இலட்சியத் தடம்பதிக்க
மேடுபள்ளங்கள் கழிந்து- நீ
மேன்மைகொள்ள புறப்பட்டுவிட்டாய்
தடுமாறி விழலாம் சளைத்துவிடாதே

அ.அச்சுநகர் முகி

# மௌனத்தின் தேடல் -288



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 10.02.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -


# இறுதிச்சுற்று

## திரைவிமர்சனம்







விளையாட்டுத் துறை அரசியலை நாக் அவுட் பண்ணும் பவர்ஃபுல் பன்ச்.

பொக்ஸிங் அசோசியேஷன் அரசியலால், ஒலிம்பிக் கனவோடு வாழ்க்கையையும் தொலைக்கிறார் மாதவன். கோச் ஆன பின்னரும் கோபம் குறையாமல் வாழ்கிறார்.

அது, வட இந்தியாவில் இருந்து வட சென்னைக்குத் தூக்கியடிக்கிறது. அங்கே மீனவக் குப்பத்தில் சந்திக்கும் பொக்ஸர் மதிக்குப் பயிற்சிகொடுக்க ஆரம்பிக்கிறார்.

மாதவனை மிதித்தவர்களை மதி எப்படி பஞ்சர் ஆக்குகிறார் என்பது மீதிக் கதை.

இறுதிச்சுற்று மட்டும் அல்ல படத்தின் ஒவ்வொரு சுற்றிலும் மதியாக வரும் ரித்திகா செம ஸ்கோர் செய்கிறார்.

யோவ்... கிழம் என மாதவனைக் குறும்பாக அழைப்பதும், அக்காவுக்காக மாதவனின் டிரில் பனிஷ்மென்ட்டை ஏற்பதும், உனக்கு என்ன வேணும் மாஸ்டர்... நாக்அவுட்தானே? எனக் கேட்டு ஜெயிப்பதும், ஓடி வந்து காற்றில் உயர எழும்பி மாதவன் இடுப்பில் அமர்வதும் என, படம் முழுக்க ரித்திகாதான் கெத்து.

செங்கிஸ்கான் எபிசோட், போல்டான போலா பன்ச். ஒரிஜினல் பொக்ஸரான ரித்திகாவின் அட்டகாச நடிப்புக்குக் காத்திருக்கின்றன விருதுகள்.

காதல் மாதவன், இதில் கறார் கோச். உடல்முழுக்க கர்வம், தலை முழுக்க கேசம், மனம் முழுக்க பொக்ஸிங் நேசம் என உடலிலும் நடிப்பிலும் அத்தனை முறுக்கு. கொஞ்சம் அன்பா சொல்லித் தாப்பா...' எனும் நாசரிடம் அப்புறம் உங்களை மாதிரிதான் கையைக்கட்டி நிக்கணும்' என எகிறி அடிக்கும்போது கண்களில் தெறிக்கும் கோபமும் அக்கறையும்... மெஜஸ்ட்டிக் மேடி. இது மாதிரி கரக்டர் என்றால் பிரேக் எடுத்துக்கொண்டே வரலாம். இது வேற லெவல் மேடி.

இயக்குநர் சுதா கொங்கராவுக்கு இது லைஃப்டைம் படம். திரைக்கதைக்காக மெனெக்கெட்ட மூன்று ஆண்டு உழைப்பு, ஒவ்வொரு ஃப்ரேமிலும் க்ளாப்ஸ் அள்ளுகிறது. ரித்திகா சிங், மாதவன், நாசர், ராதாரவி... என காஸ்ட்டிங் கனகச்சிதம்.

கோபக்கார கோச், தனக்கு நடந்த நிராகரிப்பை தனது ஸ்டூடன்ட் மூலம் பழி தீர்க்கும் கதை கொஞ்சம் பழசுதான். அதை மறக்கவைக்கும் திரைக்கதையும், இந்தக் குறும்புப்பொண்ணு கடைசி வரை போகுமா என சந்தேகிக்க வைக்கும் ரேக்டர் ஸ்கெட்ச்சும் அந்தக் குறையைத் தூக்கியடிக்கின்றன.

இந்தி வெர்ஷனுக்கு உதவும் என ரித்திகாவின் அம்மாவை சௌகார்பேட்டை ஆக்கியதும், அக்காவே பழி தீர்ப்பதும் இட்லிக்குப் பொருந்தாத சட்னி. “வா மச்சானே”வில் குத்தி, “சண்டக்காரா”வில் சரணடைய வைக்கிறது சந்தோஷ் நாராயணின் இசை.

நீங்கள் தொடப்போகும் உயரம், எங்கோ தொலைவில் இருக்கு பாஸ். சிவக்குமார் விஜயஉனின் கமரா செம லாகவமாக ரிங்குக்குள் டிராவல் செய்கிறது.

அரசியல் சதுரங்கத்தில் பகடையாக வெட்டுப்படும் அப்பாவி விளையாட்டு வீரர்களின் வலியைப் பதிவுசெய்த நேர்மைக்கும், அதை சுவாரஸ்ய சினிமாவாக்கிய இயக்கத்துக்கும் தம்ஸ்அப்!

# சாதனை மேல் சாதனை தெறி டீஸர்





படங்கள் வெற்றி பெறுவதை விட டீஸர், டிரைலர் எத்தனை லைக்குகள் பெருகிறது என்பதை பார்ப்பதில் தான் ரசிகர்களின் ஆர்வம் அதிகம் இருக்கிறது.

அந்த வகையில் விஜயின் தெறி டீஸர் வெளியாகி ரசிகர்களிடம் அமோக வரவேற்பை பெற்று வருகிறது.

நேற்று சில நேரம் தெறி டீஸர் எடுக்கப்பட்டு இருந்ததால் பலர் அதிர்ச்சி க்குள்ளாகி இருந்தனர்.

ஆனாலும் டீஸர் செம மாஸாக சாதனை படைத்து வருகிறது.

**தெறி டீஸரின் சாதனை இதோ**

**Theri Create Record**

75K Views 75 Min
1.5M Views 15Hrs
150K Views 14Hrs
2M Views 22Hrs
175K Views 31 Hrs
3M Views 31 Hrs


இதனால் விஜய் ரசிகர்கள் Massive THERI Teaser Hits 3 M Views என்ற டாக்கை கிரியேட் செய்து டிரண்ட் செய்து வருகின்றனர்.

### தெறி டீசர் முடக்கப்பட்டது அட்லீ ஆதங்கம்

இளைய தளபதி விஜய் நடிப்பில அட்லீ இயக்கத்தில் தெறி படம் விரைவில் வரவிருக்கின்றது. இப்படம் டீசர் நேற்று நள்ளி ரவு வந்து பல சாதனைகளை செய்து வருகின்றது. இந்நிலையில் சில நிமிடங்கள்இந்த ட்ரைலரை யாரோ முடக்க, இதனால் படக்குழு மிகுந்த அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.

இதுகுறித்து அட்லீ படக்குழுவினர்கள் மிகுந்த அதிர்ச்சியில் இருப்பதாகவும், இதில் பல பேரின் உழைப்பு அடங்கியுள்ளது. இச்சம்பவம் மிகவும் மன வேதனையை தந்தது' என கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உலகை பயமுறுத்தும் சிகா வைரஸ்!!



Group: Group IV ((+)ssRNA)
Family: Flaviviridae
Genus: Flavivirus
Species: Zika virus

**சிகா வைரஸ் அதிநுண்ணுயிர் வகையைச்சேர்ந்தது.இதன்(அளவு) விட்டம் 18-45 நனோ மீற்றர். 1947 இல் உகண்டாவின் *சிகா* காட்டில் *றீசஸ்* குரங்கின் இரத்தத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.**

**இந்த வைரஸ்- ஈதர், சோடியம் டெக்சோசிக்கோலேட், குளோரோபோம் ஆகிய வற்றால் செயலிழக்கச் செய்யப்படக்கூடியது.**

**நோயரும்பு காலம்: 3-12 நாட்கள்.**

**அறிகுறிகள்: காய்சல், தோல்-சிவந்து தடிப்படைதல், மூட்டுவலி, தசைகளில்வலி, கண்கள் சிவப்படைதல்.**

**தென்** அமெரிக்க நாடான பிரேசிலில் 'சிகா' என்ற புதுவிதமான வைரஸ் நோய் தாக்கியது. உகண்டாவின் *சிகா* என்ற காட்டில் வாழும் குரங்கில் கண்டுபிடிக்கப்பட்டதால் இதற்கு *சிகா* என்ற பெயர் வந்தது.

இந்நோய், கர்ப்பிணி பெண்களை தாக்கி அதன் மூலம் கருவில் இருக்கும் குழந்தைகளின் மூளை வளர்ச்சியை பாதிக்க செய்கிறது.

இதனால் நோய் தாக்கிய கர்ப்பிணி பெண்ணுக்கு பிறக்கும் குழந்தைகள், கர்ப்பிணிகளை இந்த வைரஸ் தாக்கினால் பிறக்கும் குழந்தைகள் சிறிய தலை உள்ளவர்களாகப் பிறக்கின்றனர். இந்நிலை, மூளை பாதிக்கப்படுவதால் உருவாகிறது. மூளைபாதிப்படையும் பொழுது, நரம்பு மண்டலமும் பாதிக்கப்படுகிறது. இவ்வாறான பாதிப்புக்குள்ளான குழந்தைகள், பிரேசிலில் இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள பிறந்துள்ளனர்.

கடந்த ஆண்டு மே மாதம் முதல் இந்த நோய் மெகசிக்கோ உள்ளிட்ட தென்னமெரிக்க நாடுகளில் பரவி வருகிறது.

இந்த வைரஸ் நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், இந்த வைரசை பரப்பும் நுளம்புகளை கட்டுபடுததும் நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து உலக சுகாதார அமைப்பின் நிர்வாக இய்க்குனர் டொக்டர். *மர்கரெட் சான* கூறியதாவது, சிகா வைரஸின் வளர்ச்சி உலக சுகாதாரத்துக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் *எபோலா* போன்ற நோய்களின் வரிசையில் சிகா வைக்கப்பட்டுள்ளது.

இந்தியா, மலேசியா உட்பட சுமார் 23 நாடுகளில் பரவியுள்ள இந்த வைரசால் 4 மில்லியன் மக்கள் வரை பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துளளார்.

மேலும் இந்த நோய் பற்றியும் அதன் நிலை குறித்தும் அறிந்து கொள்வதற்கு ஒன்றிணைந்த சர்வதேச முயற்சி வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட நாடுகளில் வைரசின் பரவலை கட்டுப்படுத்தலாம் என்றும் மற்ற நாடுகளுக்கு பரவாமல் தடுக்கலாம் என்றும் *மர்கரெட* தெரிவித்துள்ளார்.

*ஏடிஸ்* நுளம்புகளால் வேகமாக பரவக்கூடிய 'சிகா' வைரஸ் கடந்த ஆண்டு பிரேசிலில் தாக்க தொடங்கியது. தற்போது தென் மற்றும் மத்திய அமெரிக்கா விலும் பரவி வருகிறது.

காய்ச்சல், மூட்டுவலி, தலைவலி, உடலில் தடிப்புகள் ஏற்படுதல், கண்களில் எரிச்சல் என்பன இந்த நோயின் அறிகுறிகள்.

**அவசர நிலை பிரகடனம்**

இந்த வைரசின் வேகமான பெருக்கம் மற்றும் அதை கட்டுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து ஆராய்வதற்காக உலக சுகாதார அமைப்பை சேர்ந்த வல்லுனர்கள் ஜெனீவா நகரில் சமீபத்தில் கூடி ஆலோசனை நடத்தினர். இந்த கூட்டத்தை தொடர்ந்து, உலகளா விய சிகா வைரஸ் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

இந்த வைரசை கட்டுப்படுத்தும் நோக்கில் தடுப்பு மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை கண்டறியும் பணிகளில் உலகம் முழுவதும் உள்ள மருந்து தயாரிப்பு மற்றும் ஆய்வு நிறுவனங்கள் ஈடுபட்டு உள்ளன.

**ஆய்வில் ஊசிமருந்து- இந்திய நிறுவனம்**

இந்த பணியில் ஈடுபட்டிருந்த ஐதராபாத்தை சேர்ந்த 'பாரத் பயோடெக்' நிறுவனம், சிகா வைரஸ் எதிர்ப்பு மருந்து கண்டுபிடிப்பில் தாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருப்பதாக அண்மையில் அறிவித்துள்ளது. உலகம் முழுவதிலும் இருந்து சில புத்திக்கூர்மை வாய்ந்த வல்லுனர்களை *பாரத் பயோடக்* நிறுவனம் பெற்றுள்ளது. இது குறித்து அந்த நிறு வனத்தின் தலைமை நிர்வாக இயக்குநர் *கிருஷ்ண எல்லா*, செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

"தற்போது அச்சுறுத்தி வரும் சிகா வைரசுக்கு எதிரான தடுப்பு மருந்துகளை உருவாக்கும் பணியில் நாங்கள், ஒரு ஆண்டுக்கு முன்பே ஈடுபட்டு வருகிகிறோம்.

அதன் பயனாக தற்போது இந்த வைரசுக்கு எதிராக 2 தடுப்பூசிகளை நாங்கள் தேர்ந்தெடுத்து உருவாக்கி வருகிறோம். அதில் வீரியம் நீக்கப்பட்ட தடுப்பூசி ஒன்று, தற்போது விலங்குகளில் செலுத்தி சோதனை செய்யப்படும் நிலையை எட்டிவிட்டது.

இதன் மூலம் ஜிகா வைரசுக்கு எதிரான தடுப்பூசி உருவாக்கத்தில் முன்னேற்றப் பாதையில் நாங்கள் இருப்பதாக நம்புகிறோம். இந்த தடுப்பூசிக்காக உலகளாவிய காப்புரிமைக்கு முதன்முதலில் தாக்கல் செய்வது நாங்களாகத்தான் இருப்போம். இந்த தடுப்பூசியை உருவாக்கி விட்டோம் என்ற செய்தியை இயன்ற அளவு மிகவிரைவில் உலகுக்கு அறிவிப்போம்" என்று கூறினார்.

இது குறித்து *பாரத் பயோ டெக்* நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் சுமதி கூறுகையில், 'கர்ப்பமடையும் தருணத்தில் உள்ள பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளை கருத்தில் கொண்டு தடுப்பூசி உருவாக்கப்பட்டு வரும் அதே வேளையில், அவரகளின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தும் இந்த தடுப்பூசி உருவாக்கப்படுகிறது' என்றார்.


இலங்கையில் *சிகா* வைரஸ தொடர்பான இரத்த மாதிரி பரிசோதனை ஆரம்பம்

*சிகா* வைரஸ் தொடர்பான இரத்த மாதிரிகள் பரிசோதனைகள் 05.02.2016 முதல் பொரலை வைத்திய ஆராய்ச்சி மையத்தில் இடம்பெறும்.

இந்த பரிசோதனைகளுக்கான இரசாயன திரவியங்கள் மலேசியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

மேலும் *சிகா* வைரஸ் தொற்று பரவியுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் மற்றும் அந்த நாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்களை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் விஷேட பிரிவொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பத்தில் *சிகா* நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் - வழமைக்கு மாறாக, சிறிய தலையுடன்










சாதாரணநிலை- மூளை 33 செ.மீ விட்டத்துடன்

குறுந்தலை-மூளை, நரம்புக்கலங்கள் குறை வடைந்ததால்33செ.மீவிட்டத்திலும் குறைவாகவுள்ளது.

*சிகா* வைரசின் உட்கட்டமைப்பை விளக்கும் கோட்டுபபடம்



சிவந்து தடிப்படைந்த தோல், கண்.

-பாமா-

சிறுகதை

# ஜெயித்தவன்



இருள் நீங்கி, பொழுது விடிவதற்கான அறிகுறிகள் கீழ்த்திசை வானில் தென்படுகிறது. வர்ணஜாலங்களின் மத்தியில் அடிவானிலிருந்து செஞ்சுடரொன்று, மெதுமெதுவாக மேலெழுகிறது. பூமிப்பந்தில் புதிய நாளொன்றின் உதயத்தை அவை புலப்படுத்தின.

எங்கிருந்தோ பறந்துவந்த காகமொன்று, முற்றத்தின் மாமரக்கிளையில் அமர்ந்து "கா...கா..." எனக் கரைந்து குரலெழுப்புகிறது. காகத்தின் கரையல், படுக்கையில் புரண்டுகொண்டிருந்த பார்த்திபனை உறுத்தியதால் அவன் படுக்கையைவிட்டு எழுந்து வெளியே வருகிறான்.

வந்தவன், சமையலறையை எட்டிப் பார்க்கிறான். அங்கே பத்மா சமையலில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறாள். பதுங்கியவாறு மீண்டும் அறைக்குள் போய் எதையோ எடுத்துக்கொண்டு, பின் வளவுப் பக்கமாகப் போகிறான்.

இதற்கிடையில் நேரத்தைக் கவனித்த பத்மா, பிள்ளைகளையும் கணவனையும் துயிலெழுப்பிவிட வேண்டும் என்ற அவசரத்துடன் அறைக்குள் செல்கிறாள். ஆழ்ந்த நித்திரையிலிருந்த பிள்ளைகளை உருட்டி எழுப்பிவிடுகிறாள்.

"ரூபன்! சங்கவி! எழும்புங்கோ. பள்ளிக்கூடம் போகவேணும்." எழுப்பிவிட்டவள், கணவனின் படுக்கையைப் பார்க்கிறாள். அங்கே... அவன் இல்லை. எழுந்து வெளியே போய்விட்டிருந்தான். மனதில் எதையோ நினைத்துக்கொண்டவளாய் அவள், பின்பக்க வளவை நோக்கிப் போனாள். அங்கே.. கோழிக்கூட்டின் முன், புகை வளையங்களுக்கு நடுவில் பார்த்திபன், நின்றிருந்தான். அவனது கையில் குறைத்துண்டு *சிகரெட்* புகைந்துகொண்டிருந்தது.

"*சிகரெட்டைக்* குடிக்காதையுங்கோ, அது உடம்புக்குக் கேடு என்று எத்தினை தரம் சொன்னாலும் கேக்கிறியளில்லையே!"

மனைவியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டவன். சட்டென்று *சிகரெட்* துண்டை கீழேபோட்டு காலினால் நசுக்கிவிட்டான்.

"இல்லை பத்மா, பனிக் குளிருக்கு கொஞ்சம் இதமாய் இருக்குமென்டுதான்.....!" என்று கூறி தன் பிடரியைச் சொறிந்தான். அதைப் பார்த்த பத்மாவுக்கு ஆத்திரம் சற்று அடங்கிப்போனது.

"ஒரேயடியாய் விடுங்கோ என்று நான் சொல்லேல்லையே... கொஞ்சம் கொஞ்சமாய் குறைச்சு உந்தப் பழக்கத்தை விட்டுடுங்கோப்பா என்றுதானே கேட்கிறன்.

காலங்காத்தால உந்த வேலையைச் செய்யிறியள்..! உதால வாற கெடுதிகளை நாங்கள் கண்கூடாகக் கண்டுகொண்டிருந்தும் திருந்தேல்லையென்டால்... உங்களைக் கடவுள்தான் காப்பாத்தவேணும்."

"சரியப்பா. நான் தெண்டிச்சு எப்படியும் விட்டுடிறன். நீர் இப்ப சத்தம் போடாதையும் பேந்து பிள்ளையளும் என்னைத் திருத்தத் துவங்கிவிடுவினம்!"

பார்த்திபன் கூறியது உண்மைதான். இப்போதெல்லாம் பிள்ளைகள், பகிடியாக அவனைச் சீண்டுகிறார்கள். அது அவர்கள் தன் மீது காட்டும் மறைமுகமான கண்டிப்பு என்பது அவனுக்கு புரிகிறது. இருந்தாலும் என்னதான் முயற்சி செய்தாலும் இந்தப் பழக்கத்திலிருந்து அவனால் மீள முடியவில்லையே. தன்னைத் தானே நொந்து கொள்வதைத் தவிர, அவனுக்கு வேறு வழி தெரியவில்லை.

பிரதி ஞாயிறுதோறும் பத்திரிகையில் வெளிவரும் *சுகமான விடியல்* பகுதியை வாசிப்பது.. அதைப்பற்றிய விளக்கத்தைப் பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ளுவது என்பது பத்மாவுக்கு வழக்கமாகிவிட்டிருந்தது. பற்றாக்குறைக்கு அவளது நண்பியின் அண்ணனுக்கு புகைப்பிடித்ததினால் நுரையீரல் பாதிக்கப்பட்டு, இப்போது மஹரகம வைத்திய சாலையில் உயிருக்குப் போராடிக்கொண்டிக்கிறானாம் இந்தச் செய்திதான் பத்மாவை மோசமாகக் குழப்பிவிட்டிருக்கிறது. இப்போதெல்லாம் அவள், அவன் மீது கடுமையான கண்டிப்பைக் காட்டி வருகிறாள்.

பார்த்திபனும் புகைப்பதை நிறுத்திவிடவேண்டும் என்றுதான் நினைக்கிறான். ஆனால்..., பாழாய்ப்போன குரங்கு மனம் கேட்குதில்லையே...

வேலைக்குப் போகு மிடத்திலும் இடைவேளையின்போதும் அவன் இரண்டு அல்லது மூன்று சிகரெட்டுக்களைத் தொடர்ந்து ஊதித்தள்ளிவிடுவான்; அவனது மனத்திலும் உடலிலும் உற்சாகமும் தெம்பும் தானாக வந்துவிடும். மாலையில் வீட்டுக்கு வந்தபின்னும் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லி வெளியில் கிளம்பிவிடுவான். அங்கு அவனது தாகம் தீர்ந்துவிடும். வீட்டில் பத்மாவுக்கும் பிள்ளைகளுக்கும் மறைந்து ஒரு காரியம் செய்வதென்பது முடியாத காரியமாகிவிட்டது.

அன்று பார்த்திபன் அலுவலகத்திற்கு வந்து சேர சிறிது தாமதமாகிவிட்டது. இடைவழியில் ஒரு பேருந்து தரிப்பிடத்திற்குள் அமர்ந்து இரண்டு சிகரெட்டுகளைப் புகைத்துத் தள்ளியதில் நேரம் போனதே தெரியவில்லை. அவனது அலுவலக நண்பன் கண்ணன் அவனிடம் வந்தான்.

"மச்சான்! இண்டைக்கு லஞ்டைம் நாங்கள் ஒரு பியூன்ரலுக்குப் போகிறோம். நீயும் வாறாய் தானே!"

"ஆர்... ஆரடாப்பா செத்தது?" சிகரெட் புகையின் மணம் வார்த்தைகளுடன் கலந்து வெளி வந்தபோது, கண்ணன் அவனைத் திட்டினான்.

"நீ இன்னும் உந்தப் பழக்கத்தை விட்டுத் துலைக்கேல்லையே. பார்த்தியே இப்ப நேசன்ரை தமையன், முப்பத்தியெட்டு வயதுதானாம்; குடிவெறியால ஈரல் பாதிக்கப்பட்டு, மோசம் போயிட்டுதாம்... அந்தாளுக்கென்ன... இருக்குமட்டுக்கும் குடிச்சிட்டு போய்ச்சேர்ந்திட்டுது. இனி... மனுசி, பிள்ளையள் என்னெண்டு வாழப்போகுதுகளோ....ம்!..." பெருமூச்சுடன் நிறுத்தினான் கண்ணன். "என்னடா மச்சான் சொல்லுறாய்..? எங்கடை நேசன்ரை அண்ணாவோ செத்தது. அப்படியெண்டா கட்டாயம் நாங்கள் எல்லாரும் போகத்தான் வேணும். பார்த்திபன் மனதில் உடன் பிறப்பை இழந்துவிட்ட நேசனுக்காக அனுதாபம் பிறந்தது.

மதியமானதும் எல்லோரும் அலுவலக வாகனத்தில் மரண வீட்டுற்கு புறப்பட்டார்கள். கண்ணன், தொலைபேசியில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தவன், ஓடிவந்து வாகனத்தில் ஏறிக்கொண்டான்.

"*கண்ணீர் அஞ்சலி* அடிக்கக் கொடுத்தனாங்கள். அதுதான் எடுக்க, வந்துகொண்டிருக்கிறம் என்று அடிச்சுச் சொல்லீட்டு வாறன்.." என்று மற்றவர்களைப் பார்த்துக் கூறிவிட்டு, வாகன ஓட்டுநரிடம், சந்தியில் இருக்கும் அச்சகத்திற்கு முன் நிற்பாட்டுமாறு உத்தரவிட்டான். எப்பொழுதும் எந்தவிடயமானாலும் முன்னின்று பொறுப்பேற்று நடந்துகொள்வது அவனது தனித்துவமான இயல்பு.

பதினெட்டுக் கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருந்தது அந்தக் கிராமம். அங்குதான் நேசனின் அண்ணாவின் வீடு. வரும்போது வழியெங்கிலும், கூடவந்த அலுவலகர்களின், வாயில் அகப்பட்டு சுக்குநூறாய் நொருங்கிப்போனது நேசனின் குடும்பநிலை பற்றிய விமர்சனம். விரும்பியோ, விரும்பாமலோ அந்த விமர்சனங்கள் பார்த்திபனின் காதிலும் வந்துவிழத்தான் செய்தன. ஆனால்..., அவனது கவனமெல்லாம் ஒரேயொரு தரமாவது புகையை உறுஞ்சி உள்ளெடுத்து விட்டால்தான், தன் உடம்பு தன் சொற்கேட்கும் என்ற நிலைப்பாடு. சோர்ந்துபோன உடலை ஒருவாறு சமாளித்து வைத்திருப்பதே பெரும்பாடாகப்போயிற்று. எதற்கும் மரண வீட்டில் ஒரு ஒதுக்குப்புறமாகப் போய், தனது புகை தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம் என திடசங்கற்பம் பூண்டுகொண்டான்.

ஒருவாறு குறிப்பிட்ட வீட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். களையிழந்த முகத்துடன் வளைய வந்துகொண்டிருந்த நேசனைப் பார்க்க மிகவும் சங்கடமாய் இருந்தது. அதைவிட நேசனது அண்ணி தலையில் அடித்துப் புலம்பிய காட்சியை பார்த்திபனால் சகிக்க முடியவில்லை. நெஞ்சை இறுக்கிப் பிழியுமாப் போல் ஓர் உணர்வு. விறைத்துப் போனவனாய் மற்றவர்களுடன் சேர்ந்து சற்றுத் தூரத்தில் போடப் பட்டிருந்த ஒரு கதிரையில் அமர்ந்துகொண்டான்.

ஈமக்கிரியைகள் ஆரம்பமாகின. இறந்தவரின் எட்டு வயதுப் பையனுக்கு மொட்டையடித்து, வேஷ்டி அணிவித்து அவனை கிரியைகள் செய்வதற்கு என அழைத்து வந்தார்கள். *அப்பா...! அப்பா...!* என அந்தச் சிறுவன் புலம்பிய குரல் பார்த்திபனை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. அவனுக்கு அந்த உருவம் தன்மகன் ரூபனாகவே கண்ணுக்குப் புலப்பட்டது. நெஞ்சுக்குள் உறைந்து போயிருந்த உணர்வுத்துளிகள், உருண்டையாய் திரண்டுவந்து தொண்டைக் குழிக்குள் அடைத்துக் கொண்டது. எதுவும் செய்யத் திராணியற்றவனாய் அங்கு நடப்பவற்றை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சவக்கிரியைகள் முடிந்து பெட்டியை மூடும் தறுவாயில் நேசன் ஒரு மூன்று வயது மதிக்கத்தக்க பெண் குழந்தையைத் தூக்கிவந்து பெற்றவனின் கடைசித் தரிசனத்தைக் காட்டியபோது, அங்கு பிரசன்னமாகியிருந்த மனுக்குலமே கண்ணீர் சொரிந்து ஓலமிட்டது. பாாத்திபன் மட்டும், அதற்கு விதிவிலக்கா என்ன... சுக்குநூறாகச் சிதறிய அவன் இதயத்திலிருந்து ஆர்ப்பரித்தெழுந்த உணர்வலைகள் கண்களினூடாக கண்ணீரெனும் கால்வாயாகி ஊற்றெடுக்கத் தொடங்கியது. காற்சட்டைப் பையில் வைத்திருந்த கைக்குட்டையால் அதற்கு அணைபோட முயன்று தோற்றுப் போனான். அவனது மனக் கண்ணில் பத்மாவும் பிள்ளைகளும் அநாதைக் கோலத்தில் வந்து போனார்கள்

உணர்வுகள் செத்து, நடைப் பிணம்போல் அவன் சுடலை வரை போய் தகனக் கிரியைகளில் கலந்துகொண்டான். திரும்பி வரும்பொழுது, வாகனத்தில் இருந்த நண்பர்கள், அவனைக் கிண்டல் செய்தார்கள்.

"என்னடா மச்சான் ஒரேயடியாய் மூட் அவுட்டாய் போயிட்டாய். இவ்வளவு இளகின நெஞ்சக்காரனாய் நீ இருப்பாய் எண்டு எங்களுக்குத் தெரியாமல் போச்சுது"

முகபாவத்தில் எதுவித மாற்றமுமின்றி பேயறைந்தவன் போலிருந்தான் பார்த்திபன். அன்று வீட்டிலும் அவனது மௌனத்தைப் பார்த்து பத்மாவும் பிள்ளைகளும் ஆச்சரியத்துக்குள்ளாகினர். அவனும் தனக்குக் கிடைத்த அனுபவத்தைப் பற்றி அவர்களிடம் மூச்சுவிடவில்லை.

மறுநாள் பொழுது வழமை போல் விடிந்தது. பார்த்திபன் படுக்கையை விட்டு எழும்பியவுடனேயே பத்மாவை அழைத்தான்.

"நான் முகம் கழுவிப்போட்டு வாறன். சுடச்சுட ரீ கொண்டு வாரும்!" வழமையாக அவள் ஊற்றி வைத்திருக்கும் தேநீர் நீண்ட நேரம் கவனிப்பாரற்று ஆறி அலர்ந்து போய்க்கிடக்கும். இன்றைக்கு மட்டும் என்ன சூடாகக் கேட்கிறார். ஏன் இந்த மாற்றம் அவள் மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

மாலையும் அவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. வேலையால் வந்தவுடனேயே அன்பு மனைவியை அழைத்தான்.

"பத்மா! எனக்கு சேர்வாக இருக்குது. சுடச்சுட தேநீர் தந்தீரென்றால் உசாராய் இருக்கும்.

அவன் சொல்லி வாய் மூடு முன் பத்மா தேநீர்க் கோப்பையுடன் வந்து அவனிடம் நீட்டினாள். ஒரு குழந்தையைப் போல் அவன் அதை ஆவலுடன் வாங்கி சிறிது சிறிதாக ரசித்துக் குடிப்பதை மகிழ்வுடன் பார்த்துக்கொண்டிருந்தாள் பத்மா.

**மலரன்னை**

# இனப்பிரச்சினைத் தீர்வு: 'ஒளித்துப் பிடித்து' விளையாட்டல்ல!




தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஸ்கொட்லாந்தின் அதிகாரப்பகிர்வு முறைமையினை ஆராய்வதற்காகப் பிரித்தானியாவுக்கு பயணம் செய்தமை தொடர்பான செய்திகள் குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் புலம்பெயர் தமிழர் மத்தியிலும் இடம்பெற்று வருகின்றன.

2016இல் தீர்வு என்று சொன்னவர்கள் இப்போதுதானா அதிகாரப்பகிர்வு விடயங்களை ஆராய்கிறார்கள் என்று கேலி செய்வோரையும் காண முடிகிறது. பிரித்தானியா ஒற்றையாட்சிமுறைக்குட்பட்ட வகையில் அதிகாரப்பகிர்வினை மேற்கொள்ளும் நாடு எனவும், ஸ்கொட்லாந்தின் அதிகாரப் பகிர்வு முறையினை ஆராய்தல் என்பது தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கும் சிறிலங்காவின் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட வகையில் தீர்வுகாணத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தயாராகிவிட்டார்கள் என்பதன் வெளிப்பாடாகவே இதனைப் பார்க்க வேண்டும் எனக் கருதுவோரும் உண்டு. ஸ்கொட்லாந்து செல்பவர்கள் அங்கு தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தமைக்கான காரணங்கள் தொடரபாகவும் தனிநாடு தொடர்பான வாக்களிப்பு நடைபெற்ற முறை தொடர்பாகவும் அறிந்து வருவது நன்று என்று கூறுவோரும் உண்டு.

பிரித்தானியாவின் அரசியல் கலாச்சாரமும் சிறிலங்காவின் அரசியல் கலாச்சாரமும் முற்றிலும் வேறானவை. இதனால் பிரித்தானியாவின் அதிகாரப் பகிர்வுமுறைகள் சிறிலங்காவுககுப் பொருந்தாது என்று கருத்துக் கொண்டோரும் உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தனது சாணக்கியத்தின் பாற்பட்டே இந்நகர்வைச் செய்கிறார் எனவும், தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் வழங்காவிடின் ஸ்காட்லாந்தைப் போல தனிநாட்டுக்கான மக்கள் வாக்கெடுப்புக் கோரிக்கையினைத் தாமும் முன்வைக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்பதனை சிங்களத் தலைவர்களுக்கு மறைமுகமாக உணர்த்தவே அவர் ஸ்கொட்லாந்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் எனக் சிலாகிப்போரும் உண்டு.

இத்தகையதொரு பின்னணியில் இப் பத்தி எழுப்பும் கேள்வி இதுதான். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினக்குத் தீர்வு காண்பதற்குத் தடையாக இருப்பது எவ்வாறு அதிகாரப்பங்கீடு செய்யலாம் என்பது தொடர்பான அறி. வுப் பற்றாக்குறையா அல்லது தமிழ் மக்களையும் சமத்துவமாக ஒரு தேசமாகவோ அல்லது தேசிய இனமாகவோ அங்கீகரித்து அரசியல்தீர்வு முறைபற்றிப் பேசுவதறகான அரசியல் விருப்பு சிங்கள தேசத்திடம் இல்லாமையா?

அறிவுப்பற்றாக்குறை காரணமாக அரசியல்தீர்வு காண்பதற்குத் தடை இருக்கும் பட்சத்தில் எத்தகைய தீர்வுமுறையினை எட்டலாம் என்பது குறித்து நாடு நாடாகச் சென்று கற்பதும் ஆராய்வதும் பயன் தரலாம். ஆனால் தமிழ் மக்களை ஒரு தேசமாகவோ அல்லது தேசிய இனமாகவோ அங்கீகரித்து அரசியல் தீர்வு காண்பதற்குச் சிங்கள தேசத்தின் தலைவர்கள் தயாராக இல்லாது இருப்பதே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருந்து வருகிறது. இத்தகைய சிங்களத் தலைவர்களிடம் எங்கு சென்று எத்தகைய விடங்களைக் கற்று வந்தாலும் பயன் ஏதும் விளைந்திடுமா?

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதானால் இரண்டு தரப்பும் இணங்கி வரவேண்டும். சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை தேசமாகவோ தேசிய இனமாகவோ அங்கீகரிக்க மாடடார்கள். அவ்வாறு அங்கீகரிப்பதற்கு சிங்கள பௌத்த தேசியவாதம் இடமளிக்காது. எனவே தமிழர் தரப்பு சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேண்டும். கிடைக்கக்கூடியவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதிலிருந்து அடுத்த கட்டம் பற்றிச் சிந்திக்க வேண்டும். "தீவிரமான" கோரிக்கைளை முன்வைத்து சிங்களத் தேசியவாதிகளை உசுப்பேத்தி விடுதல் கூடாது. ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரை காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்கின் நிலை போன்றதொரு நிலை தமிழர்களுக்கு வரக்கூடாது எனக் கருத்து தெரிவிப்போரும் உண்டு.

உண்மையில் இத்தகைய கருத்துக்கள் வெளிப்படுத்தும் செய்தி என்ன? தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைக் கோரினால் சிங்களத் தேசியவாதம் சீற்றமடையும் நிலை தற்போதும் உள்ளது என்பதுதானே! தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பற்றிப் பேசும்போதெல்லாம் சிங்களத் தேசியவாதம் அடைந்த சீற்றம் காரணமாகத்தானே தமிழீழ விடுதலைப் பேராட்டம் தோற்றம் கண்டது. இப்போதும் தமிழ் மக்கள் உரிமைகளைப் பற்றிப் பேசினால் - சமஸ்டி பற்றிப் பேசினால் சிங்களத் தேசியவாதம் சீற்றம் கொள்வதனால் - சிங்கள தேசத்தின் தலைவர்களும் தேசியவாத நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதனால் - தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் விருப்பு சிங்கள தேசத்திடம் இன்னும் ஏற்படவில்லை என்பது தானே பொருள்.


அப்படியானால் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எவ்வாறு? இது இந்நிலையில் எழக்கூடிய முக்கியமானதொரு கேள்வி. இங்கு எதனை நாம் தீர்வு என்று கருதுகிறோம் என்பதுவும் முக்கியமானது. சிங்கள தேசம் எதைத் தருகிறதோ அதனைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஆகிவிடுமா? இவ்வாறு தருவதைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் அமைப்புத் தேவைதானா? தருவதைப் பெறும் வேலையைச ஒரு NGO செய்ய முடியாதா?


தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களுக்குத் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கக்கூடிய வகையிலான சமஸ்டி வடிவில் அமைந்த ஒரு தீர்வு முறையினை நோக்கியே செயற்பட வேண்டும். இதற்காகவே தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். மக்கள் ஆணையை மீறிச் செயற்படுவது அரசியல் அறத்துக்கு முரணானது. மக்களிடம் தேர்தல் காலத்தில் தேர்தல் மேடைகளிலும் தேர்தல் அறிக்கையிலும் சமஸ்டி, சமஸ்டி என்றே கூட்டமைப்புத் தலைவர்கள் முழங்கினார்கள். திம்புக் கோட்பாடுகளை விடத் தமது தேர்தல் அறிக்கை வலுவானது என்று பிரகடனம் செய்தாரகள். அப்போதெல்லாம் உள்ளடக்கம்தான் முக்கியம், பெயரில் என்ன இருக்கிறது என்று சமஸ்டி பற்றிப் பேசாமல் இருக்கவில்லை. இப்போது சமஸ்டி பற்றிப் பேசும போது பெயரில் என்ன இருக்கிறது, உள்ளடக்கம்தான் முக்கியம் எனப் பேசுவது சமஸ்டிமுறையிலான அதிகாரப் பங்கீட்டைக் கைவிடுவதற்கான திட்டத்தின் முதற்படி போலவும் தோன்றுகிறது.

மேலும் தேசிய இனப்பிரசசினைக்கான அரசியல் தீர்வு என்பது ஒளித்துப் பிடித்து விளையாடும் விளையாட்டல்ல. எதனையும் மறைத்து வைத்துச் செய்து பின்னர் மக்கள் மத்தியில் திணிக்கும் விடயமும் அல்ல. மக்களுடனான வெளிப்படையான உரையாடல்கள் அவசியம். இனங்களுக்கிடையிலான உரையாடலகளும் அவசியம். கூட்டமைப்புத் தலைவர்கள் சிங்களத் தலைவரகளுடன் தமக்கு இருக்கும் நல்லுறவின் காரணமாக ஏற்படும் நல்லெண்ணத்தின் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என நம்புவது போலவும் தெரிகிறது. இது செல்வாக்கான ஆட்களைப் பிடித்து காரியம் பார்க்கும் விடயமுமல்ல. சிங்கள ஆட்சியாளர்களின் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியும் என கூட்மைப்புத் தலைவர்கள் நம்புவார்களாயின் அது முதலாளியின் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்து விடமுடியும் என தொழிலாளர் தலைவர்கள் நம்புவதற்கு ஒப்பானதாகவே இருக்கும்.

தமிழ் மக்களின் தேசியத்தை சிங்கள தேசம் அங்கீகரித்து அதன் ஊடாக எட்டப்படுவதே தேசிய இனமுரண்பாட்டுக்கான அரசியல் தீர்வாக அமைய முடியும். தமிழ் மக்களுக்கான இந்த அங்கீகாரத்தைத் தருவதற்கு சிங்கள தேசம் மறுக்கும் வரை தேசிய இனமுரண்பாடு தொடர்கின்றது என்பதே அதன் அர்த்தமாக இருக்க முடியும்!

*கலாநிதி சர்வேந்திரா*





# ஐ.பி.எல்.ஏலம்: முழுவிபரங்கள் அடங்கிய பட்டியல்











9 ஆவது ஐ.பி.எல். போட்டி வருகிற ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் மே 23 ஆம் திகதி வரை இந்தியாவில் நடக்கிறது.

இதில் மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ, டில்லி டேர்டெவில்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், சன்ரைசர்ஸ் ஐதராபாத், புதிய அணிகளான ரைசிங் புனே சூப்பர் ஜெயின்ட்ஸ், குஜராத் லயன்ஸ் (ராஜ் கோட்) ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன.


9 ஆவது ஐ.பி.எல். வீரர்களுக்கான ஏலம் நேற்று பெங்களூரில் நடைபெற்றது.

ஏலத்தில் எடுக்கப்பட்டவர்களின் விபரம்

* மோஹித் சர்மா - ரூ.6.5 கோடி - பஞ்சாப்
* டிம் சவுத்தீ - ரூ.2.5 கோடி - மும்பை இந்தியன்ஸ்
* பிரவீன் குமார் - ரூ.3.5 கோடி - குஜராத்
* ஜான் ஹாஸ்டிங்ஸ் - ரூ.1.3 கோடி - கொல்கத்தா
* தவால் குல்கர்னி - ரூ.2 கோடி - குஜராத்
* மிட்ச் மார்ஷ் - ரூ.4.8 கோடி - புனே
* ஸ்டுடவட் பின்னி - ரூ.2 கோடி - பெங்களூர்
* கொலீன் மன்றோ - ரூ.70 இலட்சம் - கொல்கத்தா
* கிறிஸ் மொரீஸ் - ரூ.7 கோடி - மும்பை இந்தியன்ஸ்
* தினேஷ் கார்த்திக் - ரூ.2.3 கோடி - குஜராத்
* ஜோஸ் பட்லர் - ரூ.3.8 கோடி - மும்பை இந்தியன்ஸ்
* சஞ்சு சாம்சன் - ரூ.4.2 கோடி - டில்லி டேர்டெவில்ஸ்
* டேல் ஸ்டெயின் - ரூ.2.3 கோடி - சன் ரைசர்ஸ் ஐதராபாத்
* யுவராஜ் சிங் - ரூ.7 கோடி - சன்ரைசர்ஸ்
* ஆஷிஸ் நேஹ்ரா - ரூ.5.5 கோடி - சன்ரைசர்ஸ்
* ஷான் வொட்சன் - ரூ.9.5 கோடி - ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூர்
* இஷாந்த் சர்மா - ரூ.3.8 கோடி - புனே சூப்பர் ஜெயின்ட்ஸ்
* டிவைன் ஸ்மித் - ரூ.2.3 கோடி - த குஜராத் லயன்ஸ்
* கெவின் பீட்டர்சன் - ரூ.3.5 கோடி - புனே சூப்பர் ஜெயின்ட்ஸ்

ஏலத்தில் சீண்டப்படாதவர்கள்


* ஷேன் டோவ்ரிச், பத்ரிநாத், உஸ்மான் கவாஜா, ஜெயவர்த்தனே, மைக்கேல் ஹஸ்ஸி, ஜார்ஜ் பெய்லி, ஆம்லா, புஜாரா, ரிலீ ரூசோவ், ஆரோன் ஃபின்ச், மார்டின் குப்தில்.
* ஜாஸன் ஹோல்டர், தில்ஷன், இர்பான் பதான், ரவி போபரா, மனோஜ் திவாரி, கேமரூன் பான்கிராஃப்ட், சாம் பில்லிங்ஸ், பென் டங், வேன் விக், ஜான்சன் சார்ல்ஸ், பிராட் ஹிதீன்.
* அபினவ் முகுந்த், டேரன் பிராவோ, ஆடம் வோக், நிக் மாடிசன், ஜோ பர்ன்ஸ், டேவிட் ஹஸ்சி, ஓஜா, சாமுவேல் பத்ரீ, கேமரூன் பாயிஸ், சுலைமான் பென், ராகுல் சர்மா, மெண்டிஸ், தேவேந்திர பிஷூ, மைக்கேல் பீர், ஜேம்ஸ் பாட்டின்சன், சசித்ரா சேனநாயக, வி.பெருமாள், நாதன் லியோன்.








# ஷேவாக் ருத்திரதாண்டவம் ஜெமினி அரேபியன்ஸ் வெற்றி






சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும் எம்.சி.எல் லீக்கில் ஷேவாக் கலக்கி வருவது அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்களை வைத்து எம்.சி. எல். லீக் என்ற இருபது- 20 போட்டி தொடர்அண்மையில் தொடங்கப்பட்டது.

இதில் ஜாக் கலிஸ், சங்கக்கார, விரேந்திர ஷேவாக், குமார், சங்கக்காரா, பிரைன் லாரா, கில்கிறிஸ்ட், பிரட் லீ உள்ளிட்ட மூத்த வீரர்கள் விளையாடுகின்றனர்.

இந்நிலையில் கில்கிறிஸ்ட் தலைமையிலான சகிட்டரியஸ் ஸ்டிரைக்கர்ஸ் அணியுடன் ஷேவாக் தலைமையிலான ஜெமினி அரேபியன்ஸ் மோதிய ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்து ஆடிய ஜெமினி அரேபியன்ஸ் அணியின் தொடக்க வீரராக ஷேவாக் களமிறங்கினார்.

ஆட்டம் தொடங்கியது முதல் ஷேவாக் தனது அதிரடியை காட்ட தொடங்கினர் இதனால் 5 ஓவர்களில் ஐம்பது ஓட்டங்களை கடந்தது ஜெமினி அணி. ஷேவாக்கை கட்டுப்படுத்த முடியாமல் சகிட்டரியஸ் அணி தடுமாறியது. மேலும் 47 பந்துகளில் சதமடித்து ஷேவாக் சாதனை படைத்தார்.

சிறப்பாக ஆடிய அவர் 63 பந்துகளில் 134 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதில் பத்து பவுண்டரிகளும், பதினொன்று சிக்ஸர்களும் அடங்கும். இறுதியில் ஜெமினி அரேபியன்ஸ் அணி 224 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் இறங்கிய சகிட்டரியஸ் ஸ்டிரைக் கர்ஸ் அணி 212 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக ஷேவாக் அண்மையில் அறிவித்தார். இதனால் அவரது ரசிகர்கள் அதிருப்தி அடைந் தனர். இந்நிலையில் எம்.சி.எல் லீக் உள்ளிட்ட போட்டிகளில் அவர் தனது அதிரடியை தொடர்வது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. (க)

# காலத்தால் அழியாத கானங்கள் ...

**பாடல்:** தமிழுக்கும் அமுதென்று பேர்
**திரைப்படம்:** பஞ்சவர்ணக் கிளி
**பாடியவர்:** பி.சுசிலா
**இசை:** எம்.எஸ். விஸ்வநாதன் - டி.கே. ராமமுர்த்தி
**வரிகள்:** பாரதிதாசன்



தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர்!

இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் உயிருக்கு நேர்

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்
ஆஆஆஆஆஆஆஆஆஆஆ

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச்
சுடர்தந்த தேன் சுடர்தந்த தேன்

தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் உயிருக்கு நேர்

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு
வயிரத்தின் வாள் வயிரத் தின் வாள்

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்
இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்
இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ

தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
உயிருக்கு நேர்.

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
*விமல், சிந்து, சிவகுமார் குடும்பம், பாலகுமார் குடும்பம், சசி, அருணா, ஜீவா*

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## அனங்கம் குறும்படம்-ஓர் விமர்சன நோக்கு




ஈழத்தில் உருவாகி இருக்கும் குறுந் திரைப் படம் "அனஙகம்" சில வகைகளில் புதுமையும் பல வகைகளில் முதன்மையும் பெற்று இன்று ஞாயிற்றுக்கிழமை 5 மணி மற் றும் 5.50 காட்சிகளாக யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சிலோன் தியேட்டரில வெளியாக இருக்கின்றது. இன்றைய முழு நீள தமிழ சினிமாவை ஆக்கிரமித்துள்ள திகில் படங்களின் தாக்கம் இளம் குறும்பட இயக்குநர்களின் சிந்தனை கதவுகளையும் தட்டாமல் இல்லை. அனங்கம் தொட்டிருக்கின்ற களம் புதியது அல்ல, நன்குபார்த்து பழகியதுதான். ஆனால் அங்கு கதை சொல்லப்பட்டிருக்கும் விதத்தில் தான் புதுமை விதைக்கப்பட்டுள்ளது.

"நிழல்கள்" எனும் சிறுகதையின் கருவை கருவாக்கி இயக்குநர் அக்கி அவர்களால் திரைக்கதை வசனம் புனையப்பட்டு அவரின் இயக்கத்தில் வெளியாக இருக்கும் 23 நிமிட குறும்படமே அனங்கம். இன்றைய இளம் இயக்குநர்கள் பலர்தங்கள் படைப்புகளிற்கு ஆங்கிலத்தில் பெயர் சூட்டும் சூழலிலும் "அனங்கம்" எனும் ஒரு தூய தமிழ் வார்த்தையை பலருக்கு அறிமுகம் செய்துள்ளது இந்த தலைப்பு. "அனங்கம்" என்பது உடலற்றவன் அல்லது நிஜமற்ற நிழல், ஓர்மாய தோற்றம் என்று பொருள்படும்.

பேய்கள்,ஆவிகள் என்கின்ற கருத்து நிஜமான ஒரு நிழல் தோற்றமா அல்லது நிழல் போன்ற நிஜதோற்றத்தின் பிரதிபலிப்பா என்பது அவரவர் அனுபவம் மற்றும் சிந்தனை கோட்பாடுகளை பொறுத்தது. இக்குறுந்திரைப் படம் அத்தகைய சிலபல சிந்தனை செய்திகளை சுவாரஷ்யமாக அதிகம் அலட்டிக் கொள்ளாமல் விறுவிறுப்பாக கூறி செல்லும் என்ப தில் ஐயமில்லை. "திரைப்படங்கள் விமர்சனத்திற்கு உட்பட வேண்டியது ஆரோக்கியமானது. இருப்பினும் ஒரு படைப் பாளி தன் படைப்பை தரமான சினிமாவாக வெளியிட வேண்டியது அவசியம்" என்கின் றார் இயக்குநர் அக்கி.

இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தில் சட்டரீதியான பதிவை பெற்றுள்ள "Akiy Productions" இன் முதலாவது படைப்பான அனங்கத்தை சட்டபூர்வமாக வெளியிடுவதற்கு தயாரிப்பாளர் மேற்கொண்ட பிரயத்தனத்தின் வெளிப்பாடாக முதன்முதலாக இலங்கை திரைப்பட தணிக்கைகுழுவிடம் "U"சான்றிதழ் பெற்று வெளியாக இருக்கும் முதல் தமிழ் குறும்படமாக அனங்கம் இன்று அரங்கம் காண இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நவீன திரையரங்க தொழில்நுட்பங்களை செவ்வனவே கொண்டமைந்த "கார்கில்ஸ் சிலோன் தியேட்டரில்" இக் குறும்படத்தை திரையிடுவது எனபது சற்று சவாலானதே. இருந்தாலும் மேலிடத்தை தொடர்பு கொண்டு உரிய அனுமதியை பெறுவதற்கு மட்டுமே 8 மாத காலத்திற்கு மேல்காத்திருந்து பல தடவைகள் கொழு ம்பு சென்று தொடர்ச்சியாக விடுக்கப்பட வேண்டுதல்களின் விளைவால் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் திரையரங்கில் முதன்முதலாக திரையிடப்படும் குறுந்திரைப்படம் என்கின்ற பெருமையை அனங்கம் பெற்றுள்ளது என்று நிம்மதி பெருமூச்சு விடுகின்றார் தயாரிப்பாளர்.

தொழில்நுட்ப ரீதியில் DCP (Digital Cinama Package) எனும் இன்றைய தொழில்நுட்பத் தளத்தில் பதிவேற்றப்பட்டு, 4 K Resolution எனும் துல்லிய ஒலிநயத்துடன் 7.1 DTS Surrounding Sound System உடன் வெளியாக இருக்கும் அனங்கம் ஈழத்து குறும்திரைப்பட இயக்குநர்களுக்கு ஒரு முன்மாதிரியான எடுத்துக் காட்டாகவும், ரசிகர்களுக்கு ஒரு சிறந்த தரத்திலான அனுபவமாகவும் இருக்கும் எனபதில் மாற்றுக் கருத்து இல்லை. அனங்கத்தில் பல புதுமுக நடிகர்களின் மாறுபட்ட நடிப்பை அக்கியின் நேர்த்தியான மற்றும நிபுணத்துவம் வாய்ந்த ஒளிப்பதிவு மெருகேற்ற, அஞ்சலோவின் காட்சி தொகுப்பும் காட்சிகளுக்கு புதியதொரு பரிமாணத்தை வழங்கி விட்டது என கூறி பூரிக்கின்றார் இயக்குநர.

ஒரு பிராந்திய மொழியில் உருவாக்கி இருக்கும் குறும்படம் என்கின்ற போதிலும் இதில் 3D Modelling மற்றும் Animation இன்தேவை இருந்ததை உணர்ந்து பானுபிரியன் இங்குள்ள மட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வசதிகளை அதிகபட்சம் பயன்படுத்தி அதில் வெற்றி கண்டுளளார். இக்குறும்படத்துக்கு மிகப்பெரிய பலம் சேர்ப்பது இப படத்தின் பின்னணி இசை, இசையமைப் பாளர் பிரணவன் கதைக்களத்தோடு கதை சொல்லும் தரமான இசையை தந்ததோடு மட்டுமன்றி Foley Art என அழைக்கப்படும் துல்லிய ஒலி அலைகளை பதிவு செய்யும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ரசிகர்களை கதைக்களத்துடன் ஒன்றிக்க வைத்து விடுவதுதான் இவரது இசையின் தனிச் சிறப்பு.

ஈழத்தில் இன்னும் நன்கு விஸ்தரிக்கப்பட வேண்டிய, பல வேலைவாய்ப்புக்களை வழங்கக்கூடிய அதேநேரம் உள்ளூர் பொருளாதாரத்தின் பணப்பாய்ச்சலை மேம்படுத்தும் திரைத்துறையில் இப்படிப்பட்ட குறும்படங்களின் வரவு வரவேற்கப்பட வேண்டியதே.

**அருள்ஜ°னா அருள்**

# மனம் விட்டுச் சிரியுங்கள்

சிரியுங்கள் உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும். அழுங்கள் நீங்கள் .ஒருவரே அழுவீர்கள் என்றார் ஸ்டீவன்சன் என்ற அறிஞர். நாம் சிரித்தால் மனது சுத்தமாகிறது. இப்படி ஒரு மருந்து இருப்பதை நாம் மறந்து வருகிறோம். சிரிக்கும் போது நமது உடலில் உள்ள அனைத்து இரத்த நாளங்களும் விரிந்து சுருங்குகின்றன. இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. இதனால் உடலில் உள்ள நோயின் தாக்கம் குறைகிறது. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சிரிப்பை ஆராய்ந்த விஞ்ஞானிகள் ஒரு உண்மையைக் கண்டுபிடித்துள்ளார்கள். நாம் சிரிக்கச் சிரிக்க நமது எண்ணங்களுக்கும் மன அலைக்கும் ஏற்றபடி உடலினுள் இயங்கும் செல்களின் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது என்று கண்டுபிடித்துள்ளார்கள். 1993 ஆம் ஆண்டு இவர்கள் ஒரு அறிக்கை வெளிட்டனர். அதில் நமது நரம்புகள் ஒரு இரசாயனத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. அது தான் நரம்புக்கு அடியில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி செல்களில் இயல்பை ஊக்குவிப்பதும் குறைப்பதும் நமது மன அலைக்கு ஏற்ற அவை அதிகமாக உற்பத்தியாக, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும்.

உலகில் மிகச் சிறந்த மருந்து நாம் மனம் விட்டுச் சிரிப்பதே என்று நியூயோர்க் மனவியல் பல்கலைக்கழக பேராசிரியர் ஆதர்ஸ்டோன் தன் ஆய்வின் மூலம் உறுதி செய்துள்ளார். நாம் சிரிக்கும்போது நம் மூக்கினுள் உள்ள திரவத்தில் இம்யூனோ குளோபுலின் ஏ என்ற நோய் எதிர்ப்புப்பொருள் அதிகரித்து பக்றீரியாக்கள், வைரஸ் புற்றுநோய்த் திசுக்கள் உடலுக்குள் செல்லாமல் தடுக்கிறது. இதனால் மனம்விட்டுச் சிரிப்பவர்கள் நீண்ட நாட்கள் ஆரோக்கியதாக வாழலாம் என்கிறார் இவர்.

நம் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை உற்பத்தி செய்யும் வெள்ளை அணுக்களின் இயல்பை சிரிப்பு முடக்கி விடுகிறது என்று சிரிப்பைப் பற்றி ஆராய்ந்த மருந்துவ அறிஞர் வில்லியம்ரை தன்னுடைய ஆய்வின் மூலம் உறுதி செய்துள்ளார். நாம் சிரித்தால் இரத்த அழுத்தம் குறையும். நுரையீரல் நன்கு செயற்படும். என்சீயோலின்ஸ் என்ற ஓமோனை உடலில் சுரக்கச் செய்து தசை வலியை நீக்க உதவுகிறது சிரிப்பு.மேலும் நமது உடலில் பீடமாகச் செயற்படும் மூளையின் வலதுபக்கப் பகுதி சிரிப்பதால் நன்கு செயற்படுகிறது.



உலகில் உள்ள உயிரினங்களில் சிரிக்கத் தெரிந்த உயிரினம் மனிதன் மட்டும்தான். விலங்குகள், பறவைகள் அனைத்தும் தன்னுடைய மகிழ்ச்சியை ஒருவித கூக்குரல்களால்தான் வெளிப்படுத்த முடியும். இப்படி இறைவனால் விசேடமாக வழங்கப்பட்ட வரமான சிரிப்பை நாம் தினம் தினம் தொலைத்து வருகின்றோம். பெர்னாட்ஸா ஒருமுறை உண்மையான அறிவு என்பது நகைச்சுவையான சிரிப்புக்கு பின்னாலேயே செயற்படுகிறது என்று கூறினார்.

நகைப்பும் சுவையும் சேர்ந்த சிரிப்பு அறிவுபூர்வமானது என்பதை மெய்ப்பிக்க அக்பர், பீர்பால் கதைகள், தெனாலிராமன் கதைகள் போன்றவை சான்றாக இருக்கின்றன. இவ்வளவும் ஏன் நகைச்சுவை நடிகர் வடிவேலு, கவுண்டமணி, செந்தில் போன்றோரின் நகைச்சுவை யைப் பார்ப்பதனால் சில நோயாளர்கள் தேறுவதாகவும் அறியப்படுகிறது. இன்றைய அவசர உலகில் யாருக்கும் கூடி மகிழ நேரமில்லை. ஆனால் கிராமப்புறங்களைப்பார்த்தால் ஆலமரம், அரசமரம், குளக்கரை, கோயில் படிக்கட்டுக்கள் என்று பெரியோர், குழந்தைகள் கூடிநின்று சிரித்து விளையாடுவார்கள். ஆனால் இப்போது ரீவி தொடர் என்று ரொம்ப பிஸியாகி விட்டார்கள். யாழ்ப்பாணம் போன்ற பகுதிகள் சொல் லவே வேண்டாம்.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள்வரை காலையில் நித்திரையால் எழுந்தவுடன் காலை 6 மணிக்கு முன்னர் ரியூசன். அப்புறம் நேரம் பறக்கப் போகும் அவதியில் ஒருவாய் சாப்பாடு. பாடசாலை வாகனங்களுக்கான அவசர ஓட்டம் வேறு. நிறைய வேலைகள் என்று பறந்து திரிவார்கள். இவர்கள் எங்கே சிரிப்பது? வேலைக்குச் செல்பவர்கள் இதைவிட மோசம். இரவில் லேற்றாக வீட்டிற்கு வந்ததும் ரீவி பார்த்துக் கொண்டே சாப்பிட்டுவிட்டு படுக்கிறார்கள். எங்கே கதைப்பது? எங்கே சிரிப்பது? இதனால் மனதில் ஒருவித இறுக்கம் ஏற்பட்டு நாட்கள் செல்லச்செல்ல மன அழுத்தநோய் தாக்குகிறது.

இதற்காகவே சில ரீவி நிறுவனங்கள் நகைச்சுவைக்கென சில சனல்களை தனியாக உருவாக்கியுள்ளது. முடியுமானவரை ரீவி பார்ப்பவர்கள் வடிவேல், கவுண்டமணி, செந்தில், நாகேஷ் போன்ற நகைச்சுவை நடிகர்களின் காட்சிகளைப் பார்த்து சிரித்து வாழுங்கள். அதைவிட மிக முக்கியமாக கோயில் திருவிழாக் காலங்களில் பட்டிமன்றங்களை நடத்துங்கள். மாணவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கவேண்டும்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் அலுவலகங்கள், பெரும்பாலான நிறுவனங்கள் தங்களுடைய பணியாளர்களை வேலை எனும் மன அழுத்தத்தில் இருந்து மீட்பதற்காக வெளியூர் சுற்றுலா, விசேட விழாக்களை நடத்துகிறார்கள். நமது நாட்டிலும் அடிக்கடி பிறந்தநாள், திருமணம் , பூப்புனித நீராட்டுவிழா, விசேட விருந்து என நடந்து கொண்டிருந்தாலும் அதிலும் அலுவலக கதைகளே பெரும்பாலும் இடம்பெறும். எங்களுக்குள் ஒளிந்திருக்கும் அழகை வெளிப்படுத்துவது புன்னகையே. மனோதத்துவ வைத்தியர்களும் இன்றைய உலகின் நெருக்கடிகள், கஷ்டங்கள் அனைத்தில் இருந்தும் விடுபட சிரிப்பு ஒன்றுதான் வழி என்று கூறுகின்றனர். உங்களால் சிரிக்க முடியும் என்றால் நல்ல மனத்துடன் இருக்கிறீர் கள் என்று அர்த்தம். சிரியுங்கள் மனம் விட்டுச் சிரியுங்கள். சிரிப்பே நீண்ட ஆயுள் தரும் மிக விலை உயர்ந்த மருந்து.

**வி.பிரணவன்**
**கலட்டி, யாழ்ப்பாணம்**



# ...கள் பேரவை

## ...புதிய அத்தியாயம்

முன்வரைபு வெளிவரவில்லை என்ற அடிப்படையில் இது ஒரு வரலாற்றுச் சாதனை என்று புகழப்படுமளவில் பேரவையின் நிபுணர் குழு பல்வேறு விடயங்களையும் அக்குவேறு ஆணி வேறாக ஆராய்ந்து தீர்வுத் திட்ட முன்வரைபைத் தயாரித்துள்ளது.

நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது.

இதன் ஆரம்பகட்டமாக கடந்த 31.01.2016 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் தீர்வுத்திட்ட முன்வரைபு மக்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த த.வசந்தராஜா ஆகியோரின் இணைத் தலைமையில் தீர்வுத் திட்ட முன்வரைபு வெளியிடப்பட்ட போது, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கூடியிருந்த மக்கள் தொகை பேரவைக்கான மக்களின் பேராதரவைக் காட்டி நின்றது.

ஏற்பாட்டாளர்கள் கூட எதிர்பார்க்காத வகையில் வீரசிங்கம் மண்டபத்தில் திரண்ட மக்கள் கூட்டத்தின் கரகோசம் வானைப் பிளக்க தமிழ்மக்கள் பேரவையின் இணைத் தலைவர் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் அரங்கிற்கு அழைத்து வரப்பட்ட காட்சி முன்பும் நடந்ததில்லை, இன்னொருவருக்கு இனி நடக்கப்போவதுமில்லை என்று கூறக் கூடியது. அந்தளவிற்கு மக்களின் உணர்வுபூர்வமான ஆதரவு அங்கு வெளிப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

தமிழ்மக்கள் பேரவை தீர்வுத்திட்ட முன்வரைபை வெளியிட்ட போது கூடிய தமிழ்மக்களின் உணர்விற்கு அனை வரும் மதிப்பளிக்க வேண்டும் என்பதே பொதுவான கருத்து. இதற்கு மேலாக பேரவையின் தீர்வுத் திட்ட முன்வரைபை தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று அவர்களின் கருத்துக்களையும் உள் வாங்கி நிறைவான தீர்வுத் திட்டத்தை தயாரித்து தமிழ் மக்கள் பேரவை வெளியிடும்போது அதன் பெறுமதி மிக உன்னதமாக இருக்கும் என நம்பலாம்.

**விதுரன்**








# ஆந்தையின் மொழி!

அன்று காலை, அக்பரைப் பார்த்த உடனேயே அவர் அன்று என்ன செய்ய நினைக்கிறார் என்று பீர்பலுக்குத் தெரிந்து விட்டது. குதிரைச் சவாரிகேற்ற உடையை அவர் அணிந்திருந்தார். வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் வேறு எங்கும் பார்க்காமல் ஆயுதங்களின் மீதே மிகவும் கவனமாக இருந்தார்.

அக்பர் அன்று வேட்டையாடத்திட்டமிட்டிருக்கிறார் என்று பீர்பல் புரிந்து கொண்டார். வேட்டையாடுவது அக்பருக்கு மிகவும் பிடித்தப் பொழுதுப் போக்கு! ஆனால் அவர் வேட்டைஆடுவது பீர்பலுக்குப் பிடிக்கவில்லை. அதை எப்படித் தடை செய்வது என்பதைப் பற்றியே அவர் சிந்திப்பார்.

சற்று நேரங்கழித்துத் தன் கவனத்தை ஆயுதங்களிலிருந்து விடுத்து, பீர்பலின் மீது செலுத்திய அக்பர் "நான் இன்று என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?" என்று பீர்பலைப் பார்த்துக் கேட்டதும், "மற்றவர்களின் மனத்திலுள்ளதை அறிந்து கொள்ளும் திறமை எனக்குக் கிடையாது" என்றார் பீர்பல்.

"பொய் சொல்லாதே, பீர்பல்! நான் என்ன செய்யப் போகிறேன் என்று உனக்கு நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே தெரியாதது போல் நடிக்கிறாய். மிதமான குளிர்வீதம் இந்தக் காலைப் பொழுதில்வேட்டைஆடச்சென்றால்மிகவும நன்றாக இருக்கும் என்பது என் கருத்து! உன் கருத்து என்னவோ?" என்றார். "தங்களின் கருத்தே என்னுடைய கருத்தும்!" என்றார் பீர்பல். "அப்படியானால், நீயும் என்னுடன் வேட்டையாட வர வேண்டும்!" என்றார் அக்பர்.

"தங்கள் கட்டளைப் படி நடக்க சித்தமாக இருக்கிறேன்" என்று பணிவுடன் பீரபல் பதிலளித்தார். "பீரபல்! நீ உடனிருந்தால் களைப்பே தெரிவதில்லை. நாவில் உனக்கு இத்தனை வலிமையைக்கொடுத்த இறைவன், உடலிலும் கொடுத்து இருக்கிறாரா என்பதையும் அறிய ஆசைப்படுகிறேன்" என்றார். "ஆகட்டும் பிரபு!" என்றார் பீரபல்.

சற்று நேரத்திற்குப்பின், அக்பர் ஒரு பெரிய படை வீரர்களின் அணியுடன் காட்டை நோக்கிப் புறப்பட்டார். பீரபலும் அக்பருடன் சென்றார். காட்டினுள் நுழைந்தபிறகு, அக்பரின் வீரர்கள் தாரை, தப்பட்டை ஆகியவற்றை உரக்க ஒலித்துக் காடே அதிரச் செய்தனர். அந்த சத்தத்தைக் கேட்டு காட்டு மிருகங்கள் மிரண்டு அங்குமிங்கும் சிதறி ஓட, அக்பரும், மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று, கொன்று குவித்தனர்.

திடீரென ஒரு புலி புதரிலிருந்து சீறிப் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. தாரை, தப்பட்டைகளின் ஒலியினால் எரிச்சல் அடைந்த புலி அவர்கள் மீது பாய முனைந்த போது, அக்பர் தன் கையில் இருந்த ஈட்டியை அதன்மீது எறிய, பயங்கரமாக உறுமிக் கொண்டே புலி மண்ணில் சாய்ந்தது. புலி இறந்து விட்டதால் அக்பர் உற்சாகமுற்றுக் கையை உயர்த்திக் கூச்சலிட, சுற்றியிருந்த வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மாலைக்குள் அக்பர் மற்றொரு புலியையும் வீரத்துடன் வேட்டையாடிக் கொன்றார். பிறகு அனைவரும் சென்று ஓய்வு எடுக்க, அக்பர் தனியாக அமர்ந்து பீர்பலுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

மாலை மங்கிய நேரம்! பகல் முழுவதும் வானில் பறந்து திரிந்து கொண்டிருந்த பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தன. அவற்றின் இனிமையான குரல்களை இருவரும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமர்ந்து இருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மரத்தில் இரு ஆந்தைகள் பறந்து வந்து உட்கார்ந்து ஒலியெழுப்பத் தொடங்கின.

அவற்றின் ஒலியை வெகு நேரம் உன்னிப்பாகக் கவனித்த அக்பர், "இந்த ஆந்தைகளின் மொழி நமக்குப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றார் பீர்பல். "பிரபு! அவற்றின் மொழி எனக்குத் தெரியும்!" என்றார் பீர்பல்.

"அப்படியா? பிறகு ஏன் சும்மாயிருக்கிறாய்? அவை என்ன பேசுகின்றன என்று உடனே சொல்!" என்றார் அக்பர். "பிரபு! அவையிரண்டில் ஒன்று மணப்பெண்ணின் தந்தை! மற்றொன்று பிள்ளையின் தந்தை! அவை வரதட்சிணையைப் பற்றி விவாதம் செய்து கொண்டு இருக்கின்றன. பிள்ளையின் தந்தை மிருகங்களே இல்லாத நாற்பது காடுகள் சீர்வரிசையாகத் தர வேண்டும் எனக் கேட்கிறது. பெண்ணின் தந்தை தன்னால் இருபது காடுகள் மட்டுமே தரமுடியும் என்று சொல்கிறது," என்றார் பீர்பல்.

தொடர்ந்து, "பெண்ணின் தந்தையான அந்த ஆந்தை மேலும் தனக்கு ஆறு வாரகாலம் அவகாசம் தந்தால், மீதி இருபது காடுகளையும் ஏற்பாடு செய்ய முடியும் என்கிறது," என்றார். "இது என்ன உளறல்? மிருகங்களேஇல்லாத காடுகள் அதற்கு எங்கிருந்து கிடைக்கும்? இருபது காடுகள் தருவதாக அது எப்படி ஒப்புக் கொண்டது?" என்றார் அக்பர்.


"அது உளறவில்லை! சரியாகத்தான் சொல்கிறது. நீங்கள் இருக்கும் தைரியத்தில் தான் அது அப்படிப் பேசுகிறது!" என்றார் பீர்பல். "சரிதான்! ஆந்தைதான் உளறுகிறது என்று நினைத்தால் நீயும் உளறுகிறாயே!" என்றார் அக்பர். "நான் உளறவில்லை, பிரபு! ஆந்தையும் உளறவில்லை! நீங்கள் ஒருமுறை வேட்டையாட வந்தாலே, காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தும் கொல்லப் பட்டு விடுகிறது.

அதுபோல் இதுவரை நீங்கள் இருபது காடுகளை மிருகங்களேயில்லாமல் செய்து விட்டீர்கள். இன்னும் அடுத்த ஆறு வாரத்தில் நீங்கள் இருபது முறை வேட்டையாடினால், மீதியுள்ள இருபது காடுகளும் காலியாகி விடும்! அந்த தைரியத்தில்தான் அந்த ஆந்தை அவ்வாறு கூறுகிறது!" என்றார் பீர்பல்.


பளீரென முகத்தில் அறைந்ததுபோல் இருந்த பீர்பலின் விளக்கம் அக்பரை மௌனமாக்கி விட்டது. தன் செய்கைக்கு முதன்முதலாக வெட்கித் தலை குனிந்த அக்பர், "பீர்பல்! என் கண்களை நீ இன்று திறந்து விட்டாய்! என்னுடைய மகிழ்ச்சிக்காக காட்டில் வாழும் மிருகங்களைக் கொன்று குவிப்பது ஈனமான செயல் என்று புரிந்து கொண்டேன். இன்றுமுதல் வேட்டையாடுவதை நிறுத்தி விடப் போகிறேன்" என்றார் அக்பர்.

பீர்பலுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. இத்தனை எளிதாக அக்பரின் மனம் மாறும் என்று அவர் நினைக்கவில்லை. "பீர்பல்! என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான் இப்போது சொன்னதைக் கேட்டு அந்த ஆந்தை என்ன சொல்கிறது என்று எனக்குச் சொல்!" என்றார் அக்பர்.

"சக்கரவர்த்தியின் மனம் மாறிவிட்டதால், இனி என்னால் மிருகங்கள்அற்றக் காடுகளை வரதட்சிணையாக அளிக்க முடியாது என்று அது கூறுகிறது!" என்று பீர்பல் கூறவும், அக்பர் பலமாகச் சிரித்தார்.



# கோள்களின் அணிவகுப்பு




**கோ**ள்களின் அபூர்வ அணிவகுப்பு கடந்த ஜனவரிய கடைசிப் பாகத்திலிருந்து எதிர்வரும் பெப்ரவரி 20வரை.

விண்வெளியில் நட்சத்திரங்களையும், கோள்களையும் பார்த்து ரசிப்பவர்களுக்கு அடுத்த மாதம் ஒரு அபூர்வ விருந்து காத்திருக்கிறது குறிப்பிட்ட கோள்கள் அதிகாலை வானில் வரிசையாக ஒரே நேரத்தில், சாதாரணமாக, தொலைநோக்கி இல்லாமல் பார்ப்பவர்களுக்குக் கூடத் தெரியும்.

புதன், வெள்ளி, செவ்வாய், சனி மற்றும் குரு ஆகிய கிரகங்கள் ( கோள்கள்) பத்தாண்டுகளுக்கும் மேலான காலத்தில் இது போல வரிசையாக அணிவகுத்து உங்கள் கண்களுக்குப் புலப்படப் போகின்றன.

இந்தக் காட்சி இம்மாதம் (பிப்ரவரி) 20 ஆம் திகதி வரை தெரியும்.

ஆனால், புதன் கிரகம் அந்தக் காலகட்டத்தின் இறுதியில் சற்று மங்கலாகத் தெரியும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

பொழுது புலர்வதற்கு 45 நிமிடங்களுக்கு முன் பார்க்கத் தொடங்குமாறு விண்வெளி ரசிகர்களுக்கு அவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.


இந்தக் காட்சி, இந்த ஐந்து கோள்களும், அவைகளின் சுற்றுவட்டப் பாதையில் சூரியனின் தோற்றப்பாதை என்றறியப்படும் திசையில் அணிவகுப்பதால் சாத்தியமாகிறது.

நடைமுறையில், இது பூமியின் சுற்றுப்பாதைக்கு அருகே இந்தக் கோள்கள் ஒரே வரிசையில் அணிவகுப்பதைத்தான் குறிக்கிறது.

இதே போன்றதொரு அணிவகுப்பு வரும் ஆகஸ்டு 13லிருந்து 19வரை நடக்கும்.

அந்த சமயத்தில் இந்த அணிவகுப்பு அந்தி சாயும் நேரத்தில் நடைபெறும். அப்போது பூமியின் தென்பாதியில் வசிக்கும் மக்கள் இதை நன்றாகப் பார்க்க முடியும்.

கடந்த முறை இதே போன்றதொரு அணிவகுப்பு நடந்தது. அது டிசம்பர் 2004லிருந்து ஜனவரி 2005 வரைதான் நிகழ்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்களுக்கு இம்மாதம், நல்ல சந்தர்ப்பமாக அமையும்.



# facebook



இன்றோடு இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டது , அன்புவும் வாசுகியும் சென்னையில் குடியேறி மணமான மறு மாதமே கிராமத்து பாற்பண்ணை நிர்வாக வேலையை விட வைத்து பட்டணம் கூட்டி வந்து விட்டாள் வாசுகி.

சிறு வயதில் தந்தையை இழந்து தாயே உலகமென வளர்ந்தவன் அன்பு.

"அத்தைய கூட்டி போய் பாத்துகிடமுடியாது. பட்டணம் அவங்களுக்கு ஒத்து வராது" என ஒரே பேச்சில் நின்று வென்று விட்டாள் வாசுகி.

கட்டியவளுக்கு தெரியாமல் பெத்தவளுக்கு அவ்வப்போது பணம் அனுப்புவதும் போய் பார்ப்பதுமாய் இருந்தான்.

அன்பு ... அம்மா மிகவும் முடியாமல் இருப்பதாக கேள்விபட்டும் கையறு நிலையில் தவித்திருந் தான்... டிங் டிங் .... (காலிங் பெல்) வாங்க வாங்க

மச்சான் ... வாசுகி உங் கண்ணன் சேது வந்தி ருக்காரு பாரு ...

வா அண்ணே எப்பாடி இருக்க அண்ணி அம்மா அப்பா எல்லாம் எப்டி இருக்காங்க .. மாத்திர எல்லாம் ஒழுங்கா சாப்டு றாங்களா ரெண்டுக்கும் சுகர் எல்லாம் வேற இருக்குல்ல ... "

அடுக்கினாள் விசாரிப்பு களை .... எல்லாம் நல்லா இருக்காங்க மா - சேது பதிலுரைத்தான்.

"மாப்பிள்ளை உங்க கிட்ட கொஞ்சம் பேசனும் . ஊர்ல வருமானம் போதல

நானும் வனிதாவும் இங்கயே வந்தறலாம்னு இருக்கோம். ஒரு வேலை பார்த்து சொல்லுங்களேன்" -

என்ன அண்ணே நீயும் அண்ணி மட்டும்னு சொல்ற அப்ப அப்பாவும் அம்மாவும சற்று கோபமாகவே கேட்டாள் வாசுகி ...

இப்பவே எப்டி மா கூட்டி வர முதல்ல நாங்க வந்து எல்லாம் அமைஞ்சதுகப் புறம் ரெண்டு மூணு மாசம் போகட்டும் கூட்டி வந்துக்குறேன். அதுவரை வயசானதுக ரெண்டும் அநாதையா கிடக்கனுமா "

சண்டை வலுக்க ஆரம்பித்தது... இடையில் அன்பு நுழைந்து ... சரி விடு வாசுகி... விடுங்க மச்சான் வேணும்னா அத்தையை யும் மாமாவையும் இங்க வந்து விட்ருங்க ... அப்றமா நீங்க அழைச்சுகோங்க என்றான்...

ஒரு நிமிடம் குறுகிப் போனாள் வாசுகி... ஏன் மாப்பிள்ளை உங்கம்மா வுக்கே இங்க தங்க என் தங்கச்சி முழுசாவே இடம் தரல.. நான் கொஞ்ச நாள்னு சொன்னா மட்டும் என்கிட்ட சண்டை போடுறா இவளுக்காக போய் பேசுறீங்களே ... சுளீரென அடித்தது போல் இருந்தது வாசுகிக்கு ...

அன்புவின் காலில் விழுந்து அழுதாள். நான் அத்தைய கவனிக்காம அநாதையா அங்க விட்ட எனக்காக போய், எங்கம்மா அப்பா கூடவச்சு பாத்து கலாம்னு சொன்னபோதே நான் திருந்திட்டேன்ங்க ...

எங்கண்ணன் வார்த்தை ஒவ்வொன்னும் சரி தான எனக்கென்ன தகுதியிருக்கு அவர திட்ட ... புரிந்தவளாய் உணர்ந்தவளாய் அழத் தொடங்கினாள்...

மெதுவாய் அவளை தூக்கி அணைத்தவாறு தேற்றினான் அன்பு.

" சரிம்மா அதான் புரிஞ்சுகிட்டேயே விடு"

"நாம உடனே ஊருக்கு கிளம்பலாங்க அத்தைய கூட்டி வர " கண்ணீர் ததும்ப அன்பிடம் கூறினாள்...

கூடிய சீக்கிரம் ஒரு வேலைய பாருங்க குடும்பத்தோட நானும் இங்க வந்திடுறேன் மாப்ள..

என்று சொல்லி சேது,

வாசுகி காணாத போது அன்பை நோக்கி கண்ணடித்தவாறே புன்னகையுடன் வெளியேற .தன்தாயின் இறுதி நாட்களில் அவள் தனையனோடு சேர்த்து வைத்த தன் மச்சின னுக்கு...கண்களில் நீர் தளு தளுக்க கண்ணீரால் நன்றி கூறினான் அன்பு...

ஆண்டாள் சரவணன் ....

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 625

Search for people, places and things Nagendram Home


கரன் ராஜேஸ்கரன்




ஸ்ரீதிவ்வியன்





சுபத்திரா பெர்னாண்டோ



கோபி கிருஸ்ணா




சாம்பவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




## உங்கள் நிறையும் நீரிழிவும்

நீரிழிவு மற்றும் இருதயநோய்கள் ஏற்படும் சாத்தியத்தைக் குறைக்க ஆரோக்கியமான ஒருவர் தனது உடல் நிறையை எவ்வாறுபேணவேண்டும் என்பதைக் கீழ்க்காணும் அட்டவணைகாட்டுகின்றது

| உயரம் | பொருத்தமானநிறை | உயரம் | பொருத்தமானநிறை |
|---|---|---|---|
| 4'9" | 39-40 கிலோ | 5'6" | 52-65 கிலோ |
| 4'10" | 40-50 கிலோ | 5'7" | 53-67 கிலோ |
| 4'11" | 42-52 கிலோ | 5'8" | 55-69 கிலோ |
| 5'0" | 43-53 கிலோ | 5'9" | 57-71 கிலோ |
| 5'1" | 45-55 கிலோ | 5'10" | 59-73 கிலோ |
| 5'2" | 46-57 கிலோ | 5'11" | 60-75 கிலோ |
| 5'3" | 48-59 கிலோ | 6'0" | 62-77 கிலோ |
| 5'4" | 49-61 கிலோ | 6'1". | 64-79 கிலோ |
| 5'5" | 51-63 கிலோ | 6'2" | 66-81 கிலோ |

வலிப்பானது மூளையின் நரம்புக் கலங்களில் சடுதியாக ஒரேநேரத்தில் ஏற்படும் அதிகரித்த இயக்கத்தின் வெளிப்பாடு ஆகும். வலிப்புவியாதியினால் அவதியுறுபவருக்கு இலகுவில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வலிப்புக்கள் வருவது மட்டுமல்லாது இதன் தாக்கத்தினால் ஞாபகசக்தியின்மை, நுண்ணறிவுகுன்றுதல், உளவியல் மற்றும் மனஅழுத்தம் போன்றவற்றினாலும் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

**வலிப்புவருவதற்குரிய காரணிகள் எவை?**

நிறமூர்த்தத்தில் ஏற்படும் குறைபாடுகள் (அரிதானது), மூளையில் ஏற்படும் காயம் அல்லது வடு, காரணிகள் அறியப்படாமை (பொதுவானது),

**முதன்முறையாக ஒருவருக்கு வலிப்பு வந்திருந்தால் அவரை எவ்வாறு அணுகி ஆராய வேண்டும்?**

1) அந்த வலிப்புவர ஏதுவாக இருக்கக் கூடிய காரணிகள் பற்றி ஆராய வேண்டும். காய்ச்சல் (குறிப்பாக சிறு பிள்ளைகளிற்கு 1-6 வயதுவரை), நித்திரையின்மை, உரிய நேரத்தில் உணவு உண்ணாமை,

2) வலிப்பு எவ்வாறு தொடங்கி – எவ்வாறு முடி கின்றது என்பது பற்றி ஆராயவேண்டும்.

a) ஆரம்பவலிப்பின் அறிகுறிகள் (aura)
- கைகள் / கால்கள் இறுக்கமடைதல்
- தலை / கண்கள் ஒருதிசையை நோக்கித் திரும்பிச் செல்லுதல்
- கைகள் / கால்கள் உதறுதல்
- வெறுமனே ஓர் இடத்தை பார்த்தல்
- வேறுபட்டு கதைத்தல்
- செய்யும் செயல்களில் தடைஏற்படுதல்
- வாயைச்சப்புதல்
- கைகளால் ஆடைகளைப் பிசைதல்
- மூக்கைத் துடைத்தல்
- காரணமின்றிநடந்துதிரிதல்

b) வலிப்பின் போதுகவனிக்கவேண்டியவைகள்
- அறிவிழத்தல்
- கைகள் / கால்கள் இரண்டும் உதறல் எடுத்தல்

c) வலிப்பின் பின்னால் இடம்பெறும் நிகழ்வுகள் பற்றி அறிதல்
- மயக்கமடைந்தநிலையில் இருத்தல்
- வாந்திஎடுத்தல்
- தலையிடி
- கதைப்பதில் தடுமாற்றம் / பேச்சு அற்று இருத்தல்
- உடலின் ஒருபகுதிசெயலற்று இருத்தல்

**சிறுவயதில் குறிப்பாக 1-6 வயதினருக்கு வரும் காய்ச்சலுடனான வலிப்பு பாரதுரமானதா?**

இல்லை.இதைக் காய்ச்சல் வலிப்பு என்றே கூறுவோம். இது அநேகமாக 6 வயதிற்கு பின் ஏற்படமாட்டாது. உடலின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இதனைமுழுமையாகக் கட்டுப்படுத்தலாம்.

**வலிப்புநோயினால் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்களது உடல் அமைப்பில் காணப்படும் நோயின் அறிகுறிகள் எவை?**

1. தலையின் சுற்றளவு சிறிதாக இருக்கலாம்.
2. தோலின் கீழ் கட்டிகள் தென்படலாம் அல்லது தோல் வெளிறிக் காணப்படும்.
3. கண்கள் / காதுகளில் குறைபாடுகள் இருக்கலாம்.
4. முகத்தின் அமைப்பில் மாற்றம் இருக்கலாம்

**வைத்தியருக்கு நோய் பற்றி அறிவிக்க நோயாளரின் பாதுகாவலரான நீங்கள் எவ்வாறு உதவி புரிய வேண்டும்?**

1. கேள்வி இல.3 இன் விடயங்களை கவனமாக உற்றுநோக்கி வைத்தியரிடம் தெரிவிக்கலாம்.

2. வலிப்பை அதன் ஆரம்ப நிகழ்வில் இருந்து முடியும் வரை தொலைபேசி காணொலியில் பதிந்துவைத்தியரிடம் காட்டலாம்.

3. வலிப்புநோய் அடிக்கடி வருமாயின் உடனடியாக மருத்துவ உதவிக்காக அருகில் உள்ள வைத்திய சாலைக்கு எடுத்துவரலாம்.

**சிறு பிள்ளைகளிற்கு வலிப்பு ஏற்படின் எவ்வகையான முக்கிய தகவல்களை வைத்தியரிடம் தெரிவிக்கவேண்டும்?**

1. கர்ப்ப காலத்தில் தாய்க்கு ஏற்பட்டநோய்கள்
2. தலையில் அடிபடுதலும் அதன் தொடர்ச்சி யானதுமானவிடயங்கள்
- மயக்கமடைதல்
- வாந்தி எடுத்தல்
- வலிப்பு
- ஞாபகசக்தியின்மை

3) குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களின் வலிப்புநோய் பற்றிய தகவல்கள்.

4) குழந்தைகளின் வளர்ச்சிப் படிகளில் காணப்படும் ஏதாவதுபின்னடைவுகள்.

5) தோலில் ஏற்படும் மாற்றங்கள் (தோலில் கட்டிகள் ஏற்படுதல் / தோலின் நிறம் குன்றுதல்)

**வலிப்பு நோயாளிக்கு அடிக்கடி வலிப்பு வருமாயின் என்ன காரணங்களை இனங்காணுதல் முக்கியமானது?**

1. முன்னர் இனங்காணப் பட்டவலிப்பு நோயின் வகை தவறானதாக இருக்கலாம்.

2. இதுஒருபோலியானவலிப்பாக இருக்கலாம்.

3. உடல் அனுசேபத்துடன் தொடர்பான நோயாகவும் இருக்கலாம்

4. வலிப்பு மாத்திரைகள் செயலிழந்திருக்கலாம்.

5. தகாத மருந்து வழங்கப்பட்டிருக்கலாம்.

**எனது பிள்ளைகளுக்கு காக்கை வலிப்பு இருந்தால் என்ன செய்வது?**

காக்கை வலிப்பிற்கு முன்னர் குறிப்பிடப்பட்ட குணங்குறிகள் இருக்குமாயின் உடனடியாக தகுந்த வைத்தியரிடம் ஆலோசனை பெறுதல் இன்றியமையாதது.

**ஒருவருக்கு வலிப்பு ஏற்பட்டு விட்டால் எவ்வாறு அவருக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்?**

1. வலிப்பு வந்தமைக்கான காரணிகளை ஆராய வேண்டும்.

2.வலிப்பான்து 30 நிமிடங்கள் வரைநீடிக்குமாயின் வலிப்பிற்கான மருந்துகளை உபயோகிக்க வேண்டி ஏற்படலாம்.

3.தலைப்படம், தலைப்பட்டி என்பன தேவைப்படின் எடுக்க வேண்டி ஏற்படும்.

**ஒருமுறை ஏற்பட்ட வலிப்பு மீண்டும் ஏற்படுமா" என்பதை எவ்வாறு இனங்காணலாம்?**

இதன் போது சோதிக்கப்படும் தலைப்பட்டி அல்லது தலைப்படம் என்பவை சாதாரணமானவையாயின் அந்நோயாளிக்கு மீண்டும் வலிப்பு ஏற்படாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் ஏறத்தாழ 70% ஆக இருக்கலாம்.

(தொடரும்)